



# தமிழரசு

மலர்:4 1-2-1974 இதழ்:15


## புதுக்கோட்டை மாவட்டச் சிறப்பிதழ்

புதுக்கோட்டைப் பகுதி மக்களின் இருபத்தைந்து ஆண்டுக் கோரிக்கை நிறைவேறும் வகையில், தமிழகத்தின் 15-வது மாவட்டமாகப் புதுக் கோட்டை மாவட்டம் மலர்கிறது!

புதிய மாவட்ட மக்களின் மகிழ்ச்சியில் நாமும் பங்கு கொள்கிறோம்; அவர்களுக்கு நமது நல்வாழ்த்துக்கள்!

# பொங்கல் வாழிய!

பொங்கல் திருநாள் இன்று! பொங்கும் இன்பம் எங்கும் பரவுக என்று கூறும் திருநாள் இன்று! உழவர் பெருமக்காள்! உழைக்கும் உத்தமர்களே! தோள் வீரம் காட்டித் தொண்டு தொண்டாய்ச் செயல் புரியும் தொழிலாளர் வர்க்கமே! என் இனிய உடன் பிறப்புக்களே! பேரன்புகொண்ட பெரியோர்களே! என் பெற்ற தாய்மாரே! மாணவ நல் இளஞ்சிங்கங்காள், எல்லோர்க்கும் என் பொங்கல் வாழ்த்துக்கள்!

தைமகளே இந்நாளில் திருநாள் மிக கொண்டாடுவதால் கண்ட பயனை எண்ணி, இன்புறுகின்றேன். கரும்பு, அவையும் இனிக்கிறது, அந்தச் சுவை கிடைக்க எத்தனை முயற்சி வேண்டியிருக்கிறது என்பதையும் விளக்குகிறது. அந்தச் சுவைத் தரும் போது கடப்பதில்லையே இத்தினத்தில் சிறந்து நிற்கும் கதிர்களைக் காண்கிறோம். எதிலும் இத்தகைய சிறு தடைகள் உண்டு. ரோஜாவைப் பறித்திடும் போது முள் குத்தாதவர் உண்டோ? இல்லையே!

நீச்சடிக்க வேண்டுமே என அடுக்கனைத் தினைத்தால் அதிகாலையின் அழகின் நிலைக்கும் அழகு நீத்து வெளிப்படுமோ? பனியை அஞ்சி விடுவேனோ எனத் தெரிந்தும் தானே பாட்டாளிமகன், சுரங்கம் தோண்டிப் பொன் எடுப்பதிலும், நிலக்கரி வெட்டுவதிலும் ஈடுபடுகிறான்?

இவைகளெல்லாம் நெஞ்சில் நிறுத்தித் தான் இன்னையத் தமிழக அரசு, மக்கட் பணி ஆற்றுவதில் பேரார்வம் காட்டுகிறது.

நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் — ஏழைகளை உச்ச வரம்பு — வட்டிக் கொடுமைகளை விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியேற்ற மனை சொந்தமாக்கச் சட்டம் — உழுபவனுக்கே நிலம் என்று உத்தமர் காந்தியடிகளின் உரையைச் செயல் படுத்தச் சட்டம் — வீட்டுமனை, நிலப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் — நேர் பட்டோர் பெறுமனைகள் இதுவரை கண்டதில்லை! எனவே இந்தப் பொங்கல் போல் இன்றது மட்டுமல்ல, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு உதவு நாணயமாக வழிகாட்டியாக அமைய

நாடு நடத்திக் காட்டியுள்ள பசுமைப் புரட்சி, வேளாண்மைத் துறையில்! "இல்லை! உணவு இல்லையே எனும் நிலை இல்லையே!" என்று தன்னிறைவு பெற்ற நாடாகத் தமிழ்நாடு திகழ்வதற்குத் தமிழக அரசு, விவசாயப் பெருங்குடி மக்களும், வேளாண்மைத் துறையினரும் எடுத்த முயற்சிகளுக் கெல்லாம் — நல்லவர் உள்ளங்களில் இருந்து வாழ்த்து கிடைத்துக் கொண்டே இருக்கிறது.

இது, தொழிலாளர் நல அரசு என்பதற்கேற்ப எத்தனையோ திட்டங்கள். மூடப்பட்ட ஆலைகளைத் திறந்து நடத்தும் ஆட்சித்தலைக் காட்டுகின்றோம். விலைவுப்பட்ட தொழிலாளர் இன்று அமைதியே வாழ்ந்திடச் செய்கின்றோம். அமைப்பே வேலையின்றி வாழும் தொழிலாளர்க்கு ஊக்குவிப்பு நோக்கி மேல் நல உதவி அளித்தது தமிழ்நாடு அரசு தான்! கண்கலங்கிய



கைத்தறி நெசவாளர் வாட்டம் போக்கிட, பாதிக்கப்பட்ட நெசவாளர்க்கு உதவியாக ஒரு கோடி ரூபாய்க் கடனுதவி! அரசுப் போக்குவரத்துத் துறையில் சமத்துவம், செயல்படும் வண்ணம், தொழிலாளர்க்கு நிர்வாகத்தில் பொறுப்பும், தொழிலாளரும் பங்கும் அளிக்கும் திட்டத்தை முதல் பரிசோதித்தது தமிழ்நாடு அரசு தானே! அரசாங்க ஊழியர்க்கு, ஓய்வு பெறும் போது 'ஓய்வூதியம்' கிடைப்பது போல், அரசுப் போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் தரப்படுமென்று அறிவித்து பெருந்துப் போக்கு வரத்துத் தொழிலாளர்-கள் 35000/- பேர் பயனடைய வழி வகுத்து, அவர்க்கும் வழி காட்டியிருப்பதும் தமிழக அரசு தானே! அதனால் இது தொழிலாளர் நல அரசு தானே!

அரசாங்க ஊழியர்க்கோ, அவர்கள் கேட்ட ஊதிய உயர்வு - சலுகைகள் மட்டுமா? ஆங்கிலேயர் காலத்தில் இருந்து நடைமுறையில் இருந்த

முதல்வர் கலைஞர்

நகரின் தெருப் பெட்டிக் கடை முதல்
செய்யப்பட்டது இப்போது தானே!
அசிங்கச் சுவர் அத்தனையும்
போக்கி, இவர்கள் மக்களுக்குக் கொடுக்கும்
அழுக்குப் படிந்ததும் இந்த அழகு இல்லையா?
சென்னை, கோவை, மதுரை, சேலம், நெல்லை,
திருச்சி, கடலூர், இப்படி எல்லாம் ஊருக்கு
மாறுதல் கிட்டத்தான் வேண்டுமென்போர்
— இ மாறுதலை கட்டுத் தலைவனை
மனம் படைத்த இந்த பெண்கள், பாரம்
— பரிசுகள்.
பந்து விளையாடிய "பம்பாய், டெல்லி" —
போல் மாநகரங்களில்; பாதி
மனத்தில் நினைத்த சேவை மனப் பிள்ளைக்
கூறி ஓடுக!
மாலை, உழைப்பு — மனிதன், மனிதன்
இருப்பதா? சேற்று! இல்லை, ஆதித்
தாத்தா இருந்த கட்டம், இதில்
மாமா பாதிக்கப்படாமல் இருக்கிறதே
இருக்கும் வாசல் நிற்கிறதா! வீட்டுக்
கோலம் போட, இப்படித்தான் நிறைய
ஊர் முற்றங்களில் கண்டெடுத்த
பெண்மணி!
சமுதாயத்தின் அழுத்தம் மக்கள்,
நாட்டுத் தலைவர், பெண்கள் இயக்கம்,
சமுதாயம், இவர் பேசும்

இத்தனையுடன் கவனிக்கப் படுகிறது
நம்முள் ஆழமாய் உணர்வு, இலக்கிய
உணர்வு, மனதின் நடுவில் கூப்பாடு
போடுகின்றது இன்றைய
கதை! இதைச் செய்ய படித்தும்
உன்னை விரிவாக் கண்ட கவிதைப்
புத்தகங்களை, புதிய புத்தகம்
படைத்திடுவோம். பெண்மையைத் தழுவி
விடுபட்டுச் சட்டத்தைக் கடந்து
பாடுபட்டுத் தீர்க்கும் மனதை
நிறுத்தி நின்னை — பழைய கோட்டை
உடைப்பது காப்பு! கொண்டாடுவோர்
உண்மை வரவேற்றுச் சென்னையிலே



நிறைவாயும் எதிர்பார்க்கிறோம். தமிழ், தமிழ் இலக்கியம், தமிழர் வரலாறு, தமிழ் மரபு, காக்கப்பட வேண்டுமென்ற கொள்கை தீவிரமாகத் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவு பெற்று வருகிறது.

மேலும் உழைக்கப் பொங்கல் நாளில் உறுதி கொள்வோம். காந்தி யடிகளைப் போல் கொள்கை வழியில் கடமை செய்வோம்! அண்ணா போல் எவரையும் தாங்கும் இதயம் பெறுவோம்! பெரியார் போல் எதிர்ப்புக்கிடையே யும் எதிர்த்து நம் கொள்கைகளைத் தமிழ்த் தரணியில் பரப்புவோம்!

கலப்பையால் கீறுகின்ற உழவின் என்று நிலம் கேட்டுப் பதிலும் மாறுக மாணிக்கமெல்லாம் தந்து உழவருக்கு வழங்குகிறது.

அன்னைக் கண்ட துன்பமாக வெட்டுகின்றே என்று கேட்டு, கத்திப் பாய்வதில்லை. அப்போது வழங்கும் கண்ணீரையும் அவை நீராகவே ஏற்கிறது.

பொறுமையைப் போற்றிக் கொண்டாடும் சான்றோர்களே, என்று பொங்கல் பானை, பொங்கி வழிந்து, அதற்கு மாறாகச் சர்க்கரைப் பொங்கலைப் பொங்கித் தருகிறது.


ஆனால், சில நேரங்களில் இடையூறு செய்கிறதே என்று உழவர்கள், தன் கடமையைச் செய்ய மறுப்பதில்லை. மறுப்பதுமில்லை.

இயற்கையின் இந்தச் செயல்கள், இந்தப் பொங்கல் நாளில் நமக்கு, அறிவுறுத்தட்டும். நம்பிக்கை வழங்கட்டும். நடப்போம், நம் பாதையில் உறுதியுடன்! உழைப்போம், மக்களுக்காக ஓய்வின்றி!

வாழ்க பொங்கல்!
வளர்க நல்லறம்!

வணக்கம்.

14-1-1974 ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரை.



# அண்ணா போக்குவரத்துக் கழகம்

சனவரித் திங்கள் 11-ஆம் நாள் காலை வேளை. சேலம் மாநகர் அன்றாட நிகழ்ச்சிகளிலிருந்து சிறிது மாறுபட்டுப் புதுப் பொலிவுடன் காட்சி தந்து கொண்டிருந்தது. அன்று அந் நகரத்து மக்களிடையே இனங் காண முடியாத ஒரு சுறுசுறுப்பும் பரபரப்பும் காணப்பட்டது. இராமகிருட்டிணா சாலையை அடைகிறோம். சாலை விழாக் கோலம் பூண்டு எழிலுடன் விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஆம்! அன்றுதான் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் நிறுவப் பெற்றுள்ள ''அண்ணா போக்குவரத்துக் கழக''த்தினை முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் அண்ணாவின் சீரிய கொள்கைக்கு வலிவூட்டுகின்ற வகையில் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்த அரசு, படிப்படியாகப் பேருந்துகளை நாட்டுடைமையாக்கிக் கொண்டிருக்கிறது. சிறந்த முறையில் நிருவாகம் நடைபெறவும், சிறப்பான வகையில் மக்களுக்குப் பணிவிடை செய்யவும் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களை நிறுவிக் கொண்டிருக்கிறது. இது வரை தமிழகத்தில் 6 போக்குவரத்துக் கழகங்கள் நிறுவப் பெற்றுள்ளன. பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவு கூரும் வகையில் நிறுவப் பெற்றதுதான் அண்ணா போக்குவரத்துக் கழகம்.

அண்ணா போக்குவரத்துக் கழகம் தமிழ் நாடு அரசின் ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக—சேலம், தருமபுரி, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியதாக 23—1—1973-இல் நிறுவப்பெற்றது. சேலம் மாநகரைத் தலைமையாகக் கொண்டுள்ள இக் கழகம், இந்த மூன்று மாவட்டங்களிலும், மக்களின் தேவைக்கேற்ற இணைப்பான, வலுவான, சிக்கனமான சாலைப் போக்குவரத்தை இயக்குவதில் முழு மூச்சுடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

இக் கழகம் 15—2—1973-இல் தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையினரிடமிருந்து 45 பேருந்துகளையும், மேட்டூர், தருமபுரி, ஒசூர், கிருட்டினகிரி ஆகிய இடங்களிலுள்ள அரசுப் பணிமனைகளையும் ஏற்றுச் செயலாற்றத் தொடங்கியது. மேலும் சேலம் முன்னாள் இராணுவத்தினர் கூட்டுறவுப் போக்குவரத்துச் சங்கத்தினை 1—3—1973-இல் தன்னுடன் இணைத்துக் கொண்டு, அச்சங்கத்திற்குச் சொந்தமான சேலம் இராமகிருட்டிணா சாலைப் பணிமனையையும், 18 பேருந்துகளையும், மதுரை, கோவை நகரிலுள்ள நிலங்களையும் ஏற்றுக் கொண்டது. தொடர்ந்து பணியாற்ற விரும்பிய பணியாளர்களுக்கு ஊதிய உறுதி அளித்தும், ஓய்வு பெற்றுச் சென்றவர்களுக்கு ஓய்வு ஊதிய உதவித் தொகை வழங்கியும் உள்ளது. வட ஆர்க்காடு மாவட்டம் முன்னாள் இராணுவத்தினர் பேருந்துச் சங்கம், சேலம், தருமபுரி மாவட்டங்களில் இயங்கியஇரண்டு அரிசன கூட்டுறவுப் பேருந்துச் சங்கம் ஆகியவற்றிற்குச் சொந்தமான 15 பேருந்துகளையும், அவைகளுக்குச் சொந்தமான இடங்களையும் ஏற்றுக் கொண்டு சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. 1973-ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து டிசம்பர் திங்கள் வரை கூடுதலாக 30 பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. மேலும் இக் கழகம் 69 வழித் தடங்களில் 31-12-73 முதல் பேருந்துகளைச் செலுத்தி வருகிறது. இது வரை இக் கழகத்திலுள்ள மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை 104 ஆகும். தேய்மானத்திற்கென ரூபாய் 13 இலட்சம் ஒதுக்கீடு செய்தது போகப் பேருந்துகள், கட்டடங்கள், நிலங்கள் போன்ற இக் கழகத்தின் சொத்து மதிப்பு ரூபாய் 56 இலட்சம் ஆகும்.

இந்தியா முழுமைக்கும் ஏறத்தாழ 1,00,000 பேருந்துகள் இயங்கி வருகின்றன. இவற்றில் அரசு நடத்தும் 47 நிறுவனங்களால் இயக்கப்படுகின்ற பேருந்துகள் 35,000. தமிழகத்தில் மட்டும் 3,500 பேருந்துகள் அரசு நிறுவனங்களால் இயக்கப்படுகின்றன. இவைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 35,000 ஆகும்.

மக்கள் நலன் ஒன்றையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு நல்ல முறையில் செயலாற்றி வருகின்ற அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் கிளைகள் சேலம், தருமபுரி, மேட்டூர் அணை, கிருட்டினகிரி,

ஒசூர், வேலூர் ஆகிய இடங்களில் சீரிய முறையில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இக்கழகத்தினுடைய எல்லைக்குள் மட்டுமல்லாமல் அண்டை மாவட்டங்களின் முக்கிய நகரங்களான திருச்சி, மதுரை, கோவை, ஈரோடு, பழனி, கடலூர், சிதம்பரம், மாயவரம், காஞ்சிபுரம் போன்றவைகளை இணைக்கும் போக்குவரத்தினையும் இயக்கி வருகின்றது.' ஆரம்பத்தில் மாத வசூல் ரூ. 4 இலட்சமாக இருந்தது. 31—12—73-இல் ரூ. 11 இலட்சமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும். இக்கழகப் பேருந்துகள் தினசரி சுமார் 25,062 கி.மீ. தூரம் ஓடி, சராசரியாக ரூபாய் 33,250 ஈட்டிக் கொண்டிருக்கின்றன. ஒரு நாளில் கழகப் பேருந்துகளில் ஏறத்தாழ 28,000 பேர் பயணம் செய்கின்றனர். இக்கழகத்தின் ஓட்டுநர்களாக 225 பேர்களும், நடத்துனர்களாக 217 பேர்களும், தொழில் நுட்பப் பிரிவில் 302 பேர்களும், அலுவலகப் பிரிவில் 131 பேர்களும் பணியாற்றுகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் சேலம், தருமபுரி, வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர்கள்.

மேலும் 30 புதிய பேருந்துகளை வரும் மூன்று மாதங்களில் தேவையான தடங்களில் விடவும், சுமார் 1,500 மக்கள் தொகை கொண்ட கழக எல்லைக்குட்பட்ட கிராமங்களிளெல்லாம் பேருந்து வசதி செய்து கொடுக்கவும் கழகம் திட்டமிட்டுள்ளது. 'அண்ணா பொறியியல் கழகம்,' ஆரம்பிக்கப் பூர்வாங்க வேலைகள் துவங்கப்பட்டுள்ளன. அதன் கீழ் வேலூரில் ஒன்றும் சேலத்தில் ஒன்றுமாக இரண்டு மத்தியப் பணிமனைகளும், இரண்டு டயர் புதுப்பிக்கும் தொழிற்கூடங்களும், மற்றும் 13 பணிமனைகளும் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கழகத்தில், நிருவாகத்தில் தொழிலாளர்கள் பங்கேற்கும் திட்டம் விரைவில் அமல்படுத்தப்பெறும்.

1967-ஆம் ஆண்டு மே தின விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக அரசு 'தொழிலாளர் அரசு' எனக் குறிப்பிட்டார்கள். தொழிலாளர் நலனைப் பேணிக் காப்பதில் பெரும் பங்கு கொண்டுள்ள இந்த அரசு பல சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. தமிழக அரசின் நல்லெண்ணங்களைச் செயலாற்றும் முகத்தான் அண்ணா போக்குவரத்துக் கழகம் தனது வெளியூர் பேருந்து ஓட்டுநர், நடத்துனர்களுக்கு வசூலில் 3 சதமும், நகரப் பேருந்துகளில் பணி புரிவோருக்கு 4 சதமும் படியாக வழங்கி வருகிறது. தவிர, சீர் உடை, இலவசப் பாஸ், குழந்தைகளின் பள்ளிச் செலவுக்கான உதவி, இரவுப் பணிப் படி, மருத்துவச் செலவினங்களை ஏற்றல் போன்ற பல்வேறு சலுகைகளையும் வழங்கி வருகின்றது.

அண்ணா போக்குவரத்துக் கழகத் துவக்க விழாவில் தலைமை வகித்த போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில், ''தமிழகத்தில் போக்குவரத்துக் கழகங்கள் ஆரம்பத்திலிருந்ததைவிட தற்பொழுது இரண்டு மடங்கு வளர்ச்சி பெற்றுள்ளன. இத்தகைய வளர்ச்சிக்கு முதல் காரணமாக விளங்குபவர் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே ஆவார்கள். உலகத்திலேயே முதன்முதலில் தொழிலாளர்களுக்கு முதலீட்டில் பங்கும், நிருவாகத்தில் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது தமிழகத்தில்தான். தொழிலாளர்கள் தங்களுடைய பணிக்காலத்திற்குப் பின்னால் பாதுகாப்புத் தருகின்ற வகையில் முதல்வர் அவர்கள் நல்ல பல திட்டங்களை, அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள குடும்ப நல நிதித்திட்டம் போன்ற திட்டத்தினைப்போக்குவரத்துக் கழகத் துறை தொழிலாளர்களுக்கும் வழங்குவார்கள் என நம்புகிறேன்'' என்பன போன்ற கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

விழாவில் பங்குகொண்ட தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் உரையாற்றுகையில், ''தொழிலாளர்கள் நலனைக் காப்பதில் தமிழக அரசு சிறப்பான முறையில் அக்கறை காட்டி வருகிறது; மேலும் தேவையான சலுகைகளை நியாயமான முறையில் வழங்க எந்நாளும் தயாராக உள்ளது'' என்றும் கூறினார்கள்.

இறுதியில், முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள்:

''நாம் அண்ணா பெயரை என்றைக்கும் மறந்தோம் இல்லை என்பதற்கு அடையாளமாக,

**அட்டையில்....**

**புதுக்கோட்டையில் உள்ள மணிக்கூண்டு**

அண்ணாவின் நினைவாகத் தமிழகத்திலே பல்வேறு நிறுவனங்களுக்கு முக்கியமான இடங்களுக்கு அவர் பெயரைச் சூட்டி மகிழ்கிறோம். அண்ணா பெயரைச் சூட்டுகிற நேரத்தில் அவர் காஞ்சிபுரம் சி.என். அண்ணாதுரை எம்.ஏ என்ற அவர்களுடைய பெயரைச் சூட்டுகின்றோம் என்று பொருள் அல்ல.

தமிழ்நாட்டில் ஒரு சகாப்தத்தின் பெயரை நினைவுபடுத்துகிறோம். தமிழ்நாட்டின் ஒரு புதிய அத்தியாயத்தின் பெயரை உலகத்திற்கு என்றென்றும் பசுமையாக இருக்கத் தக்க அளவிற்குப் பதிய வைக்கிறோம், என்றுதான் பொருள் அல்லாமல் தனிப்பட்ட ஒருவருக்குப் புகழ் தேடித்தர, விளம்பரம் தேடித்தர வைக்கப்படுகிற பெயர் அதுவல்ல.

''அண்ணா என்கிற நேரத்திலே அவர் உருவாக்கிய தமிழ் உணர்ச்சி, அரசியல், சமுதாய, பொருளாதாரச் சித்தாந்தங்கள், தேசிய இனப்பற்று, உரிமைவேட்கை, அரசியல் நாகரிகம், மாற்றானை மதிக்கின்ற பண்பாடு இவைகள் அத்தனையும்தான் அந்தப் பெயரிலே அடங்கிக் கிடக்கிறது. ஆகவேதான் தனிப்பட்ட மனிதருடைய பெயர் அதுவல்ல.

''1967-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மே தின விழாவில் இது தொழிலாளர்கள் அரசு என்று அறிவித்தார். அந்த வழிகளைப் பின்பற்றி நின்று தொழிலாளர்களுடைய நன்மைகளை, தேவைகளை உணர்ந்து இன்று நாம் பணியாற்றுகின்றோம்.

''கோயம்புத்தூரில் நடைபெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்கள் கூட்டத்தில் நான் பேசும்போது தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில்

பொறுப்பும், மதிப்பீட்டில் பங்கும் என்ற அறிவிப்பைச் செய்தேன். அதிலே சிலர், சந்தேகங்களைக் கிளப்பினார்கள். இலாபம் வந்தால்தானே பங்கில் விகிதாசாரம், நஷ்டம் வந்தால் தொழிலாளர்கள் தர வேண்டாமா என்கிற ஒரு சந்தேகத்தை, நடைபெறுவது தொழிலாளர்கள் விரோதச் சர்க்கார் என்று இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்களே அவர்கள் கிளப்பிப் பார்த்தார்கள்.

''அதற்காகத்தான் நாங்கள் நட்டம் வந்தாலும் 8 சதவிகிதம் அவர்களுக்கு இலாபம் போல் தர வேண்டுமென்று ஒரு சட்டத்தை, விதியை அதிலே சேர்த்திருக்கிறோம்.

''அண்மையில் அரசு ஊழியர்களுக்கு 'குடும்ப நலநிதித் திட்டம்' என்ற திட்டம் துவக்கியுள்ளோம். அந்தக் குடும்ப நலத் திட்டம் இனிமேல் போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கும் விரிவாக்கப்படும் என்பதைப் பொங்கல் பரிசாக



உங்களுக்கெல்லாம் அறிவிக்கிறேன்.

''அடுத்து மற்றொரு மகிழத்தக்க பரிசையும் நான் உங்களுக்குத் தர விரும்புகிறேன். நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் வேலை செய்கிற மொத்தத் தொழிலாளர்கள் 35,000 பேர். தனிப்பட்ட நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்குப் பென்ஷன் கிடையாது. 'ஷாவாலஸ்' போன்ற நிறுவனங்களில் 1,000 ரூபாய், 1,500 ரூபாய் என்று சம்பளம் வாங்குகிற உத்தியோகஸ்தர்களுக்கு மட்டும் பென்ஷன் உண்டு. அவர்கள் மறைந்துவிட்டால் குடும்பப் பென்ஷன் இருக்கிறது. ஆனால் தொழிலாளர்களுக்குக் கிடையாது. அரசாங்க இலாகாக்களில் இருக்கிற ஊழியர்களுக்கு அதைத் தருகிறோம். ஆனால் பொதுத்துறையிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு இதுவரையில் பென்ஷன் கிடையாது. ஆகவே நான் பொங்கல் பரிசாகப் போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் 35,000 தொழிலாளர்களுக்கும் இந்த பென்ஷன் வழங்கப்படும் என்கின்ற மகிழ்ச்சிகரமான அறிவிப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக அரசை 'தொழிலாளர் அரசு' என அறிவித்ததை மெய்ப்பிக்கின்ற வகையில் இன்றையத் தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலனில் பெரும் பங்குகொண்டு பல நல்ல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. மேலும் தேவையான நன்மைகளையும், சலுகைகளையும் தொழிலாளர்களுக்கு வழங்கி, அவர்களை வாழ்விப்பதில் தமிழ்நாடு அரசு காட்டி வரும் அக்கறையையும் ஆர்வத்தையும் தொழிலாளர் உலகம் நன்குணர்ந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

—ஆயிரம்


## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406.

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி,
சென்னை-600007.

தொலைபேசி எண் : 30800 தந்தி : ''ஹவுஸ்பாங்க்''

தபால் பெட்டி எண் : 486

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி. எஸ்ஸி., பி.எல்., எம். எல். ஏ.

உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை.

பொருளாளர் : திரு எஸ். பழனிசாமி, எம். ஏ.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... ... | ரூ. | 2·5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... | ரூ. | 1,87,69,500 |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை. | ரூ. | 10,12,30,217 |

*இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.*

| | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு |
|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு ... ... ... ... | ரூ. 25,000 |
| கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட ... ... ... | ரூ. 10,000 |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும்... | ரூ. 10,000 |

பூ. க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.

## இ. கொஞ்சும் சலங்கைகள் கெஞ்சும்

அந்தச் சலங்கை ஓசை வீரமணியின் இதயத்தில் அமுத கீதமாக இசைத்திருக்க வேண்டும். சாலையின் இருமருங்கிலும் ஆலமரங்கள் வெண் சாமரம் வீச, அடிவைத்து அடி விலக்கி நடந்து கொண்டேயிருந்தான் அவன். நெற்றி மேட்டில் கைவிரல்களை ஓட்டி, பார்வையில் அன்பைச் செலுத்தி, நினைவில் பாசத்தை ஊட்டி, நேர்வசமாக ஊடுருவிப் பார்த்தான். கோயிற் கலசத்தைத் தொடர்ந்து தென்பட்ட தன்னையறியாமலே ஒருதரம் சிலிர்த்துக் கொண்டான். அவனுடைய மனிதத் தன்மையில் 'செவலை'க்காக அவன் ஒதுக்கியிருந்த இடம் அவனுக்கு மட்டுந்தான் தெரியும், என்பதில்லை.

ஒரு பொடியன் வழி நெடுகிலும் பட்டம் விட்டுக் கொண்டே ஓடினான்.

பாசத்தின் நெகிழ்ச்சி துள்ள ''அப்பா!'' என்று கூவினான் வீரமணி.

செம்பாதிச் சொப்பனத்தில் விழித்துக் கொண்ட போக்கில், தலையை உலுக்கிச் சிலிர்ப்பியபடி எழுந்தார் பெரியவர்.

# காணி நிலம் வேண்டும்



பூவை எஸ். ஆறுமுகம்

கூட்டுவண்டியைக் கண்டதும், அவனுக்கு ஆனந்தம் நிலை கொள்ளவில்லை. அக்கரைச் சீமையில் நாலு கணக்குக் 'கொண்டுவித்து'த் திரும்பியவன், தாய்மண்ணைக் கண்டவுடன் கும்மாளமும் கொண்டாட்டமுமாகத் தவிப்பான் அல்லவா? — அதே கணக்கில் தான், இப்பொழுது வீரமணியும் தவித்தான். இன்பத் தவிப்பு. மூன்றே மூன்று தினங்கள்தான் அவன் ஊரில் இல்லை. தஞ்சைக்குச் சென்றிருந்தான். அதற்குள் இப்படியொரு தாபமா, தாகமா? கூட்டு வண்டிக் காளையைக் கண்டானோ இல்லையோ, அவன்

வீரமணிக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. ஒருகாலத்தில் இம்மாதிரி தானும் ஆடிப்பாடி மகிழ்ந்த கதையை நினைத்துக் கொண்டிருப்பான் அவன். ஆனால், திரும்பவும் அவன் நிகழ் காலத்திற்குத் திரும்ப நேர்ந்து விட்டதே?-பையன் விட்ட பட்டத்தின் காட்சி, அவன் வாங்கப்போகும் பட்டத்தின் காட்சிக்கு முன் அறிவிப்புக் கூறியிருக்கக்கூடும்.

அதோ, ஆதிமூலத்தேவர் வண்டியின் இருப்பிடத் தட்டிலே தலைவைத்து, ஒருக்களித்துச் சாய்ந்தவாறு காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார்!

நுகத்தடியைத் தாண்டித் தாவினார். ''தம்பி!'' என்று செல்லம் கொஞ்சக் கூப்பிட்டுக் கொண்டே, அருமை மகனை ஆர்வத்தோடு எதிர் கொண்டார் தேவர்; குழி பறித்துக் கிடந்த கண்களில் கனவுக் குமிழ்கள் தெறித்தன.

''அப்பா, நல்லா இருக்கீங்களா?'' என்று நலன் விசாரித்தான் வீரமணி.

''பார்த்தால் தெரியலையா, வீரமணி? ஆத்தா மகமாயி புண்ணியத்திலேயும், உன் அன்பிலேயும் நல்லாத்தான் இருக்கேனாக்கும்,'' என்று பதில் உரைத்தார் ஆதிமூலம்.

மிஞ்சியிருந்த ஐநதாறு பறகளுக்கு ஊடாக மடைதிறந்தது இளநகை. இளவட்டம் மாதிரி, வாட்ட சாட்டமாக முதுகை நிமிர்த்தி கருக்கரிவாள் மீசையை முறுக்கி விட்டார் பெருநிலக்கிழார்.

வீரமணியால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. முச்சந்திப் புழுதியில் நின்று கொண்டிருக்கும் நினைவே அப்பாவுக்கு மறந்துபோய் விட்டதோ? ஏகக் களிப்போடு இருக்கிறாரே? தேர்வின் வெற்றிச் செய்தி முன்பே அவருக்கு எட்டியிருக்குமோ? காளையைத் தட்டிக் கொடுத்தவாறே யோசனை பண்ணினான் அவன்.

முக்கியமான ஒன்றை ஒரு கணம் மறந்துவிட்டு, மறு கணம் அதை நினைவு கூர்ந்தவராகப் பதட்டமடைந்தார் பெரியவர். பாசமும் நம்பிக்கையும் சூழ்ந்திட, மைந்தனை ஆழ்ந்து நோக்கினார். ''வீரமணி, உன் பரீட்சையிலே எல்லாம் நீ கெலிச்சிட்டேதானே?' என்று பதறிய தொனியில் கேட்டார் அவர்.

''ஆமாங்க, அப்பா. ரொம்பவும் எடுப்பாகத் தேறியிருக்கேனுங்க!''

''சபாசுடா பாண்டியா! '' என்று ஆனந்தக் கூத்தாடினார் ஆறுகரைத் தலைமைப்புள்ளி. அவிழ்ந்துகிடந்த குடுமியைக் கோதி முடித்துக் கொள்ளலானார். அவர் நரைமுடிகள் காலத்துக்குத் 'திரை' செலுத்தியிருக்கும்.

''நான் தேறின சங்கதி உங்களுக்கு முன்னாடியே தெரியுமா அப்பா?''

''தேறின தகவல் முன்னாடியே தெரியாது; ஆனா நீ கட்டாயம் தேறிவிடுவாய் என்கிற துப்பு எனக்கு முன்னதாகவே புரிஞ்சிடுச்சு. நான் பெற்றமகன் என்னோட நம்பிக்கையைக் கட்டிக் காக்கத் தவறிப்பிடுவானா, என்ன?''

அமைதி கனிந்திடப் புன்னகை செய்தான் வீரமணி; 'அப்பாவுக்கு என் பேரிலேதான் எவ்வளவு நம்பிக்கை!'-இவ்வாறுஎண்ணிப் பெருமைப் பட்டபோது, இத்தகைய நினைவின் இன்பமும், இன்பத்தில் வழிந்த அமைதியுமே அவனுக்கு உயிராகவும் உயிர்ப்பாகவும் இயங்கிய அந்தரங்கத்தை அவன் உணராமல் இல்லை. வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு, பட்டுத் துப்பட்டாவை உரு மாலையாகக் கொண்டு கழுத்தைச் சுற்றிப் போட்ட வண்ணம், தார்க்குச்சியும் கையுமாக மாட்டைப் பூட்டிக் கொண்டிருந்த தன் அன்புத் தந்தையைக் கண்டதும், வீரமணியும் புறப்படத் தயாரானான். குறுக்குமறித்த ஒற்றையடிப்பாதையில் ஒதுங்கி நின்ற சீமைக் கொன்றைத் தூரடியைநாடி மீண்டான்; தோற்பையைக் கட்கத்திடையே இடுக்கிக் கொண்டான். மற்றசமாச்சாரங்களைப் பற்றியெல்லாம் வீட்டுக்குப் போன கையோடுதான் அப்பாவிடம் ஆற அமரப் பேசியாக வேண்டும் என்றும் முடிவு கட்டினான், அவன்.



''வீரமணி!''
''அப்பா!''
''கிளம்பலாமா?''
''நல்லதுங்க!''
''நீ இன்னம் பசியாறலேயே?''
''இல்லீங்க. நீங்க....?''
''ஊகூம்'', என்று உதட்டைப் பிதுக்கினார் தேவர். வெள்ளென, கோழி கூப்பிட, வயல் காட்டுப் பக்கம் கிளம்பினப்ப ஒரு குவளை நீராகாரம் குடிச்சேன் ; அம்புட்டுத்தான்!''

''உங்களுக்குப் பசியெடுத்தால், சந்தைப் பேட்டைக்குப் போய் காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டு, அப்பாலே வீட்டுக்குப் புறப்படலாமுங்களே, அப்பா?''

அவர் பான்மையோடு முறுவல் பூத்தார்; சாண் வயிற்றைத் தடவிக் கொண்டார். ''என்னைக் கேட்காமல் எனக்குப் பசி கிளம்பாது. அதுதவிர, நீ சொன்ன இனிப்புச் சேதியே என் வயிற்றை நிரப்பிடுச்சு. நீ வேணும்னா நாலு இட்டிலியைப் பிட்டுப் போட்டுக்கிட்டு ஓட்டமாய்த் திரும்பிடு தம்பி! என்று 'தாயினும்சாலப் பரிந்து' உரைத்தார்.

''வேண்டாங்க. ரெண்டு பேரும் வீட்டுக்குப் போய்ச் சுடச் சுடச் சாப்பிடுவோமுங்க!'' வீரமணியின் குரல் கம்மியது.

''அடி சக்கை! அதுதான் லாயக்கு!'' என்று ஆமோதிப்புக் கொடுத்தார் தேவர். ஒரே குதியாய்க் குதித்து, இருப்பிடத்தில் குந்தினார். அவரது கைப்பிடியில் மூக்கணாங்கயிறு லாகவமாகச் சுழலக் காத்திருந்தது. ''தம்பி மணி என்ன சொல்லுது?'' என்று வினவினார்.

''மணி எட்டு நாற்பது'' என்று தெரியப்படுத்தினான் மைந்தன்.

''ஆத்தாடியோ!...சரி, சரி. பதனமாய் ஏறிக்கப்பா!''

''ஆகட்டுங்க, அப்பா!'' என்று கூறிய வீரமணி, கால் மிதிப் பலகையில் கால்பாவிய தருணத்தில், நியாயம் ஒன்று தோன்றியது.

''அப்பா, இளவரசுப்பட்டம் கணக்கிலே என்னை வண்டியிலே குந்த வச்சிட்டு, வயசான நீங்க பண்ணையாளாட்டம் வண்டியை ஓட்டுறதை யாராச்சும் கண்டால் இளக்காரம் பேசமாட்டாங்களா? ஆகச்சே, நீங்க வந்து வண்டியிலே உட்காருங்க. நான் வண்டியை விரட்டுறேனுங்க; அதுதானுங்க முறை,'' என்று இங்கிதம் பேசினான்.

பெரியவர் அமர்க்களமாகச் சிரிக்கலானார். ''தம்பி, பாசத்தோட மகத்துவத்தைப் புரிஞ்சுக்கிட திராணி இல்லாத புறம்போக்குப்பயல் எவனாவது எதையாவது புரளி பேசிக்கிட்டுப் போகட்டுமே? — அதைப்பத்தி நம்பளுக்கு என்ன கவலை? என்மட்டுக்கு, நீ மெய்யாலுமே இளவரசுப் பட்டம் தான்! ரொம்பக் காலமாய் இந்தக் கிழவாடிக்கு ஒரு ஆசை உண்டு. ஆனா, அது பேராசை இல்லை. நியாயமான ஆசை. அந்த ஆசை என்ன, தெரியுமா தம்பி? நீ உன்னோட விவசாயப் பட்டப் படிப்பிலே பேர் சொல்லி, பேர் எடுக்கிற மாதிரி தேறினதும், உன்னை வண்டியிலே குந்தவச்சு நானே




வண்டியை ஓட்ட வேணும் என்கிறதுதான் அந்த ஆசையாக்கும்!...அதைத் தொட்டுத்தான், பண்ணைக்காரனைக்கூட அனுப்பல்லே!...'' என்று உருக்கமாகப் பேசி முடித்தார் ஆதிமூலம்.

வீரமணி உருகிக்கரைந்தான்.
''ட்ரியோ......ட்ரியோ!,,''

ஆவணத்தாங் கோட்டைச் சாலையில் ஓடிக்கொண்டிருந்த கூட்டுவண்டி, கீழ்த்திசையில் பாதை குறித்து நின்ற 'பூவை மாநகர் வழி' என்னும் அறிவிப்புக் கல்லைத் தொட்டு நின்றது.

பாரதி திடலில் எல்லை சொல்லி, எல்லை காட்டி, கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

ஆதிமூலத்தேவர் அடி மடியிலே செருகி வைத்திருந்த மஞ்சள் கடுதாசிப் புகையிலைப் பொட்டணத்தை விசையோடு எடுத்துப் பிரித்து, ஒருகொத்து அள்ளி வாயில் போட்டுக் கடைவாயில் அடக்கிக் கொண்டார். சுரத்து சுரந்திருக்கும். முகத்தில் அடித்த கதிர்வீச்சைச் சட்டைபண்ணாமல் சட்டையை இழுத்துவிட்டவராக, மூக்கணாங்கயிற்றைச் சுண்டி இழுத்தார். மேற்குத் திக்கில் 'மேலக்குடியிருப்பு'க்கு வழி காட்டிய வண்டித் தடத்தில் மடங்க எத்தனம் செய்து, செவலையைத் தட்டி, அதட்டி மடக்கினார்.

அச்சமயத்திலே:
எதிர்ப் புறத்திலிருந்து சூறைக் காற்றாகப் பறந்து வந்தது ராமையாத்தேவரின் ரேக்ளா வண்டி.

ஆதிமூலத் தேவருக்குத் திகீரென்றது. 'முரண்டு' பிடித்து சண்டித்தனம் பண்ணின காளையைத் தென் வசத்தில் முறுக்கி இழுத்து, கால்வாயில் சறுக்கிவிடாமல் தற்காத்துக் கொண்டார் பெரியவர். பிடி கயிற்றைத் தளர்த்தி; நிதானமாக வசப்படுத்தி, நேர்த்தடத்தில் வண்டியை மேற்கே செலுத்தினார். ஒரு வண்டி போகவும், மறுவண்டி வரவும் தோது கொண்ட தடத்தில், சுளுவாகவே வண்டியைச் செலுத்தி வர இயலும். ஆனால், கண்களை மூடிக்கொண்டு பறந்து வருபவன் ராமையா ஆயிற்றே?— மச்சான் ராமையா என்றால் சாமான்யமான மச்சானா? அடுத்துக் கெடுத்த அயோக்கியனாச்சே? தெய்வத்துக்குப் பயந்து, நேர்பாதையிலே

அவன் தாராளமாகப் போக லாம்! அந்த நயவஞ்சகப் பாவி தடம் தவறி வந்தால், அப் புறம் அவனைச் சும்மாவா விடு வேன்? என்னமோ, ஒரு புரோ. நோட்டுக்குள்ளாற தான் லோகமே அடங்கி முடங்கிக் கிடக்குதின்னு அவன் பகல் கனு கண்டுக்கிட்டிருக் கான்! பாவம்!... நினைவுகள் சூடுபிடிக்க, அவர் வெகு எச்ச ரிக்கையோடு வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார்.

ஆனால்......

பறந்து வந்த ரேக்ளாக்காளை, 'படா'ரென்று கூட்டுவண்டிக் காளை மீது முட்டி மோதிவிட் டது!

ஆதிமூலத் தேவருக்கு உடைமை கொண்ட 'செவலை'க்கு அவருடைய கோபத்தில் முக்கால் வாசியாகி லும் இல்லாமல் இருக்குமா? அது, ஈட்டிகளாகப் பளபளத்த கொம்புகளால் எதிரியின் 'வெள்ளை'யைத் தாக்கத் தொடங்கியது. உச்சாடனம் பெற்ற சாமியாடி மாதிரி தலையைச் சிலுசிலுத்துக் கொண்டே, வெள்ளையை ரோசம் பொங்க முட்டிக் கொண்டிருந்தது!

பெரியவருக்கு எக்காளம் பிடிபடவில்லை.

நியாயத்துக்கும் அநியாயத் துக்கும் இடையிலே, வாய் பேசாமல் நடந்த மௌனச் சண்டையிலே, நீதி உறங்காத கதையை அனுபவித்துக் கொண்டிருந்தான் வீரமணி— அதே ரோசத்தோடு! கன்னியா குமரி மாவட்டத்தில் இனி அரிசி நியாய விலைக்குக் கிடைக்குமாம்! —முதல்வர் அறிவித்துவிட்டார்! —நாள் இதழை மடித்தான் அவன், நிறைவோடு.

பாலைவனம் ஜமீன்தாருக்குச் சமபடியாக ஆரோகணித்து வீற்றிருந்த ராமையாத் தேவ ரின் நாடி வீழ்ந்தது. வெள்ளை தோற்றுவிட்டபோது, அவரால் மட்டும் எப்படி முகத்தை நிமிர்த்த முடியும்? முகத்தை நிமிர்த்தினுல், வழிந்த அசடை யார் வழிப்பதாம்?

ஆதிமூலம் ஓங்காரமிட்டுச் சிரித்தார். ''டேய் ராமையா! உனக்கு வம்பை விலைக்கு வாங்கத்தான் வக்கு இருக்கு. ஆனு, எனக்கு அன்பை விலைக்கு வாங்க மனசு இருக்காக்கும்! இப்ப ஒன்னோட காளை உன் மானத்தை வாங்கு வாங்குன்னு வாங்கிப்பிடுச்சுதே, கண்டி யாடா?'' என்று கேட்டார், நையாண்டித்தனம் முழங்கியது.

வீரமணியின் உள்மனம் 'சபாஷ்' போட்டது. வெளி மனம் 'கடகட' வென்று நாண யங்கள் குலுங்கிறுற்போலே நகைப்பைக் கக்கியது.

இறங்கிய முகத்தை—ராஜ பார்ட் முகத்தை ஏற்றிவிட் டார் ராமையா. ''ஐயாவே மச்சான்காரரே! கூடிய சீக்கி ரத்திலேயே, நம்ப ஊர் முச் சந்தியிலேயிருந்து உம்மோட மானம், மரியாதை அத்தனை யுமே ரசூலா கப்பலிலே ஏறப் போற சங்கதியை உம்மோட லேஞ்சிலே முடிச்சுப் போட்டு வச்சுக்கிட மறந்திடாதீங்க!'' என்று'சிவப்பு விளக்கு'க்காட்டி னுர். மறு இமைப்பில் அவரு டைய வெள்ளைக் காளை சவுக் கடி தாளாமல் ஓட ஆரம்பித் தது.

பெரியவர் சிலையானுர்.

வீரமணியின் பெருமூச்சு அவ னுக்குத்தான் வெளிச்சம். இருட்டைக் கீறிக் காட்டும் மின்னல்கீற்று அவனுடைய நெஞ்சின் அடிவாரத்தில் பளிச் சிட்டது. அவன் தலையை உயர்த்தினுன். ''அப்பா, கேணி வாயினுலே இடிபடும். இதுதான் இந்நாளைய உலக நடப்பு. அம்மான்காரர் நடந்து காண்பிக்கிற நடப்பும் இதுதான்! சத்தியமும் தரும மும், அன்பும் நியாயமும் நம்ப ளுக்கு நம்மோட மனச்சாட்சி யாய்க் காவல் காக்கையிலே, நாம எந்தப் பூச்சாண்டிக்கும் எப்பவும் பயப்படவேண்டிய தேவையே கிடையாதுங்க!... மாட்டைத் தட்டுங்க, நாம வீட்டுக்குப்போகலாம்!'' என்று சன்னமான குரலெடுத்துக் கெஞ்சினுன் அவன்.

இருதயத் தொகுதியை அழுத்தியவாறு, தலைநிமிர்ந்த முதியவரின் சோகம் மிகுந்த விழிகள் ஏனே கலங்கித் தடு மாறின!

சலங்கைகள் கொஞ்சின; கெஞ்சின!

ஒற்றை வேப்பமரம்.

அது, ஆதிமூலத்தேவரின் முப்பாட்டன் சொத்து.

திட்டிவாசல் நிழலில் கூண்டு வண்டி நின்றது.

முதலில் இறங்கியவன் வீர மணிதான்!-தன்னைக் கையேந்தி அன்பேந்தி வரவேற்று, வண் ணம்காட்டி-வண்ணம் கூட்டிப் பளிச்சிட்டு விளங்கிய மச்சு வீட்டைப் பாசத்தின் ஏக்கத் தோடும் அன்பின் தவிப்போடும் ஏறிட்டு நோக்கினுன் அவன். நெஞ்சின் அலைகள் சங்கம் முழக்கின. வேதனையும் வெய் துயிர்ப்பும் மேலிட்டன. திரும்பிப் பார்த்தான்.

வேப்பங்காற்று தாலாட்டுப் பாடும்.

வீரமணியின் அழகான விழிகள் அழகாகச் சொக்கின.


சீமை முருங்கைப் போத்து வெண்ணிறப் பூக்கள் சிணுங்க, செழித்துத் தழைத்து வளர்ந் திருக்கிறது.

ஆடுதுறை வாழைகளுக்கு ஈரம் மிகுதிதான்.

அதோ, பூக்களின் தோட் டம்!-சாதி மல்லியும், வெள்ளை ரோஜாவும், சூரியகாந்தியும், துலுக்கச் சாமந்தியும் புன்ன கைப் பூ தூவிச் சிலிர்த்துச் சிரித்துக் கொண்டிருக்கின்றன! மலர்களை அணைந்த கதிர்கள் நாணம் பூத்தன. கதிர்களை அணைத்த மலர்கள் மணம் பூத்தன.

அற்புதம்!—'காட்டுத் தீப் பூக்கள்' காலையிலேயே அந்திச் செவ்வானத்தைச் சித்திர மாக்கிவிட்டனவே!

மண்வளம் ஆராய்ந்து இந்தப் பூங்காவை அவன் இங்கே உரு வாக்கிய தருணத்திலே 'பதியன்' இனங்களையும் விதை ரகங்களையும் அண்ணுமலை நகரி லிருந்து கொண்டு வரப்பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல.



காலம் என்னும் மணல் வெளியில் பதிந்திட்ட அடிச்சுவடுகளா இந்தப் பூஞ்செடிகள்! அல்லது, பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவும் என்பதற்கு அமைந்திட்ட உயிர்ச் சாட்சிகளா?...ஆகா..'மேரி கோல்ட்' மலர்கள் எவ்வளவு ரம்மியமாகப் பொன்னொளி சிந்திக் கண் சிமிட்டுகின்றன!

தென் கோடியினின்றும் மறுகினான் அவன். தாய்ப்பசு தன் கன்றைப் பாசம் சொட்ட நக்கிக் கொண்டிருந்த காட்சியைக் கண்டவுடன், அவனது பாசநெஞ்சம் உயிர்க்கழுவில் துடித்தது. 'ஆத்தா!' என்று செருமினான். பசுவையும் கன்றையும் பரிவுடன் தடவிக் கொடுத்துவிட்டு மடங்கினான் தனயன்.

நடையன்கள் பின்தங்கின.

செவலையை வைக்கோல் பரண் அடியில் கட்டிப்போட்டுத் தீவனம் போட்டுத் திரும்பினார் பெரியவர். "வாப்பா, போகலாம்," என்று மகனைக் கூப்பிட்டார். தலைவாசல் நிலைப்படியைக்கடந்து தயங்கித் தயங்கி இரண்டாம் கட்டை அடைந்தார். கிழக்குப் பக்கத்துச் சுவரைத் தவிப்புடன் ஏற இறங்கப் பார்த்தார். பிறகு, "தம்பி, உன்னைப் பெற்ற புண்ணியவதி உன்னை ஆசீர்வதிக்க உள்ளாற காத்துக் தவம் கிடக்கிறா; போய்க் கும்பிடப்பா' என்று தாழ்வான குரலில் கூறினார்.

வீரமணி கூடத்தில் வந்து நின்றான். மேனி அல்லாடித் தள்ளாடியது. அன்னையின் படத்தைத்துடிப்புடன் நோக்கினான். பெற்ற ஆத்தாளுக்குக் கும்பிடு கொடுத்தான். கண்களில் பாசம் வழிந்தது; நெஞ்சில் உதிரம் வழிந்தது. அன்னை இட்ட தீ அடிவயிற்றில் எரிகிறது. அணையாத பாசத்தீ!—அவனைத் தவமிருந்து பெற்ற குலக்கொழுந்தை வாழ்த்தவும் வாழவைக்கவும் கடமை கொண்ட பாசத்தின் தீ!—விசும்பல் கேட்டது. திரும்பிப் பார்த்தான். அவன் எதிர்பார்த்த நடப்புத்தான்! "அப்பா!" என்று விம்மினான். அவருடைய கண்ணீரைத் துடைத்து விட்டான். சத்து மிக்க கரங்கள் சத்திழந்து நடுங்கின. தேவர் மூக்கைச் சிந்தினார். அன்புப் புதல்வனை ஆதரவுடன் நெருங்கி, அவனுடைய கண்ணீரைத் துடைத்தார். "வீரமணி, சீதேவி உன்



ஆத்தா ரூபத்திலே நம்ப வீட்டுக்கு தேடிவந்தா. மகராசி வள்ளியம்மை மஞ்சளும் மருக்கொழுந்துமாய் இருந்த மட்டுக்கும், இந்த வீட்டிலே பணமும் காசும் பொன்னும் மணியும் குமிஞ்சி கிடந்திச்சு. நம்மோட கண்டுமுதல் களத்திலே பொன்னி நெல் அம்பாரம் அம்பாரமாய்க் குமிஞ்சி கிடக்குமே அந்தக் கதையேதான்! மகாலட்சுமி பூவும் பொட்டுமாய்ப் போனாள்; எல்லாமே போயிடுச்சே! ஐயையோ தெய்வமே!"—தொடர்ந்த பேச்சைத் தொடர வாய்க்காமல், தொண்டை அடைத்தது. மூச்சும் அடைத்தது. நிலை குலைந்து திக்கு முக்காடினார்!

வீரமணி தண்ணீர் கொடுத்தான்.
காசி, தடவிக் கொடுத்தார்.

திண்ணைக் கடிகாரம் பத்து என்று அறிவிப்புக் கொடுத்தது

பெரியவர் தப்பினார்.

"தம்பி, அப்பாவைக் கூட்டிக்கினு வாங்க. தோசை ஆறிடப்போகுது. உங்களுக்குப் பிடிச்ச பச்சைக் கொத்தமல்லித் துவையல் அரைச்சிருக்கேன். பொறிச்ச விளைமீன் குழம்பும் உங்களுக்காக எடுத்து வச்சிருக்கேன். நான் போய் முட்டைத் தோசைக்கு மாவு ஊத்துறேன்," என்று சொல்லி கிளம்பினார் காசி. 'சமையல் காசி' அவர்.

பச்சைக் கொத்தமல்லி மணக்கிறது!

வீரமணி செய்வகை புரியாமல் மலைத்தான். தன் ருசி உணர்ந்து பச்சைக் கொத்தமல்லித் துவையல் தயாரித்து வைத்திருப்பதாக விளம்பிய காசியின் அன்பு அவனை அம்மான்மகள் அன்னக்கொடியிடம் இட்டுச் சென்றிருக்குமோ? உண்மைதான். இந்தப் பச்சைக் கொத்தமல்லித் துவையலை முதன் முதலில் பழக்கப்படுத்தி வைத்தவளே அன்னக்கொடிதான்! துவையலும் கையுமாக துவள் மூரலும் துவளாத அன்புமாகத் தரிசனம் கொடுத்து, இனம் புரிந்த நேசத்தையும் இனம் புரியாத பாசத்தையும் காட்டி, 'அத்தான், அத்தான்!' என்று சுற்றிப்படரும் கொடியாகச் சுற்றிச் சுற்றி வந்து, தானும் சுற்றி, தன்னையும் சுற்றிக் கொண்டு ஆடிப்பாடித் திரிந்த அம்மான் மகள் அன்னக்கொடியை அவன் நினைத்து மகிழாத வேளை உண்டா? ஏங்கித் தவிக்காத தருணம்தான் உண்டா?

காலத்தின் செப்பிடு வித்தைக்கு ஈடில்லை; எடுப்பில்லை.

நடந்த மகமாயி தேரோட்டத் திருநாளன்றைக்கு "அயித்தை மகனே! அத்தான் காரரே!" என்று கொஞ்சிக் கொஞ்சி ஓடோடி வந்தாள் அன்னம். ஆடவந்த பொற்பாவையாக ஆடிவந்தாள். சொக்கட்டான் சேலையின் முந்தானையில் முடிந்து வைத்திருந்த கொத்தமல்லித்தளைத் துவையலை வளைகுலுங்கச் சமர்ப்பித்தாள்; மருதாணி நகங்களில் சிந்தூரம் படர்ந்தது.

முறைமைப் பெண்ணை முறைத்துப் பார்த்து அவளை-அவளுடைய துல்லியமான பட்டிக்காட்டு அழகை பகுதி பகுதியாகவும் தொகுதி தொகுதியாகவும் அனுபவித்து ரசித்துக் கொண்டிருந்த வீரமணி அந்தத் துவையலைப் பிரித்து, அதில் துளி எடுத்து நுனிநாக்கில் இட்டுச் சுவைத்தான். 'நப்பு'க் கொட்டிச் சுவைத்தான். பிறகு அவளைக் குறும்பு அரும்ப ஓரப் பார்வையிட்டு அளந்தான். "அதுசரி புள்ளே! திருநாளும் அதுவுமாக, இருந்திருந்து உறைச்சுப் பிடுங்கிற இந்தத் துவையலைத் தானா உன் ஆசை மச்சானுக்கு நீ கொண்டாந்து தரவேணும்? உன் அப்பன்காரருக்கு இந்த உளவு தெரிஞ்சா உன்னைச் சும்மா விடுவாரா, அன்னம்?" என்று வேதனையும் கவலையும் மூள வினவினான் அவன்.

அன்னக்கொடி புனிதம் தழைக்கத் தன் அத்தை மகனைப் பார்த்தாள். எதையும் சாடவல்ல வல்லமையைத் தூவிவிட்டாள். சாதிமல்லிப்பூ மடல் மடலாக அவிழ்ந்து

மணம் அரும்புமே, அவ்வாறு நகை ஏந்தி நகை சிந்தினுள்.

"முறை மச்சானுக்குத் துவையல் கொண்டாந்து தந்ததுக்காக அப்பன்காரர் என்னைச் சும்மா விடாமல் இருந்தால், என்னைத் தலைமேலே சுமந்து வச்சுக்கிடட்டுமே? உங்களுக்கு ஆத்தா மூத்தவளோட தயவினுலே, ஆயுசு மட்டும் கெட்டியாய் எழுதிப் போட்டிருக்கட்டும்! என் கையினுலே உங்களுக்கு நித்த நித்தம் இந்த மாதிரித் துவையல் அரைச்சுச் சோறு ஆக்கிப் போடுறேனு இல்லையா, பாருங்களேன்!... இந்தத் துவையல் சாமான்யமில்லேங்க; இது உங்க நெஞ்சுக் குருத்திலே நேர்முகமாய் முனைப்போட பாய்ஞ்சு உறைக்குமாக்கும்! அப்பத்தான் உங்க நினைவிலே உங்க அன்னம் சுள்ளாப்போடே சதா உறைச்சுக்கிட்டே இருப்பாளாக்கும்! அத்தான், நான் அடிக்கொரு வாட்டி செப்புற தொப்ப, நான் வீட்டிலே நல்ல விளக்கு கொளுத்திவச்சு, உங்களுக்கு நான் முந்தானை தருகிற அண்ணைக்குத்தான்உங்களைப் பெத்த புண்ணியவதியோட ஆத்மாவும் என்னைப் பெத்த மகராசியோட ஆத்மாவும், மெய்யாலுமே அமைதியடைய ஏலுமுங்க! ஆமாங்க; இது சத்தியமுங்க; அது மட்டுமில்லே ! இதுதான் தருமமும் கூட!

உணர்வுகள் சுகந்தம் பரப்பிச் சுழிக்கப் பேசினுள் சிங்கப்பூர்த்தேவர் ராமையாவின் செல்லப் பூங்கொடி அன்னக்கொடி.

வெளவால்கள் 'சடுகுடு' ஆடின. வீரமணி மண்ணை உணர்ந்தான். பாசத்தை உணர்ந்தான். 'அப்பாவுக்கு நெஞ்சு உடைஞ்சதாலேதான் நெஞ்சடைப்பு அடிக்கடி வந்து தொலைக்குது. போனகிழமை தஞ்சாவூர்லே நீதிமன்றத் தீர்ப்பை அறிஞ்சுக்கிட்டதும் மூச்சடைச்சு அவதிப்பட்டாங்க அப்பா. நாளை ஓட்டாமல் அவங்களை தஞ்சாவூருக்கு இட்டுக்கிட்டுப்போய் பெரிய வைத்தியமாய்ச் செஞ்சால் தான் அப்பா பிழைப்பாங்க! நானும் பிழைப்பேன்! கண்கள் கசிந்தன. என்னவோ அரவம் கேட்டது. அரவம் கண்ட பாங்கில் நடுங்கினுன். 'அப்பா!' என்று வீரிட்டான்.

அங்கே:

பெரிய பண்ணை ஆதிமூலத் தேவர் அடிபெயர்ந்த ஆலமரமாகச் சாய்ந்து கிடந்தார்!

(வளரும்)

# தெரியுமா?

திருச்சிராப்பள்ளி நகருக்குப் பழைய பெயர் என்ன தெரியுமா?

கடைச் சங்க காலநூல்களில் உறையூர் பற்றிய செய்திகள் உள்ளன. அகநானூறில் உறையூருக்குக் கிழக்கே ஒரு குன்று குறிப்பிடப்பட்டுள்ளதேயன்றி அதன் பெயரோ, அது அமைந்துள்ள ஊரின் பெயரோ குறிப்பிடப்படவில்லை.

இராஜராஜசோழன் காலத்தில் வரையப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்றில் 'உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரியிலுள்ள சிராப்பள்ளிக் கோயிலுக்கு......' என்ற சொற்ருெடர் உள்ளது. இதன் மூலம் இந்நகரின் பழைய பெயர் 'சிற்றம்பர்' என்று அறிகின்ருேம்

சிற்றம்பருக்குத் திருச்சிராப்பள்ளி என்ற பெயர் எப்படி வந்தது ?


கி.பி. ஐந்தாம் நூற்ருண்டில் அங்குள்ள குன்றின் மீது சமணத்துறவிகள் தங்கித்தவம் புரிந்தனர். இன்றும் குன்றின் மேலுள்ள உச்சிப் பிள்ளையார் கோவிலுக்குப் பின்புறத்தில் சமண முனிவர்களின் கற்படுக்கைகள், தலையணைகள் இருத்தலைக் காணலாம். அச்சமண முனிவருள் 'சிரா' என்பவர் இருந்தார் என்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறிகிருேம். சமணத் துறவிகளுக்குச் சிரா தலைவராக இருந்ததால் அந்தச் சமணப் பள்ளி 'சிராப்பள்ளி' என்று வழங்கிற்று.

கி.பி. ஏழாம் நூற்ருண்டின் முற்பகுதியில் ஆண்ட பல்லவ வேந்தன் முதல் மகேந்திர வர்மன் தன் ஆட்சியின் பிற்காலத்தில் சிராப்பள்ளிக் குன்றைக் குடைந்து சிவ பெருமானுக்குக் கோயில் அமைத்தான். முதலில் சமண முனிவரின் தவப்பள்ளியாக விளங்கிய சிராப்பள்ளி, பின்னர் சிவன்கோயில் பெயராக விளங்கியது. அதன் பிறகு அக்கோயில் அமைந்துள்ள நகரின் பெயராகத் தொடங்கியது. பழைய பெயர் 'சிற்றம்பர்' மறைந்து விட்டது.

சிராப்பள்ளி அடைமொழி பெற்று, திருச்சிராப்பள்ளியாக இன்று வழங்கி வருகிறது.



# உருக்கு உற்பத்திக்கு ஒப்பற்ற ஆலை



அரக்கோணத்திலுள்ள தொடர் வார்ப்பட ஆலை, நிபந்தனையற்ற சமுதாய-பொருளாதார ஒத்துழைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) சோவியத் ஒத்துழைப்புடன் இந்த ஆலையை நிறுவியுள்ளது. தமிழகத்திலுள்ள 37 ரீ-ரோலிங் மில்களுக்குத் தேவையான உருக்குப் பாளங்களை உருவாக்குவதற்காக அரக்கோணம் ஆலையைக் கட்ட வேண்டும் என்று 'டிட்கோ' தீர்மானித்தது. உருக்குப் பாளங்களின் பற்றுக்குறையால், இந்த ரீ-ரோலிங் மில்களின் உற்பத்தி ஆற்றல் மிகக் குறைந்திருந்தது. இந்தப் பற்றுக்குறையை நீக்க அரக்கோணம் ஆலை பணியாற்றுகிறது.

1971 அக்டோபர் 14-இல் அரக்கோணம் ஆலையின் மின்சார உலையில் முதன்முதலாக உருக்கு உற்பத்தி செய்யப்பட்டது ; அதைத் தொடர்ந்து இவ்வாலை வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

முதல்வர் கலைஞர் 1972 ஏப்ரல் 14ல் இவ்வாலையினைத் திறந்து வைத்தார். 1972 ஜூலை 1-ஆம் தேதி முதல் இவ்வாலையில் விற்பனைப் பண்ட உற்பத்தி தொடங்கியது.

அரக்கோணம் ஆலையில் பல விசேட அம்சங்கள் உள்ளன. பயனற்றது என்று கருதப்படும் கழிவு இரும்பை இவ்வாலை பயன்படுத்துகிறது. இவ்வாலையிலுள்ள 25-30 டன் ஆற்றல் வாய்ந்த மின்சார ஊதுலையானது இந்தியாவிலேயே மிகப் பெரிய தானியங்கு ஊதுலையாகும். ஆண்டுதோறும் 50,000 டன் உருக்குப் பாளங்களை அது உற்பத்தி செய்ய முடியும்; மற்றொரு 25 டன் மின்சார ஊதுலை நிறுவப் பெற்றால், இவ்வாலையில் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் டன் உருக்குப் பாளங்களை உற்பத்தி செய்ய முடியும். ஒரே சமயத்தில் நான்கு உருக்குப் பாளங்களை உற்பத்தி செய்யும் அமைப்பு இந்தியாவில் இங்கு மட்டும் தான் உள்ளது. இந்த அமைப்பு முழுவதும் தானியங்கு முறையால் இயங்குகிறது. இந்த ஊதுலையின் இயக்கத்தைக் கவனிக்க, இவ்வாலையில் ஒரு டெலிவிஷன் நிறுவப்பட்டுள்ளது. உருக்குப் பாளங்கள் பல கட்டடங்களில் உற்பத்தி செய்யப்படும்பொழுது இவ்வாலையின் ஆய்வுக் கூடத்தில் அவற்றின் தரம் பரிசோதிக்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள ரீ-ரோலிங் மில்களுக்கு அரக்கோணம் உருக்காலை பேருதவி புரிகிறது. இந்தப் பகுதியிலுள்ள தொழில்களின் வளர்ச்சிக்கும் இவ்வாலை உதவுகிறது.

'டிட்கோ' நிறுவனத்தின் இயக்குநர்கள் இவ்வாலையின் உற்பத்தியை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளனர்; எதிர்காலத்தில் இதன் வளர்ச்சிக்குச் சிறந்த வாய்ப்புக்கள் உள்ளன; வருங்காலத்தில் இவ்வாலையின் ஆற்றல், இருமடங்காக அதிகரிக்கும்; அதாவது 1 இலட்சம் டன் இரும்பு உருக்கப்படும்.

தமிழகத்தில் மின்சார வெட்டு நீங்கிய ஒரு மாதத்திற்குள் இவ்வாலையின் உற்பத்தி ஆற்றல் 35 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்ந்தது. கரி அதிகமுள்ள உருக்குப் பாளங்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன; இவற்றுக்கு 'கிராக்கி' அதிகமாக உள்ளது; எதிர்காலத்தில் இவை அதிகமாக உற்பத்தி செய்யப்படும். வருங்காலத்தில் இவ்வாலையின் லாபமும் அதிகரிக்கும். அரக்கோணம் ஆலையின் பொருள்களுக்கு மிகுந்த 'கிராக்கி' உள்ளதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

தமிழ் நாட்டில்
நம் முன்னேற்றத்திற்காக
நாளுக்கு நாள் புதிய திட்டங்கள்!
உணவு உற்பத்தியில்
தன்னிறைவு எய்தியது போல
ஒவ்வொரு துறையிலும்
நிறைவுபெற உழைக்கின்றோம்.

# சிந்தனை தந்திடும் பாடம்!



நம் நல்வாழ்வுக்காகத்
தமிழக அரசு
ஆற்றிடும் பணிகள்,
எடுத்திடும் முயற்சிகள்
ஏராளம்! ஏராளம்!!

எனினும்

நிறைவான வாழ்வை— நிம்மதியை— எல்லாரும் பெற

# எது தடை? ஏன் இடையூறு?

—எண்ணிப் பார்க்கும்போது விளங்கிடும் உண்மை

# பெருகிடும் மக்கள் தொகையே!

இதனால் வீட்டுக்கும் வேதனை! நாட்டுக்கும் நலிவு!


எனவே

பிறந்ததைக் காப்போம்—இனி
பிறப்பதைத் தடுப்போம்!

**அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்**
**இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.**

——குடும்பநலத்துறை, தமிழ்நாடு அரசு.

# நினையாத நாளும் உண்டோ?




நினையாத நாளொன்று தனியாக உண்டெனில்
  நினைவு நாள்கொண் டாடலாம்
சினையாக விதையாக நீயன்று வாழ்ந்ததால்
  சிந்தனை செய்த வற்றை
வினையாக மாற்றியே விரைவாய் முடித்திடும்
  விறலினைப் பெற்ற தம்பி
முனையாத துறையில்லை முகிழ்த்திடும் வெற்றிகள்
  மொய்க்காத நாள்தான் ஏது?

அன்பினால் தம்பியர் என்பையும் தந்திட
  ஆண்டிட்ட இதய வேந்தே
நின்பெயர் நாவினால் நவில்வதே போதுமோ ?
  நீ தந்த கொள்கை விட்டுத்
தன்புகழ் பரப்பிடத் தாய்மொழி நலங்கெடத்
  தான்தோன்றித் தம்பி ரான்கள்
வன்பகை கக்கியே வழிமுறை மீறியே
  வாழ்கிறார் காணு கின்றோம்!

நீயிட்ட பிச்சையால் நிறைந்தளம் திருவோடு
  நீண்டநாள் நிலைக்கு மாறு
தாயிட்ட அறுசுவை உண்டிபோல் சுவைத்திடத்
  தகைமையாய்ப் பேணி வந்தோம்
சேயிட்ட கூச்சலைத் தொல்லையாய் மதியாது
  சீராட்டி வளர்த்த தாலே
பேயிட்ட பெரும்ஓலம் பிழையாகி நலிவுற்றுப்
  பெரியதோர் தீங்காய் மாறும்

எண்ணியன எய்திடும் இலட்சியம் மேலோங்க
  ஏறுபோல் நடப்ப தாலே
கண்ணிலே மலைகூடத் துரும்பாகத் தோன்றிடும்
  கடமையைச் செய்து தீர்வோம்
கண்ணியம் காப்பதால் கோழைகள் அல்லரெனக்
  காட்டுவோம் உரிய போழ்தில்
அண்ணனே உன்னடியை அணுவேனும் அகலாமல்
  அஞ்சாது பணிமு டிப்போம்!

✳ ✳

**கவிஞர் கருணாநந்தம்**



சென்ற இதழ்த் தொடர்ச்சி

# கரும்பு உற்பத்தியைப் பெருக்கிடுவோம்

ரெ. மா

## கரணைகள் நடுதல்

கரணைகளை நடும் பொழுது, கரணையின் பருக்கள் பக்க வாட்டில் இருக்கும்படி வைத்து நடுவது மிகவும் முக்கியமானதாகும்.

வெளிப்பக்கப் பார்களில் அதிகக் கரணைகளை இரு வரிசைகளாக நடவு செய்வது சிறந்தது. இவ்வாறு நடவு செய்தால், ஒரு மாதத்திற்குப் பிறகு இடைத் தரிசு ஏற்பட்டுள்ள இடங்களில் அதாவது கரணைகள் முளைக்காத இடங்களில் நடுவதற்குப் பயன்படும். அதிகமாக உள்ள முளைத்த கரணைகளைப் பிடுங்கி எடுத்து, முளைக்காத இடங்களில் நடலாம்.

## நீர்ப்பாசனம்

நிரந்தரமான நீர்ப்பாசன வசதி அளிப்பதே கரும்பில் அதிக மகசூல் பெறுவதற்குரிய ஏழாவது வழியாகும்.

நிரந்தரமான நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் மட்டுமே கரும்பு பயிரிடுதல் சிறந்தது. கரணைகளை நட்ட 7-வது நாள் உயிர்த் தண்ணீர் விட வேண்டும்.

கரணை முளைக்கும் காலத்தில் அதாவது நட்டு 35 நாட்கள் வரை, 7 முதல் 10 நாட்கள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

தூர் கிளைக்கும் காலத்தில் அதாவது நட்ட 36 முதல் 100 நாட்கள் வரை, 10 நாட்கள் இடைவெளியில் தண்ணீர் விட வேண்டும்.

வளர்ச்சிப் பருவத்தில் அதாவது நடவு செய்த 101 முதல் 270 நாட்கள் வரை, 7 நாட்கள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.



கரும்பு முதிர்ச்சி அடையும் பருவத்தில் அதாவது நடவு செய்த 270 நாட்களுக்கு மேல் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம்—நீண்ட இடைவெளியில் நீர் பாய்ச்சுதல் இலாபகரமானது.


பொதுவாக மழை ஈரம் போக, கரும்புக்கு 25 முதல் 30 முறை நீர் பாய்ச்ச வேண்டியிருக்கும்.

கரும்புக்குத் தண்ணீர் வசதி எவ்வளவு முக்கியமோ அது போல் வடிகால் வசதியும் முக்கியமானது. கரணைகள் 'முளைக்கும் காலத்திலும், கரும்பு வளரும் காலத்திலும் கரும்பு வயலில் தண்ணீர் தேங்கி நிற்காமல் வடித்து விட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

### மேல் உரம் இடுதல்

காலத்தில் மேல் உரம் இடுவது கரும்பு மகசூலைப் பெருக்குவதற்குரிய எட்டாவது வழியாகும்.

கரும்பு பயிரிடுவதற்கு முன்னுல் பயிர்ச் சுழற்சியில் ஒரு பசுந்தாளுரப் பயிர் வருமாறு திட்டமிட்டுச் சாகுபடி செய்வது சிறந்தது. குறுகிய காலப் பயிரான சணப்பையை விதைத்துப் பூக்கும் தருணத்தில் மடக்கி உழுது, பிறகு கரும்பு பயிரிடல் சிறந்தது. இது இயலவில்லையெனில், கரும்பு நடவுசெய்த பின் சணப்பையை ஊடு பயிராகச் சாகுபடி செய்து, அவைகளைப் பிடுங்கிக் கரும்புக்கு உரமாக வைக்கலாம். கரும்பு நட்ட 35 முதல் 45 நாட்களுக்குள் ஏக்கருக்கு 15 கிலோ சணப்பை விதையை க்ரும்பு பார்களுக்கு இடையில் விதைக்கவேண்டும். சணப்புப் பயிர் 45 நாள் வயதுடையதாக இருக்கும்பொழுது, அவைகளைப் பிடுங்கிக் கரும்புத் தூர்களில் வைத்து 2-வது முறையாக மேலுரமும் இட்டு, மண் அணைத்துத் தண்ணீர் விடுதல் வேண்டும்.



கரும்புக்கு மேலுரமிட மாவட்டத்திற்கு ஏற்றாற்போல் பின்கண்ட அளவில் தழைச் சத்து அளிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

| மாவட்டத்தின் பெயர் | ஏக்கருக்குப் பரிந்துரைககபடும் தழைச்சத்து (கிலோ) |
|---|---|
| தஞ்சாவூர், திருச்சி, தென்ஞர்க்காடு மாவட்டங்கள் | 112 |
| கோவை, சேலம், தருமபுரி, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் | 90 |
| மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்கள் | 75 |

மேலும் ஏக்கருக்கு 45 கிலோ சாம்பல் சத்தையும் மேற்கூறிய தழைச்சத்துடன் சேர்த்து மேலுரமாக இடவேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

மேற்கூறிய அளவு தழைச் சத்தையும், சாம்பல் சத்தையும் இருதடவைகளில் மேலுரமாக இட வேண்டும். கரும்பு நட்ட 45-வது நாள், முதல் முறையும், 90-வதுநாள் இரண்டாவது முறையும் ஆக மேலுரமிட வேண்டும்.

தஞ்சாவூர், திருச்சி, தென்ஞர்க்காடு மாவட்டங்களில் ஒவ்வொரு முறையும் மேலுரமிட பின்கண்ட அளவு இரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

| | கிலோ |
|---|---|
| அமோனியம் சல்பேட் | — 280 |
| அல்லது யூரியா | — 124 |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ் | — 41 |

கோவை, சேலம், தருமபுரி, வடஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் ஒவ்வொரு முறையும் மேலுரமிட பின்கண்ட அளவு இரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

| | கிலோ |
|---|---|
| அமோனியம் சல்பேட் | — 240 |
| அல்லது யூரியா | — 105 |
| மியூரியேட் ஆப்பொட்டாஷ் | — 41 |


மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒவ்வொரு முறையும் மேலுரமிட பின்கண்ட அளவு இரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.


| | கிலோ |
|---|---|
| அமோனியம் சல்பேட் | — 190 |
| அல்லது யூரியா | — 84 |
| மியூரியேட் ஆப்பொட்டாஷ் | — 41 |

இரண்டாவது தடவையாக மேலுரமிடுவதை 120 நாட்களுக்குள் வைத்துவிட வேண்டும். 120 நாட்களுக்குப் பிறகு மேலுரம் இடுதல் இலாபகரமானதல்ல! அளவுக்கு மேல் இரசாயன உரமிடுவதும், காலங்கடந்து மேல் உரமிடுவது சர்க்கரைச் சத்தைப் பாதிப்பதுடன், அறுவடைக் காலத்தை நீடிக்கச் செய்யும்!

### தோகைகள் மூலம் உரமிடல்

கரும்புத் தோகைகளில் யூரியா உரத்தைத் தெளிப்பதால் ஏக்கருக்கு 44 கிலோ தழைச்சத்து வரை மீதப்படுத்த முடியும் என்பது கடலூரில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் 3 ஆண்டு காலம் தொடர்ந்து நடத்திய சோதனைகளிலிருந்து தெரியவருகிறது. இதனுல் இரசாயன உரமிடும் செலவு கணிசமாகக் குறைகிறது!






ஏக்கருக்கு 112 கிலோ தழைச்சத்தை, இரு தடவைகளில் மண்ணில் இடுவதற்குப் பதிலாக, 45 கிலோ தழைச்சத்தை 45-வது நாளில் மண்ணில் இட்டும், 23 கிலோ தழைச்சத்தை (90-வது நாளும் 110-வது நாளும் ஆக இரு தடவைகளில்) யூரியா கரைசல் மூலமாக தெளித்தும்; ஆக 68 கிலோ தழைச்சத்தை மட்டும் பயன்படுத்தினுல் போதுமானது என்பது அச்சோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது!

மண்ணில் 112 கிலோ தழைச்சத்து அளித்தால், எவ்வளவு மகசூலும் சர்க்கரையும் கிடைக்குமோ அதே அளவு மகசூலும் சர்க்கரையும் 68 கிலோ தழைச்சத்தைப் பயன்படுத்தித் தோகைகளின் மூலம் யூரியா தெளிப்பதால் கிடைக்கிறது என்பது திட்டவட்டமாகத் தெரிய வந்துள்ளது!

இந்த முறையில் இரசாயன உரமிட 45-வது நாளில் 45 கிலோ தழைச்சத்தை அமோனியம் சல்பேட் அல்லது யூரியாவாக மண்ணில் இட வேண்டும் இரண்டாம் தடவை 45 கிலோ தழைச்சத்தை மண்ணில் இடுவதற்குப் பதிலாக 23 கிலோ தழைச்சத்தை மட்டும் யூரியா கரைசலாகக் கரும்பின் தோகை மீது தெளிக்க வேண்டும்.

23 கிலோ தழைச்சத்து அளிக்க 50 கிலோ யூரியா தேவைப்படும். 50 கிலோ யூரியாவை இரண்டு சமமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். 25 கிலோ யூரியாவை தண்ணீரில் கரைத்துக் கொண்டு கரும்பு நட்ட 90-வது நாள் தெளிக்க வேண்டும். 110-வது நாள் மீதி 25 கிலோ யூரியாவைத் தண்ணீரில் கரைத்து கரும்புத் தோகைகளின் மேல் தெளிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் 25 கிலோ யூரியாவை 1,000 லிட்டர் தண்ணீரில் கலந்து கொண்டு தெளிப்பான் (Sprayer) மூலம் கரும்புத் தோகைகளின் மேல் ஒரே சீராகத் தெளிக்க வேண்டும்.



### பின்செய் நேர்த்தி

முறையாக பின்செய் நேர்த்தி முறைகளை மேற்கொள்வது கரும்பு உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள ஒன்பதாவது வழியாகும்.

கரும்பு நட்டு மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குப் பிறகு களையெடுக்க வேண்டியது அவசியமாகும். முதல் களையெடுத்த பின்பு கரும்பு வரிசைகளுக்கிடையில் கரும்பின் காய்ந்த தோகைகளைப் போட்டு மூடுதல் நல்ல பயனளிக்கும். நிலத்தின் தன்மைக்கேற்ப கரும்பு வரிசைகளை ஒட்டி மீண்டும் ஒரு முறை களை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

இரண்டாவது முறை உரம் வைத்த பிறகு காய்ந்த தோகைகளை கரும்புக் குத்துகளுக்குப் பக்கவாட்டில் வைத்து பார்களை வெட்டி, கரும்பு குத்துகளுக்கு மண் அணைக்க வேண்டும். கரும்புத் தோகைகளைச் சேர்த்து விட்டம் கட்டிவிடுவதன்மூலம் கரும்புகள் சாய்ந்து சேதமாவதை தடுக்க முடியும்.

### பயிர்ப் பாதுகாப்பு

தகுந்த மருந்தைத் தக்க காலத்தில் தெளித்துக் கரும்பைப் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலிலிருந்து காப்பது, கரும்பு உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள பத்தாவது வழியாகும்!



(அ) குருத்துப் பூச்சி: இதைத் தடுக்க பின்கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. காமா 'பி.எச்.சி. 20 சத இ.சி. மருந்தை ஏக்கருக்கு 2 லிட்டர் வீதமும், 'ஹெப்டோகுளோர்' 20 சத இ.சி. மருந்தை ஏக்கருக்கு 2 லிட்டர் வீதமும் 900 லிட்டர் தண்ணீரில் கலந்து கரும்புக் கரணைகளின் மீது தெளிப்பதன் மூலம் குருத்துப் பூச்சியையும், கரையானையும் கட்டுப்படுத்த முடியும்.

2. 0.1 சத 'என்டரின்' (500 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிப்பது அல்லது ஏக்கருக்கு 4.8 கிலோ வீதம் 'லிண்டேன்' 10 சத குறுணைகளை இலைகள் தண்டுகளோடு இணைந்துள்ள பகுதிகளில் நடவு செய்த 3-வது வாரத்தில் தொடங்கி 21 நாட்களுக்கு ஒரு முறையாக 3 முறை இடவேண்டும்.

இப்பூச்சிகளின் முட்டைகளைச் சேதப்படுத்தும் 'டிரைகோகிரம்மா ஆஸ்ட்ராலிகம்' என்ற ஒட்டுண்ணிப் பூச்சியைக் கரும்பு பயிரிட்டுள்ள நிலத்தில் விடவேண்டும்.

(ஆ) மேல் குருத்துப் பூச்சி:

இதைக்கட்டுப்படுத்த கீழ்க் கண்ட முறைகளை மேற் கொள்ள வேண்டும்.

1. இப்பூச்சிகளின் முட்டைகளைச் சேகரித்து அழிக்கவேண்டும்; மற்றும் தாக்குண்ட பயிர்களைக் கையால் அகற்றி விட வேண்டும்.

2. தழைச்சத்து உரங்களை அதிக அளவில் இடவேண்டும்.

3. நிலத்தில் தண்ணீர், தேங்காமல் நல்ல வடிகால் வசதி அமைத்திட வேண்டும்.

4. இப்பூச்சிகளைக் கொல்லும் 'ஐசோடிமா ஜாவென்சிஸ் என்ற ஒட்டுண்ணிப் பூச்சியைக் கரும்பு வயலில் விடவேண்டும்.

5. நடவு செய்த 150-வது நாளிலும், மற்றும் 180-வது நாளிலும் 0.1 சத என்ட்ரின் (500 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

**(இ) இடைக்கணுக் குருத்துப் பூச்சி :**

இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த அடிக்கடி காய்ந்த இலைகளை உரித்து விடவேண்டும். பூச்சியின் முட்டைகளைச் சேகரித்து அழித்துவிட வேண்டும். பூச்சி தாக்கிய பயிர்களையும் அழித்துவிட வேண்டும்.

**(ஈ) செதில் பூச்சிகளும் மாவுப் பூச்சிகளும் :**


இவைகளை அழித்திட 0.1 சத மாலதியான் மருந்தை தெளிக்கவும். (200 மில்லி லிட்டர் மருந்துடன் 100 லிட்டர் தண்ணீர் கலக்கவும்).

**(உ) இலைப்பூச்சி :**

இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த மாலதியான் 0.05 சத மருந்தை (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீர் கலந்து) தெளிக்கவும். அல்லது ஏக்கருக்கு 15 கிலோ முதல் 20 கிலோ வரை பி. எச். சி. 5 சத மருந்தைத் தூவவும்.

**(ஊ) கரையான் :**

இவைகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 2 லிட்டர் 20 சத இ.சி. 'காமா பி.எச்.சி.' மருந்தைத் தெளிக்கவும். அல்லது ஏக்கருக்கு 2 லிட்டர் 'ஹெப்டாகுளோர்'



20 சத இ.சி. மருந்தை 900 லிட்டர் தண்ணீரில் கலந்து நடவின் பொழுது கரும்பு கரணைகளின் மீது தெளிக்கவும். அல்லது ஏக்கருக்கு 13 கிலோ 'ஹெப்டாகுளோர்' 3 சத மருந்தை நடவின்பொழுது தூவவும்.

**(எ) நோய்கள் :**

கரணைகளை, நடவின்பொழுது அரிடான் அல்லது அகலால் மருந்துகளில் நனைத்து நடவு செய்வதால் கரணை மூலம் பரவும் 'அன்னாசிப்பழ நோய்' கட்டுப்படுத்தப் படுவதோடு முளைப்புத் திறனும் அதிகரிக்கும். நோயுற்ற கரும்புப் பயிரில் இருந்து கரணைகளை எடுத்து நடவு செய்வதன் மூலம் கரிப்பூட்டை நோயைக் கட்டுப்படுத்தலாம். கரிப்பூட்டை நோய் தாக்கினால், பூட்டைகளை (சாட்டைகள்) கவனமுடன் கோணிப் பைகளில் சேகரித்து, ஒதுக்குப் புறமான இடத்திற்கு எடுத்துச் சென்று எரித்துவிட வேண்டும்.

**அறுவடை**

எல்லா வகைக் கரும்புகளிலும் பிப்ரவரி-மார்ச் மாதங்களில் சர்க்கரைச் சத்து மிகுதியாகக் காணப்படும். எனவே, ஏப்ரல் மாதத்திற்கு முன்பு கரும்பை அறுவடை செய்து விட வேண்டும். கட்டை கரும்பை, நடவு கரும்பைவிட ஒரு மாதத்திற்கு முன்பாக அறுவடை செய்துவிடலாம். அறுவடையின் பொழுது கரும்புகளைத் தரை மட்டத்துக்கு வெட்டிவிட் வேண்டும்.



கரும்பு மகசூலைப் பெருக்குவதற்குரிய மேற்கூறிய, 10 வழி முறைகளையம் மேற்கொண்டு கரும்பு சாகுபடி செய்தால், ஒரு ஏக்கரில் குறைந்தது 40 மெட்ரிக் டன் கரும்பு விளைவிக்க முடியும். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஒரு சில உழவர் பெருமக்கள் கரும்பு விளைச்சல் போட்டியில் பங்கு கொண்டு ஏக்கருக்கு 100 மெட்ரிக் டன் வரை கரும்பு விளைவித்துக் காட்டி அதற்குப் பரிசாக தங்கப் பதக்கமும், சான்றிதழும் பெற்றுள்ளார். எனவே, மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு கரும்பு உற்பத்தியைப் பெருக்கி உங்கள் வருவாயையும், நாட்டின் பொருளாதாரத்தையும் பெருக்கிடுங்கள் என்று கரும்பு பயிரிடும் தமிழக உழவர் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.



# குடும்பம்

நேற்று இருந்தவர் இன்று இல்லை என்னும் பெருமையுடையது இந்த உலகம் என்றார் திருவள்ளுவர்.

உங்கள் மனைவி மக்களின் நலனைப் பாதுகாக்க இன்று நீங்கள் இருக்கிறீர்கள். எதிர்பாராத விதமாக உங்களுக்கு ஏதாவது நேர்ந்து, நீங்கள் இல்லாது போனால் என்ன ஆவது? எனவே உங்களது மகனின் உயர் கல்வி, மகளின் திருமணம், குடும்ப நலன் ஆகியவற்றிற்கு நீங்கள் இருந்தாலும், இல்லாது போக நேர்ந்தாலும் உதவ எல். ஐ. சியின் **பல நோக்கப் பாலிசி (மல்ட்டி பர்ப்பஸ் பாலிசி)** மூலம் வகை செய்யுங்கள். இப் பாலிசி பற்றிய விவரங்களறிய இன்றே ஒரு எல். ஐ. சி. முகவரை அல்லது அருகிலுள்ள எல். ஐ. சி. அலுவலகத்தை நாடுங்கள்.


**ஆயுள் இன்சூரன்சு போல**
**ஆதரவு தருவது எதுவுமே இல்லை.**

EP LIC-9-73

# பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சி




சென்னை தீவுத் திடலில் பொங்கல் சுற்றுலா விழாப்பொருட்காட்சியை 7—1—1974ல் முதல்வர் கலைஞர் தலைமையில் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் திறந்து வைத்தார்கள்.





சுற்றுலா விழாப் பொருட்காட்சியில் தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் உருவாக்கப்பட்டுள்ள 'பூம்புகார்' கலைக்கூட அரங்கின் வெளித் தோற்றமும் உள் தோற்றமும். (தஞ்சை மாவட்டத்தில் உள்ள பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக் கூடத்தின் மாதிரித் தோற்றம் இது என்பது குறிப்பிடத் தக்கது)







# கோவை மக்களின் கனவு நனவாகியது!

கோயம்புத்தூர் நகராட்சி எல்லைக்குள், சேலம்—கொச்சிச் சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண். 47) கிலோ மீட்டர் 157/8-ல் இருந்து வந்த இருப்புப் பாதைக் கடப்பிற்குப் (Level Crossing) பதிலாக, ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தைப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையில் முதல்வர் கலைஞர் அவர்கள் 10—1—1974-ல் திறந்து வைத்தார்கள்.

**இம் மேம்பாலம்** கட்டப்படுவதற்கு முன்னிருந்த இருப்புப்பாதைக் கடப்பி, சாலைப் போக்குவரத்திற்கு விளைவித்த இன்னல்களும், இடர்ப்பாடுகளும் சொல்லுந்தரமன்று. இவ்விருப்புப்பாதைக் கடப்பி, ஒரு நாளைக்கு 34 தடவைகள் மூடப்பட்டு, போக்குவரத்திற்குத் தடை பெரிதும் விளைந்தது. 1951—52 ம் ஆண்டுகளுக்கு முன்னர், அவிநாசிச் சாலையில் அமைந்த இம் மட்டக்கடப்பி இருக்கும் இரயில் பாதை, மேட்டுப்பாளையம் மட்டும் செல்லும் புகை வண்டிகளுக்கான பாதையாக இருந்தது. இது 51 — 52 ம் ஆண்டில் பீளமேடு, சிங்காநல்லூர் இரயில் நிலையங்கள் திறக்கப்பட்டு, சென்னை செல்லும் புகை வண்டிகளும் உடன் செல்லும் முதன்மைப் பாதையாகப் பொலிவு பெற்றது. அன்றியும் கடந்த இருபதாண்டுகளில் இரயில் போக்குவரத்து பன்மடங்கு பெருகியதால், இம் மட்டக் கடப்பி தொடக்கத்தில் ஒரு நாளைக்கு 8 தடவைகள் மூடப்படும் நிலையிலிருந்து மாறி ஒரு நாளைக்கு 34 தடவைகள் மூடப்படும் நிலையினை அடைந்தது. இவ்வாறே கடந்த இருபதாண்டுகளில் இம் மட்டக் கடப்பியினைக் கடந்து செல்லும் சாலைப் போக்குவரத்தின் எண்ணிக்கையும், அமைப்பு வகையும், அவை ஏற்றிச் செல்லும் பளுக்களின் நிறையும் பெருமளவில் முன்னேறியுள்ளன. கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் அளவையில் இம் மட்டக்கடப்பியினைக் கடந்து சென்ற கார்கள் சுமார் 500; லாரி, வேன் போன்ற வணிக ஊர்திகள் சுமார் 400; மாட்டு வண்டிகள் சுமார் 600; சைக்கிள்கள் சுமார் 5000; நடந்து செல்வோர் சுமார் 10000. ஆனால் இன்று ஒரு நாள் அளவையில் இக் கடப்பியின் ஊடே கடந்து செல்லும் வாகனங்களின் எண்ணிக்கை, கார்கள் சுமார் 6000; லாரி, வேன் போன்ற வணிக ஊர்திகள் சுமார் 2000, மாட்டு வண்டிகள் 1000; சைக்கிள்கள் 17000; நடந்து செல்வோர் 60000. அன்றியும், இக் கடப்பி ஒவ்வொரு தடவையும் கால்மணி நேரத்திற்கும் அதிகமாக மூடப்பட்டதன் காரணமாக, கடப்பி வாயிலின் இரு புறமும் சாலைப் போக்குவரத்துத் தடைப்பட்டு, வண்டிகள் சாரி சாரியாக இரு பக்கமும் இரு பர்லாங் தூரத்திற்கும் மேல் தேங்கி நின்றன. இத் தேக்கம் கலைவதற்குள் மீண்டும் வண்டிகள் வந்த வண்ணமே இருந்ததால், போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டு மக்களின் உழைப்பு நேரம் பெரிதும் பாழ்பட்டது. எனவே பெருகி வரும் போக்குவரத்துத் தேவையினை நிறைவு செய்வதற்காகவும். மக்களின் இன்னல்களும், இடர்ப்பாடுகளும் நீங்கி, ஊர்திகள் கால விரையமின்றிச் செல்லுவதற்காகவும். **கோவைப் பெருமக்களின் நெடு நாளையக் கனவு நனவாகும் வகையில்** இம் மேம்பாலம் தமிழ்நாடு அரசினரால் கட்டப்பட்டுள்ளது.

இப் பொறியியற் சாதனை இந்தியாவிலேயே முதலாவதான மேம்பாலம் மற்றும் சுரங்கப் பாதையாக, ஈரடுக்குப் போக்குவரத்து ஒழுங்கை வட்டத்துடன் புது அமைப்புக் கொண்டு கட்டப்பட்டுள்ளது.



# புதுக்கோட்டை காண வாரீர்!

கே. வி. சுப்பையா, எம்.எல்.ஏ.
(தலைவர்: வேளாண் தொழிற் கழகம்)

சூரியனுக்கு விழா எடுக்கிற நல்ல நாளிலேயே, புதுக்கோட்டை மாவட்டமும் உதயமாகிறது. 14-1-1974 லேயே சட்டப்படி மாவட்டம் ஆகிவிட்டாலும் 20-1-1974-ல் அமைச்சர்கள் பலரின் பாராட்டுதல்களோடு மாண்பு மிகு முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் புதுக்கோட்டைப் பகுதி மக்கள் எவ்வளவோ முயன்றும் கிடைக்காத புதுக்கோட்டை மாவட்டம், கலைஞர் தலைமையிலான தமிழக அரசில்தான் கிடைத்திருக்கிறது. அதற்காகத் தமிழக அரசிற்கும், டாக்டர் கலைஞர் அவர்கட்கும் அந்தப் பகுதி மக்கள் பெரிதும் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அவர்களோடு சேர்ந்து நமது அரசை நானும் பாராட்டுகிறேன்.

ஏற்கெனவே புதுக்கோட்டை அரசாக இருந்த ஆலங்குடி, குளத்தூர், திருமயம் தாலுக்காக்களோடு, அறந்தாங்கி தாலுகா முழுமையும், பட்டுக்கோட்டை தாலுகாவில் சில கிராமங்களும், ஒரத்த நாடு தாலுகாவில் சில கிராமங்களும் சேர்ந்து புதுக்கோட்டை மாவட்டமாக அமைகிறது.

புதுக்கோட்டை நகர அமைப்பைப் போல் வேறு எங்கும் காண முடியாது. புதுக்கோட்டை மன்னரின் பழைய அரண்மனையையும், பல்லவன் குளத்தையும் மையமாகக் கொண்டு புதுக்கோட்டை நகரம் அமைந்திருக்கிறது. புதுக்கோட்டை நகர வீதிகள் தாயக் கோட்டைப் போல ஒரு வீதியை இன்னொரு வீதி குறுக்கே மறித்துச் செல்லுகிற அளவிற்கு வீதிகள் ஒழுங்காகவும், அழகாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

புதுக்கோட்டை பொது அலுவலக (Public Office) கட்டடங்களும், மன்னரின் புது அரண்மனையும் மன்னர் கல்லூரியும் சிறந்த காட்சிப் பொருள்கள். ஒரு மைல் சுற்றளவுள்ள புதுக் குளம் மாலை நேரங்களில் உலாவச் செல்வோருக்கு ஒரு நல்ல இடம். புதுக்கோட்டையில் ஒரு நல்ல அரும்பொருட் காட்சியகமும் உண்டு.

புதுக்கோட்டையில் ஆண்கள் கல்லூரி, பெண்கள் கல்லூரி, ஆசிரியர்கள் கல்லூரிகளுமுண்டு.

ஆத்திகர்களுக்கும், பக்தர்களுக்கும் ஏற்ற வகையில் புராதனமான திருக்கோகர்ணம் கோயிலும், சாந்தாரம்மன் கோயிலும் உண்டு. பிரசித்தமான அதிட்டானம் அங்கே அமையப் பெற்றிருக்கிறது. இங்கு ஆண்டுக்கு ஒரு முறை பல்வேறுமாநிலங்களிலிருந்தும் மக்கள் வந்து கூடுகின்றனர்.

இது தவிர, மலைமேல் வீற்றிருக்கிற விராலிமலை—முருகன் கோவிலும், குமர மலையில் வீற்றிருக்கிற குமரன் கோவிலும் புதுக்கோட்டைப் பகுதிக்கு அழகு சேர்ப்பனவாகும்.

சித்தன்னவாசல் மிகவும் பெருமை வாய்ந்த ஒன்று. 1200 ஆண்டுகளுக்கு முன் தீட்டப்பட்ட வண்ணப் பூச்சு இன்றைக்குப் பூசப்பட்ட பூச்சைப் போல் இருக்கிறதென்றால் அதன் பெருமை நன்கு விளங்கும். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகும் இது தப்பி நிற்கிறது. என்னென்ன சாறுகள் எடுத்து, என்ன கலவையில் கலந்து பூசி இருக்கிறார்கள் என்பதை நினைக்கின்றபொழுது வெளிநாட்டுக்காரர்களெல்லாம் வியந்து போகிறார்கள்.

அடுத்தபடியாகக் குடுமியாமலை. அங்கே அண்ணா பண்ணை மிக நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தமிழக அரசு அதை இன்னும் வளர்ச்சியுறச் செய்யும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. அண்ணா பண்ணையும் புதுக்கோட்டை மாவட்டத்தின் அழகுக்கு அழகு சேர்ப்பதாகும்.

குடுமியாமலை மலைச் சரிவில் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவை இசையைப் பற்றிய கல்வெட்டுக்கள். பண்களைப் பற்றியும், அவைகளின் சட்ட திட்டங்களைப் பற்றியும் கல்வெட்டுக்களில் எழுதப்பட்டிருக்கின்றன. இது எங்கேயுமில்லாத ஒன்று.

அடுத்தபடியாக, நார்த்தாமலை. சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் இங்கே கிடைக்கின்றன.

குன்றாண்டார் கோயில் கல்ரதம் எல்லாரையும் கவர்ந்திழுக்கக் கூடிய ஒன்றாகும்.

புதுக்கோட்டைப் பகுதியில் சுமார் 1500 கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அவைகளில் சுமார் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுக்கள் பல உள்ளன. திருமயம் வட்டம் சித்தூரிலும், மேலத்தானியத்திலும், குளத்தூர் வட்டம் நார்த்தாமலை, திருவேங்கைவாசல், திருவிளங்குடி முதலிய இடங்களிலும் காணும் கல்வெட்டுக்களில் இராஜராஜனைப் பற்றியும், அவனுடைய வெற்றிகளைப் பற்றியும் சொல்லப்படுகிறது.

'அதில், ''திருமகள்போல நிலச் செல்வியும் தனக்கே யுரிமை பூண்டமை மநக்கொள் காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி, கங்கபாடியும், நுளம் பப்பாடியும், வெங்கைநாடும், தடிகவழியும், கொல்லமும், கலிங்கமும், எண்டிசை புகழ் தர, ஈழமண்டலமும், இரட்ட பாடி ஏழரை இலக்கமும், திண்டி நல்வென்றி''—என்று காந்தளூர்ச் சாலை கலமறுத்த செய்திகள் எல்லாம் கிடைக் கின்றன.


புதுக்கோட்டைப் பகுதி, புதை பொருள் ஆராய்ச்சிக் காரர்கள் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய வேண்டிய ஒரு பகுதி யாகும்.

கொடும்பாளூர் மிகப் பழங் காலத்து வேளிர் மன்னர்கள் ஆண்ட இடம். அந்த இடங் களை அகழ்ந்து பார்த்து ஆராய்ச்சி செய்யலாம்.

இது தவிர, புதுக்கோட்டை நகரத்திற்குக் கிழக்கே ஐந்து மைல் தொலையில் பொற்பனைக் கோட்டை என்று ஓர் இடம் இருக்கிறது. இப்பொழுது கோட்டை இல்லை. மண் மேடு களாக இருக்கின்றது. அது, சோழர்களுக்கு முன்னுள்ளவர் கள் கோட்டை கட்டி வாழ்ந்த இடமாக இருக்க வேண்டும். கல்லாலும் இரும்பாலும் கோட்டை கட்டி வாழலாம் என்று நினைக்காத காலத்தில், மண்ணாலேயே கோட்டை கட்டி வாழ்ந்திருக்கிறார்கள். அந்தக் கோட்டையின் நான்கு வாசல் களிலும் இன்றைக்கும் காவல் தெய்வங்கள் புகழோடு விளங் குவதாக இப் பகுதி மக்களிடம் ஒரு நம்பிக்கை நிலவுகிறது. இந்த இடத்தையும் புதை பொருள் ஆராய்ச்சிக்காரர்கள் கவனித்தால் நிறையச் செய்தி கிடைக்கலாம்.

இவ்வளவும் புதுக்கோட் டைக்கு அணி சேர்க்கின்றன. விடுபட்டது இன்னும் எத்த னையோ உண்டு.

இவைகளுக்கு மேலும் எழில் சேர்த்திட, அறந்தாங்கித் தாலுகா ஆவுடையார் கோவி லும் இப்பொழுது சேர்ந்திருக் கிறது. அந்தக் கோவிலின் திருப்பணியைப் போல வேறு எங்கும் பார்த்திட முடியாது. புளிய ஆக்கையை முறுக்கி விடு வது போல் கல்லை முறுக்கி விட்டுக் கட்டி இருக்கிறார்கள். மாணிக்கவாசகரால் கட்டப் பட்ட இந்தக் கோவிலின் பெரு



நீதி மன்றக் கட்டடம் (Public Office)

மையைப் பற்றி எல்லாருக்கும் தெரியும்.

திருச்சி, மதுரை மாவட்டங் களைப் போலல்லாமல், புதுக் கோட்டை மாவட்டத்திற்கு இப்பொழுது கடற்கரையும் சேர்ந்திருக்கிறது. கடற்கரை யைச் சீர்திருத்தம் செய்தால் நிறைய வருமானம் வருவ தற்கு வாய்ப்பிருக்கிறது. கடல் மூலம் ஏராளமான பொருள்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

புதுக்கோட்டைக்கும் மாண்பு மிகு முதல்வர் கலைஞர் அவர் களுக்கும் நெருங்கிய பந்த பாசம் உண்டு. புதுக்கோட் டைப் பொதுக் கூட்டத்தில் பேசிகொண்டிருக்கும் பொழுது அவருடைய முதல் மனைவியார் பற்றிய சோகச் செய்தி தந்தி மூலம் அவருக்கு எட்டியது. கலைஞர் அவர்கள், மனைவி யார் இறந்த செய்தி கேட்டும், இறுதி வரை அமைதியோடு இருந்து கூட்டத்தை முடித்துக் கொண்டுதான் பிறகு திரு வாரூர் சென்றார்கள். இடையே





நாங்கள் எல்லாம் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் அவர்கள் போக மறுத்து விட்டார்கள். கழகத்தின் மீது அவர்களுக் குள்ள பற்றும் பாசமும் கட மையுணர்வும் தானே இதற்குக் காரணம்?

புதுக்கோட்டையில் ஆண் டுக்கு ரூ. 20 இலட்சம் செலவு செய்யக்கூடிய புஞ்சை வளர்ச்சித் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் முதல்வர் அவர்கள்.

அவர்கள் காலத்திலேயே புதுக்கோட்டை மாவட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்து, அம் மாவட்டத்தை அவர்கள் கை யாலேயே துவக்கி வைப்பது சாலப் பொருத்தமுடைய தாகும்.

முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கட்குப் புதுக்கோட்டை மக்களின் சார்பில் எனது நன்றி யையும் வணக்கத்தையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

# புதுக்கோட்டை தரும் பொது வரலாறு

நா. அமிர்தலிங்கம்

இன்றையப் புதுக்கோட்டைப் பகுதிகளை அடக்கியுள்ள பகுதி தமிழகத்தின் தொன்மையான பகுதிகளில் ஒன்றாகும். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே இந்தப் பகுதியில் குரும்பர், வேடர் போன்ற பழங்குடி மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. பழங்குடி மக்களின் மலைவாழ் இடங்கள் பல நார்த்தாமலை, செவலிமலை, குடுமியாமலை போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. முதுமக்கள் தாழிகள் சில புதுக்கோட்டைக் கருகில் கிடைத்துள்ளன.

**சங்க காலம் :**

சங்க காலத்தில் தமிழகம் பன்னிரண்டு பிரிவுகளாக அழைக்கப்பட்டது. அதில் பன்றிநாடு என்பது ஒன்று. அது பாண்டிய நாட்டிற்கும் புனல் நாட்டிற்கும் நடுவில் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. இந்தப் பன்றிநாடு முன்னாள் புதுக்கோட்டையின் பகுதி என்று கருதப்படுகிறது. புறநானூற்றில் ஒல்லையூர் நாட்டைப்பற்றியும் அதன் தலைநகர் ஒல்லையூர் (ஒலியமங்கலம்) பற்றியும் ஒல்லியூர்க்கிழான் மகன் பெருங்காத்தான் பற்றியும் குறிப்பிடப்படுகிறது. அகநானூற்றில் அலும்பில் நாடு பற்றிக் குறிப்பிடப்படுகிறது. அது தற்போது உள்ள அம்புகோயில் என்று சொல்லப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் கொடும்பை (தற்போதுள்ள கொடும்பாளூர்) உறையூர் மதுரை பெருவழிப்பாதையில் அமைந்திருந்ததாகக் குறிப்புக் காணக்கிடைக்கிறது. சோழ நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் தொன்று தொட்ட எல்லையாக அமைந்திருந்தது வெள்ளாறு. இந்த ஆற்றின் தென்பகுதி பாண்டிய நாடாகவும் வடபகுதி சோழ நாடாகவும் இருந்தது. இந்த இரண்டு பகுதிகளையும் உள்ளடக்கிப் புதுக்கோட்டை அமைந்துள்ளது. புதுக்கோட்டையின் நடுப்பகுதியில் மேற்கு கிழக்காக வெள்ளாறு ஓடுகிறது. இந்தப் பகுதியில் வேளிர் மன்னர்கள் சிலர் ஆட்சி புரிந்தார்கள். வேள் எவ்வி என்ற வேளிர் மன்னனின் பகுதியாக மிலாலை அல்லது முத்தூர் கூற்றம் என்பது இந்தப் பகுதியாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இந்தப் பகுதியில் பண்டைக் காலத்தில் வெளிநாட்டு வாணிபம் சிறந்து விளங்கியது. ரோமநாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்டதை நிரூபிக்கும் வகையில் கருக்கா குருச்சி என்ற ஊரில் 1898-ல் பல ரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த நாணயங்களில் ரோமச் சக்ரவர்த்திகளான அகஸ்டஸ் சீசர், காலிகூலா, நீரோ போன்றவர்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த நாணயங்கள் இப்போது பிரிட்டிஷ் மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் சமண, புத்த மதங்கள் ஒரு காலத்தில் மிகவும் சிறப்புற்றிருந்தன. அவர்களின் பள்ளிகள் குகைச் சிற்பங்கள் ஆகியவற்றிற்கான சின்னங்கள் பல இன்றும் சித்தன்னவாசல், தேனிமலை, நார்த்தாமலை, ஆளுருட்டிமலை முதலிய இடங்களில் காணப்படுகின்றன.

**பல்லவர் காலம் :**

பல்லவர்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுச்சி பெற்றபோது தென்னாடு அவர்களது ஆட்சிக்குள் வந்தது. புதுக்கோட்டைப் பகுதியும் பல்லவர் ஆட்சிக்குள் வந்தது. இவர்களது ஆட்சிக் காலத்தில்தான் சித்தன்னவாசல் ஓவியங்கள் தீட்டப்பட்டன. திருமயம் கல் வெட்டுக்களில் மகேந்திர வர்ம பல்லவன் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. பல்லவர்கள் காலத்தில் தமிழகத்திற்கு வந்த யுவான் சாங் என்ற சீன யாத்திரீகர் புதுக்கோட்டைப் பகுதியைப்பற்றி மோலே-கின்-சீ (மிலாலைக்கூற்றம்) என்று குறிப்பிடுகின்றார். இந்தப் பகுதியில் முத்தரையர்கள், பல்லவராயர்கள் போன்ற சிற்றரசர்களின் ஆட்சி ஏற்பட்டிருந்தது என்றும் தெரிய வருகிறது.

**சோழப் பேரரசு :**

பிற்காலச் சோழப் பேரரசு எழுச்சி பெற்றபோது புதுக்கோட்டைப் பகுதி சோழர் ஆட்சிக்குள் வந்தது. கொடும்பாளூரில் அமைந்துள்ள மூவர் கோயில் சோழர்களின் சிறந்த சின்னமாக அமைந்துள்ளது. வெள்ளனூரில்உள்ள அகஸ்தீஸ்வரர் கோயில், புவலைக்குடியில் உள்ள புஷ்பவனேஸ்வரர் கோயில், திருவெண்கை வாசலில் உள்ள வியாக்ரபுரீஸ்வரர் கோயில் ஆகியவை சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோயிகளாகும்.

இரர்ஜேந்திர சோழன் காலத்தில் புதுக்கோட்டையில் தென் பகுதி இராசேந்திர சோழ வள நாட்டின் பகுதியாயிற்று. இப் பகுதிகளை ஆண்டவர்கள் சோழபாண்டிய மன்னர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

**பாண்டியர் எழுச்சி :**

சோழர் ஆட்சி வலிகுன்றிய போது பிற்காலப் பாண்டியர் வலிமை பெற்றார்கள். சடையவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் வெள்ளாறு வரை பாண்டிய நாடு உருவாயிற்று. மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் சோழ நாடும்

பாண்டியர்களின் ஆட்சிக்குள் வந்தது. நெய்வாசல் கல்வெட்டுக்களில் இந்தப் பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சி பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

**சுல்தான்கள் ஆட்சி :**

பாண்டியர் ஆட்சி வெகு காலம் நீடிக்கவில்லை. பாண்டிய நாட்டின் அரசு உரிமைக்கான உள் நாட்டுப் போராட்டம் எழுந்தது. அப்போது டெல்லி சுல்தானின் தளபதியான மாலிக்காபூர் தமிழகத்தின் மீது படையெடுத்தான். பழம் பெரும் கோயில்களும் நகரங்களும் • கொள்ளையிடப்பட்டன. புதுக்கோட்டைப் பகுதியும் இந்தப் படையெடுப்பால் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. கொடும்பாளூர்ப் பகுதியில் பல கோயில் சிற்பங்களும், நார்த்தாமலை, அன்னவாசல் பகுதியில் பல சமணச் சின்னங்களும் அழிக்கப்பட்டன. மதுரையில் பாண்டியர் ஆட்சி மறைந்து சுல்தான்கள் ஆட்சி ஏற்பட்டது. ராங்கியத்திலுள்ள கல்வெட்டுக்களில் இந்த சுல்தான்கள் ஆட்சியில் புதுக்கோட்டைப் பகுதி மக்கள் பட்ட அவதி விவரிக்கப்பட்டுள்ளது.

**விஜயநகர வல்லரசு :**

விஜயநகரப் பேரரசு எழுச்சி பெற்றதும் தெற்கே சுல்தான்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. மதுரை, தஞ்சை அரசுகள் நாயக்க அரசுகளாக மாறின. புதுக்கோட்டைப் பகுதி மதுரை நாயக்கர்களின் ஆட்சிப் பகுதியாயிற்று. திருமலை நாயக்கர் காலத்தில் தெற்கே பீஜப்பூர், கோல்கொண்டா, சுல்தான்களின் படையெடுப்பு ஏற்பட்டது. அதனால் புதுக்கோட்டைப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டது. மதுரைச் சொக்க நாத நாயக்கர் காலத்தில் தஞ்சை நாயக்கருடன் போர் ஏற்பட்டுத் தஞ்சை அரசு அழிந்தது. அங்குப் பின்னல் மராத்திய அரசு எளிதில் ஏற்பட வழியுண்டாயிற்று. மதுரை நாயக்க ஆட்சியும் பல வீனமடைந்தது. பாளையக்காரர்கள் பலர் சுயேச்சை பெற்றனர். இராமநாதபுரம், சிவகங்கை அரசுகள் தோன்றின.

**தொண்டைமான் ஆட்சி :**

புதுக்கோட்டை அரசை நிறுவிய தொண்டைமான்களின் வரலாறு பற்றி ராய தொண்டைமான் அனுராக மாலை, தொண்டைமான் வம்சாவளி என்ற தெலுங்கு நூல்கள் போன்றவற்றின் மூலம் ஓரளவு தெரிந்து கொள்ளலாம். தொண்டைமான்களின் மூதாதையார் திருமலையிலிருந்து வந்து இப் பகுதியில் குடியேறிய கள்ளர் குடியினர் என்றும் அவர்களின் முதல்வரின் பெயர் திருமலைத் தொண்டைமான் என்றும் சொல்லப்படுகிறது. பல்லவ நாடு அல்லது தொண்டை நாட்டிலிருந்து குடியேறியதால் இவர்கள் தொண்டைமான்கள் என்ற பெயர் பெற்றனர். இவர்கள் ஆதியில் அம்புகோவில் அல்லது அழும்பில் என்ற இடத்தில் குடியேறி அம்பு நாடு என்கிற சிறு பகுதியைத் தன்னுட்சி செய்தனர். விஜயநகரப் பேரரசர் ஸ்ரீரங்கராயர் காலத்தில் அவரது பட்டத்து யானை மதங்கொண்ட போது அதனை அடக்கியதற்காக அவர்களுக்கு ராய தொண்டைமான்கள் என்ற பெயர் தரப்பட்டதாகவும் கர்ண பரம்பரையான வரலாறுகள் சொல்லப்படுகின்றன.

இவர்களில் முதல் தொண்டைமானுக விளங்கியவர் ரகுநாத ராய தொண்டைமான் (கி.பி. 1686—1730) மதுரை ரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கர் காலத்தில் அவருக்குச் செய்த உதவிக்காக 'அரசுக் காவல்காரர்' என்ற பட்டப் பெயர் இவர் பெற்றுர். இராமநாதபுரம் அரசரான கிழவன் சேதுபதிக்கு இவரது தங்கையை மணம் முடிக்கப்பட்டது. சேதுபதி பல்லவ ராயரை வென்று அவர்களது ஆட்சிப் பகுதியைத் தொண்டைமானுக்கு அளித்தார். பின்னர் தஞ்சையில் மராத்திய ஆட்சி ஏற்பட்டபோது மராத்தியருக்கும் மதுரை நாயக்கருக்கும் சண்டை ஏற்பட்டது. அதில் மதுரை நாயக்கருக்கு உதவியாகத் தொண்டைமான் இருந்தார். கிழவன் சேதுபதிக்குப் பிறகு இராமநாதபுரம் ஆட்சி பற்றி ஏற்பட்ட போட்டியில் தொண்டைமான் கலந்து கொண்டதால் திருமயம் பகுதி இவர் ஆட்சிக்குள் வந்தது. இதே சமயம் கொளத்தூரில் ஆட்சி செய்த இன்னெரு வகைத் தொண்டைமான் ஆட்சி முடிவுக்கு வந்து அப் பகுதியும் புதுக்கோட்டையுடன் சேர்க்கப்பட்டது. இவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர் விஜய ரகுநாத ராய தொண்டைமான் (கி.பி.

சந்தாசாகியைத் தொண்டைமான்கள் இதனுல் வெறுத்தனர். இந்தப் பகை, கடைசி வரை நீடித்தது. இந்தச் சமயம் மராத்தியர் திருச்சி மீது படையெடுத்து வந்து சந்தாசாகியைக் கைது செய்து தங்களுடன் சதாராவுக்குக் கொண்டு சென்றுர்கள். இந்தப் போரில் சந்தா சாகிபுக்கு எதிராகத் தொண்டைமான் மராத்தியருக்கு உதவி செய்தார். பின்னர் ஆர்க்காட்டு நவாபு பதவிக்காகப்போட்டி ஏற்பட்டது. இந்தப் போட்டியில் நமது நாட்டிற்கு வாணிபம் செய்யச் சென்னையிலும் புதுச்சேரியிலும் குடியேறியிருந்த ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் தலையிட்டனர். மராத்தியரிடம் கைதியாக இருந்த சந்தாசாகிபை மீட்டு வந்து அவனை ஆர்க்காட்டு நவாபாக ஆக்கினர் பிரெஞ்சுக்காரர். ஆங்கிலேயர் பழைய நவாபின் மகன் முகமதலியை ஆதரித்தனர். இதனுல் பல போர்கள் ஏற்பட்டன. இதில் முக்கியமானது திருச்சி முற்றுகையாகும்.

## அரண்மனையில் அலுவலகங்கள்

புதுக்கோட்டை மன்னர் வாழ்ந்த புதிய அரண்மனையைத் தமிழக அரசு ரூ. 32 இலட்சத்திற்கு விலைக்கு வாங்கியுள்ளது. இவ்வரண்மனையின் மொத்தப்பரப்பு 99·4 ஏக்கர். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இங்குதான் அமைக்கப்பட்டுள்ளது.

## பல்லவராயன் சீமை

புதுக்கோட்டைப் பகுதி சிலகாலம் பல்லவராயன் சீமை என்று பெயர் பெற்றிருந்தது அதை ஆட்சி செய்த மன்னர்கள் பல்லவராயர் என அழைக்கப் பெற்றனர். அங்கு ஆட்சிபுரிந்த கள்ளர்கள், செந்தலை முதலிய இடங்களில் சிற்றரசர்களாகவும், பல்லவர்களுடைய படைத் தலைவர்களாகவும் இருந்து வந்த பழங்குடி மக்களேயாவர். ஆதலின் பல்லவர்களின் விருதுப் பெயர்களை அவர்களும் சூட்டிக் கொண்டனர்.

திருச்சிக் கோட்டையில் தங்கியிருந்த முகமதலியை சந்தா சாகிப், பிரெஞ்சுக்காரர் உதவியுடன் முற்றுகையிட்டான். சந்தா சாகிபின் பழைய பகைவரான தொண்டைமான் முகமதலிக்கு உதவினார். முகமதலிக்கு உதவிக்குவந்த ஆங்கிலேயரும் தொண்டைமானின் நண்பர்களானார்கள். இந்த நட்பு கடைசி வரை நீடித்தது. இந்தப் போரின் முடிவில் சந்தா சாகிப் கொல்லப்பட்டு முகமதலி நவாபாக உறுதி செய்யப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த பிரெஞ்சுப் படைத் தளபதி மெயின்வில்லி புதுக்கோட்டைப் பகுதியில் புகுந்து மிகுந்த நாசத்தை விளைவித்தான். மேஜர் லாரன்.ஸ் என்ற ஆங்கிலத் தளபதி புதுக்கோட்டைக்கு உதவியாக ஒரு படையுடன் வந்து பிரெஞ்சுப் படையை தோற்கடித்து விரட்டினான். இதனால் ஆங்கிலேயருடன் தொண்டைமான் நட்பு வலுப்பட்டது. புதுக்கோட்டை அரசு செய்த உதவிக்காக நவாபுக்கு எந்தக் கப்பமும் கட்டவேண்டியதில்லை என்கிற சலுகையும் அளிக்கப்பட்டது. பிரெஞ்சுக்காரர்கள் புதுக்கோட்டைக்குப் பகைவர்கள் ஆனார்கள். தஞ்சையை பிரெஞ்சுப் படை தளபதி லாலி தாக்கியபோது தொண்டைமான் தஞ்சை அரசருக்கு உதவினார். சென்னையைப் பிரெஞ்சுக்காரர் தாக்கிய போதும் புதுக்கோட்டை அரசர் ஆங்கிலேயருக்கு உதவியாக ஒரு பண்டையை அனுப்பி வைத்தார். இந்த விவரங்கள் பல அக்காலம் அமைச்சராகப் பணியாற்றிய சுப்பிரமணிய முதலியாரைப் பற்றிப் பாடப்பட்ட விராலிமலைக் குறவஞ்சியில் கூறப்பட்டுள்ளன. அடுத்துப் பட்டத்துக்கு வந்தவர்—ராயரகுநாதத் தொண்டைமான் (1769-1789) இவரது ஆட்சிக் காலத்தில் நாகையிலிருந்த டச்சுக்காரர்கள் நாகூரைப் பிடித்துக் கொண்டபோது நவாபின் சார்பில் தொண்டைமான் படைகளை அனுப்பினார். அப்படை டச்சுக்காரர்களை வென்று பணிய வைத்தது. மைசூரில் ஆட்சியைக் கைப்பற்றிய ஐதர் அலி பிரெஞ்சு நட்புடன் ஆங்கிலேயரை எதிர்த்தான். ஐதர் கொள்ளிடத்தைத் தாண்டி வந்து மெத்த அழிவை உண்டாக்கினான். புதுக்கோட்டையின் அதனக்கோட்டைக்கு அருகில் ஐதரின் படைகள் புகுந்தன. தென்னகத்தில் எதிர்ப்பாரின்றித் திரிந்த ஐதரின் படைகளை தொண்டைமானின் தளபதி சர்தார் மன்னவேளார் என்பவர் சோத்துப்பட்டி என்ற இடத்தில் நன்கு தோற்கடித்தார். இந்த வெற்றியைப் பாராட்டி ஆங்கில சேனாதிபதி சர் ஆயர் கூட் ஒரு பாராட்டுக் கடிதம் எழுதியுள்ளார்ர். ஐதரின் படை மீண்டும் திருச்சி வழியாக புதுக்கோட்டையைத் தாக்கியது. மலம்பட்டி என்ற இடத்தில் ரகுநாத தொண்டைமான் தலைமையிலான படை ஐதரின் படைகளை முறியடித்தது. இது பற்றிப் புகழ்ந்து பாடப்பட்டுள்ள பாடலொன்றில், 'மலம்பட்டி வாடியிலே வந்த ஐதர் சேனையைத் தலையோடே வெட்டிச் சமர்பெருந் தொண்டைமான்'' என்று பாடப்பட்டுள்ளது. அது போலவே ஐதரின் குதிரைப் படைத்தளபதி ஒருவன் கொலையும் கொள்ளையும் பல ஊர்களில் புரிந்தான். அவனை வேட்டையாடிக் கொன்ற செய்தியை இன்னொரு பாடலில்,

1730—1769). இவர் காலத்தில் மதுரையில் நாயக்க ராணி மீனாட்சியின் ஆட்சி நடந்தது. ஆட்சி உரிமைக்குப் போட்டி ஏற்பட்டது. இதில் தலையிட ஆர்க்காடு நவாபின் தளபதி சந்தா சாகிபு ஒரு படையுடன் திருச்சிக்கு வந்து சேர்ந்தான். சந்தா சாகிப் படையினர் புதுக்கோட்டைப் பகுதிகளைத் தாக்கிக் கொள்ளையிட்டனர்.

''ஒற்றைக் குதிரைக் காரன்
ஒருமையாக வந்தவனைப்
பற்றித்துரத்தி வெட்டும்
பகதர்ராயத் தொண்டை
மான்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐதரின் மகன் திப்பு சுல்தான் தொண்டைமான் தன் பக்கம் சேர்ந்துகொள்ளுவதாக இருந்தால் இராமநாதபுரம் தஞ்சைப் பகுதிகளுக்கு அதிபதியாக ஆக்குவதாகக் கூறினான். அந்தக் கடிதத்தை அப்படியே ஆங்கில கவர்னருக்கு தொண்டைமான் அனுப்பி வைத்தார். திப்புவைத் தன் பகைவனாகவே கடைசி வரை கருதினார். இவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர் விஜயரகுநாத தொண்டைமான் (1789-1807). இவருக்கு ஆர்க்காட்டு நவாபு ராஜா பகதூர் என்ற பட்டத்தை வழங்கியதால் இவர் காலம் முதல் தொண்டைமான்கள் புதுக்கோட்டை ராஜா என்று அழைக்கப்பட்டனர். திப்பு சுல்தான் திருச்சி மீது படையெடுத்து வந்த போது தொண்டைமான் படைகள் திப்புவை எதிர்த்துப் போரிட்டன. பின்னர் கடைசி மைசூர் போரிலும் புதுக்கோட்டைப் படைகள் பங்கு கொண்டன.

இவர் காலத்தில்தான் பாஞ்சாலங்குறிச்சிப்போர் நடந்தது. அந்தப் போரில் வீரபாண்டிய கட்டபொம்மன் தப்பிப் புதுக்கோட்டைக்கு வந்தார். அப்போது ஆங்கிலேயரின் நண்பராய் இருந்த தொண்டைமான் கட்ட பொம்மனைச்

## புதிய மாவட்டத்தின் வட்டங்கள்.

**புதுக்கோட்டை சமஸ்தானம் ஆலங்குடி, குளத்தூர், திருமயம் ஆகிய மூன்று வட்டங்களைக் கொண்டு விளங்கியது. இப்போது புதிதாக உருவாகும் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை ஒரு வட்டமாக அமைக்கப்படுகிறது. அதுதவிர, அறந்தாங்கி வட்டமும், பட்டுக்கோட்டை வட்டத்தின் ஒரு பகுதியும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இணைக்கப்படுகின்றன. எனவே, புதிய புதுக்கோட்டை மாவிட்டம் ஐந்து வட்டங்களையுடையதாக விளங்கும்.**

## சேமிப்புக்கு ஒரு சிறந்த பள்ளி

மதுரை மாவட்டத்தில் சின்னளபட்டியிலுள்ள தேவாங்கர் உயர்நிலைப்பள்ளி, 1972-73-ஆம் ஆண்டுக்கான பள்ளிக்கூட சேமிப்புத் திட்டத்தின் கீழ் மிகச் சிறந்த பள்ளிக்கூடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பள்ளியில் படிக்கும் 400 மாணவர்கள் பள்ளிக்கூடச் சேமிப்பு வங்கியில் சேர்ந்திருக்கின்றனர். அவர்கள் எட்டு மாதங்களுக்குள் இரண்டாயிரத்து 44 ரூபாய் சேமித்திருக்கின்றனர். இந்தப் பள்ளியைப் பொறுத்தவரை இது ஒருசிறப்புச் சாதனை ஆகும். ஏனென்றால், இங்குப் பயிலும் மாணவர்கள் பெரும்பாலோர் ஏழ்மை நிலையிலுள்ள நெசவாளர் குடும்பங்களையும் தொழிலாளர் குடும்பங்களையும் சேர்ந்தவர்கள்.

மதுரை மாவட்டத்தில் ஓர் ஆரம்ப நடவடிக்கையாக, மொத்தம் 100 பள்ளிகளில் இந்தச் சேமிப்புத் திட்டம் அமலுக்கு வந்திருக்கிறது.

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்

**1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்**

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

| | |
|---|---|
| **1966-67ல்** | **2100.87** |
| **1972-73ல்** | **5618.15** |



**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்**

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

என்.எல். ஹெப்லிகர்
நிர்வாக இயக்குனர்.

குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி
உபதலைவர்

சிறை செய்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். முகமதலி இறந்த பிறகு தென்னாட்டின் ஆட்சியை ஆங்கிலேயர் நேரடியாக மேற்கொண்டனர். ஆங்கில ஆட்சியில் பாளையக்காரர்கள் பலர், ஜமீந்தார்கள் ஆனார்கள். தஞ்சை அரசு, இராமநாதபுர அரசு, மதுரை அரசு, ஆர்க்காட்டு நவாபு, எல்லாம் மறைந்தன. தமிழ்நாட்டில் புதுக்கோட்டை அரசு ஒன்றுதான் பழைய ஆட்சியில் நீடித்தது. இவருக்குப் பின் வந்தவர் ராஜா விஜய ரகுநாதராய தொண்டைமான் (1807-1825) இவரது ஆட்சிக் காலத்தில் போர்கள் ஒய்ந்து அமைதி நிலவியது. நிலவரி முறையும் ஆட்சி முறையும் திருத்தி அமைக்கப்பட்டன. பள்ளிக்கூடங்கள், அற நிலையங்கள் பல நிறுவப்பட்டன. சென்னையின் புகழ் மிக்க கவர்னரான சர் தாமஸ் மன்றோ 1823 மார்ச் 7 தேதியிட்ட கடிதத்தில் புதுக்கோட்டையின் ஆட்சியைப் பற்றிப் பாராட்டி எழுதியுள்ளார்.

இவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் ரகுநாதத்தொண்டைமான் (1825-1839) இவரது ஆட்சி அமைதியாக நடைபெற்றது. சமஸ்தானத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர் ராமச்சந்திர தொண்டைமான் (1839-1886). இவரது காலத்தில் விக்டோரியா மகாராணியின் பிரகடனம் வெளிவந்தது. இது வரை ஆங்கிலக் கும்பினியின் ஆளுகையிலிருந்த இந்தியாவின் ஆட்சியை பிரிட்டிஷ் அரசே நேரடியாக மேற்கொண்டது. இந்தியாவிலிருந்த சுதேச மன்னர்கள் யாவரும் பிரிட்டிஷ் சக்கரவர்த்திக்கு உட்பட்ட மன்னர்களானார்கள். இவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர் மார்த்தாண்டபைரவ தொண்டைமான் (1886--1928). இவரது ஆட்சிக் காலத்தில் மக்கள் பிரதிநிதிச் சபைக்கான தேர்வு நடந்தது. இவர் உலகின் பல நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் சென்று வந்தவர். இவர் 1928-ல் பாரிஸ் நகரில் காலமானார். இவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர் ராஜ ராஜ கோபால தொண்டைமான் (1928—1948) இவர்தான் தொண்டைமான் அரசர்களில் கடைசி மன்னர். இவர் காலத்தில்தான் புதுக்கோட்டை வழியாகச் செல்லும் திருச்சி-மானாமதுரை இருப்புப் பாதை போடப்பட்டது. இந்தியா விடுதலை பெற்ற பிறகு சுதேச சமஸ்தானங்கள் யாவும் இந்திய யூனியனில் இணைந்து ஒன்றாயின. அது போலவே புதுக்கோட்டைச் சமஸ்தானமும், 1948-ல் இந்திய யூனியனில் இணைந்தது.

இந்த முன்னாள் சமஸ்தானப் பகுதி திருச்சிமாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. இப்போது இப்பகுதி ஒரு தனி மாவட்டமாகத் தமிழ் நாட்டின் பதினைந்தாவது மாவட்டமாக உருப்பெறுகிறது.

# வரலாற்றுப் புகழ்பெற்ற பொன்னமராவதி

ஏற்கெனவே புதுக்கோட்டைப் பிராந்தியத்திலும், தற்போது புதுக்கோட்டை மாவட்டத்திலும் உள்ள பொன்னமராவதி, பழைய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஓர் ஊர்; இது புதுக்கோட்டையிலிருந்து 23 மைல் தொலைவில் உள்ளது. 'பொன் அமரன்' என்ற ஒரு மன்னன் இவ்வூரினை நிறுவினான் என்று கூறுவர்;

பொன்னன் அமரன் என இரண்டு மன்னர்கள் இருந்தனர் என்று இவ்வூரில் உள்ள அழகிய நாச்சியம்மன் பாடலில் குறிப்பிடப்படுகின்றது. இவர்களை நெடிராச பாண்டியரும் நாயக்க மன்னர்களும் வென்றார்கள்.


இவ்வூரிலுள்ள வைணவக் கோயிலுக்கு 1572-ல் பொன்னம்பல நாதத் தொண்டைமான் 'வீரசிங்கராயர்' பெயரால் நிலங்கள் வழங்கினான்.

பொன்னமராவதி, 17-ஆம் நூற்றாண்டில் மருங்காபுரிச் சிற்றரசர்களின் ஆட்சியில் இருந்தது. அதன்பின் சேதுபதிகள் கைக்கு வந்தது. பின்னர் 1730-ஆம் ஆண்டில் தொண்டைமான்கள் தமதாக்கிக் கொண்டார்கள். 12-ஆம் நூற்றாண்டில் பாண்டியருக்கும் சிங்களவருக்கும் இங்கு போர் மூண்டது.


இங்கு ஓர் அழகிய பெரிய ஊருணி உள்ளது. அஃது அமரன் பெயரால் 'அமர கண்டான்' என்று வழங்கப்படுகிறது.

பொன்னமராவதியிலுள்ள சிவன் கோயில் இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் கட்டப்பட்டது.

இவ்வூர் மூன்று நூற்றாண்டுகள் சோழர் ஆட்சியிலும் இருந்தது. இங்குள்ள கோயிலுக்கு இராசேந்திர சோளீச்சுரம் என்று பெயர். இரண்டாம் இராச ராசன், இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் காலத்தில் நிறுவப்பட்ட 17 கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன.




மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் தலைவாயில்




புதுக்கோட்டைத் தனியரசின்
அரசாங்க முத்திரை


# புதுக்கோட்டையில்


மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
(முன்னர் புதிய அரண்மனை என வழங்கப்பட்டது)




அரசினர் கலைக் கல்லூரி

# சில காட்சிகள்



அரசினர் மருத்துவ மனை


ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

# புதுக்கோட்டை அரும்பொருட்காட்சியகம்

புதுக்கோட்டையிலிருந்து திருச்சி செல்லும் பேருந்துப் பாதையில் திருக்கோகர்ணம் பெரிய வீதியில் கலைமகளிர் இல்லம் ஒன்று இருக்கின்றது. (ஆம், அருங்காட்சியகம் ஆங்கிலத்தில் அந்தப் பொருளில் தான் அழைக்கப்படுகிறது) சமஸ்தானத்துக் காலத்தில் 1910-ல் ஆரம்பிக்கப்பட்ட இவ் அருங்காட்சியகம் கடந்த 63 ஆண்டுகளாகச் சிறந்த பணியாற்றி வருகிறது.

புதுக்கோட்டை அருங்காட்சியகம் ஒரு பல்துறை அருங்காட்சியகமாகும். ஓர் அருங்காட்சியகம் பல்துறை அருங்காட்சியகமாக அமையுமானால், அதன் செயல் எல்லையும் (Scope) தொண்டும் மிகப் பெரிதாக விரிவடைந்து செல்லும். காவல் துறையினர், விவசாயத் துறையினர் போன்ற அரசின் பல்வேறு துறையினர் அமைக்கின்ற அருங்காட்சியகங்களுக்கும், அருங்காட்சியகத் துறை அமைக்கும் பல்துறை அருங்காட்சியகங்களுக்கும் செயல் எல்லையில் மாறுபாடு உண்டு. பல்வேறு துறையினர் அமைக்கின்ற அருங்காட்சியகங்கள் துறைச் சார்பு அருங்காட்சியகங்களாகின்றன. (Departmental Museum) அவை. அவற்றின் துறைகளின் ஆய்வு, தேவையைக் கருதியே அமைக்கப்படுவதால், பல்துறை அருங்காட்சியகங்கள் ஆற்றுகின்ற அளவிற்கு அவைகளால் செயல்பட இயலாது. மீறி முனைந்து, அப்பணிகளை மேற்கொள்ளுமானால் அவற்றின் முக்கியப் பணியாகிய ஆராய்ச்சி, முன்னேற்றம் தடைப்படும் ஆபத்து உருவாகிறது. பல்துறை அருங்காட்சியகங்கள் ஒரே சமயத்தில் சிறந்த பல்கலைக் கழகமாக பண்பாட்டுக் கோலங்களை எடுத்துக்காட்டும் இல்லமாக- இன்பச் செலவிற்கேற்ற இடமாக விளங்கிக் கல்வி, பன்னாட்டுறவு, சுற்றுலா வளர்ச்சி ஆகிய பலவகைகளில் நாட்டிற்குப் பெருந்தொண்டாற்ற இயலும். அவ்வாறு ஆற்றியும் வருகின்றன. இவ்வளவு சிறப்புகளும் பொருந்திய பலதுறை அருங்காட்சியகங்கள் நமது மாநிலத்தில் இரண்டே இரண்டுதான் இருக்கின்றன. ஒன்று தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னையில் உள்ளது. மற்றொன்று; புதுக்கோட்டை அரசினர் அருங்காட்சியகம். இவ்விரண்டும் கல்விப் பிரிவில் மாநில அருங்காட்சியக இயக்குநர் திரு எஸ். டி. சத்தியமூர்த்தி அவர்களின் கீழ் திறம்பட இயங்கி வருகின்றன.


நந்திகேஸ்வரர் கி. பி. 11-12, கீரனூர்.

புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில், புவி அமைப்பியல், விலங்கியல், தாவரவியல், தொல்பொருளியல், கைவினைப் பகுதி, ஓவியம், மானிடவியல், காசியியல், என்னும் பிரிவுகள் உள்ளன. இவற்றுள் காசியியல் தவிர மற்ற எல்லாப் பிரிவுகளுக்கும் கூடங்கள் ஒதுக்கப்பட்டு, பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கூடங்களையும், அவற்றிலுள்ள பொருள்களையும் சற்றுக் காண்போம்.

அருங்காட்சியகத்திற்கு வருவோர் முதலில் காண்பது..புவி அமைப்பியல் பகுதியே.

**புவி அமைப்பியல்:**

உலகில் கல்தோன்றி மண் தோன்றிய கதையைக் கூறுவதே மண் அமைப்பியலாகும். மனிதனின் வரலாற்றைப் புவியின் வரலாற்றோடு ஒப்பிடுகையில், மனித வரலாற்றுக்காலம் மிகச் சிறிதே. புவியின் வரலாற்றுக் காலம் பல நூறு இலட்சக் கணக்கான ஆண்டுகளாக நீளுகிறது. அதனைக் கணக்கிட நமது கி.பி., கி.மு., முறைகள் போதா. எனவே புவி அமைப்பியல் அறிஞர்கள் புவி அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை வைத்துக் காலப்பாகுபாடு செய்துள்ளனர். அக்காலப் பாகுபாட்டினைக் காட்டும் படத்தை இக்காட்சியகத்தில் காணலாம். அவற்றோடு இந்தியாவின் இயற்கை அமைப்பு, கனிவளங்கள் ஆகியவற்றை விளக்கும் படங்களும் உள்ளன.

பூமியில் உள்ள பாறைகளை அவை தோன்றிய விதத்தை வைத்துப் பிரித்துப் படித்தல், பாறைகளில் உள்ள இரசாயனப் பொருட்களை வைத்து இனம் தொகுத்துப் படித்தல் என இருமுறைகளில் பயிலலாம். அவ்விருமுறைப் பகுப்புகளிலும் பலவகைப் பாறைத் துண்டுகள் இங்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆதியில் நெருப்புக் கோளமாகச் சுழன்றுகொண்டிருந்த பூமியானது குளிர்ந்து இறுகியது. இவ்வாறு முதலில் குளிர்ந்து இறுகிய பாறைப் பகுதிகளை இக்னீயஸ் (Igneous) பாறைகள் என்கிறோம். இப்பாறைகள் இயற்கையின் செயல்களுக்கு உட்பட்டுப் படிவுப் பாறை (Sedimentari Rocks) களாகவும், உருமாறிப் பாறை (Metam orphic Rocks)

களாகவும் மாறுகின்றன. இம் மூவகைப் பாறைகளையும், அவற்றின் பல்வேறு பிரிவுகளையும் விளக்குகின்ற வகையில் அவற்றின் பாறைத் துண்டுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இயற்கை அன்னை பழமை மிக்க உயிரினங்களின் உருவ அமைப்பை அப்படியே பாறைகளில் நமக்காக பதித்தெடுத்து வைத்திருக்கிருள். பழங் காலத்து உயிரினங்கள், தாவரங்கள் ஆகியவற்றின் உருவ அமைப்புகள் பதிந்துள்ள கற்பாறைகள் ''பாசில்ஸ்'' என்று அழைக்கப்படுகின்றன. திருச்சி அரியலூர், திருவக்கரை ஆகிய இடங்களில் கிடைத்த இத்தகு பாசில்களில் சிலவற்றையும் நாம் இங்குக் காணலாம்.

புதுக்கோட்டை நகரை அடுத்துள்ள மலைப் பகுதிகளில் பாறைகளைப் பிளந்து கற்பலகைகளைத் தயாரிக்கும் முறைகளை விளக்குகின்ற நிழற்படங்கள் சிலவும் இங்குத் தொகுத்து அமைக்கப்பட்டுள்ளன.

**விலங்கு உயிரியல்:**

உலகின் முதல் உயிர் சுமார் இலட்சம் கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. அமீபா, பரமேசியம் போன்ற முதல் உயிரினங்கள், நீரிலுள்ள இரசாயனப்பொருள்கள்காற்றுடனும், சூட்டுடனும் இணைந்த காரணத்திஞல் உண்டாகியிருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். உலகில் சுமார் பத்து இலட்சம் வகை உயிரினங்கள் உள்ளன. 1/8000 அங்குல பங்கு அளவுள்ள மலேரியா உண்ணியிலிருந்து 200 அடி நீளமுள்ள திமிங்கலம் வரை உள்ள பிராணிகளின் இவ்வெண்ணிக்கையில் ஏறத்தாழ பாதிக்குமேல் மூளை வளர்ச்சியே இல்லாதன என்பது குறிப்பிடத்தக்கது.

விலங்கு உயிரியலில் முதுகெலும்பில்லாப் பிராணிகள், முதுகெலும்புள்ள பிராணிகள் என்ற இருவகைப் பிரிவு மிகப் பெரும் பிரிவுகளாகும்.

**முதுகெலும்பில்லாத பிராணிகள்:**

முதுகெலும்பில்லா உயிரினங்கள் தோன்றி, சுமார் 44 கோடி ஆண்டுகள் வரையுள்ள காலமாகுமெனக் கருதுவர்— இவ்வகையில் கடற்பஞ்சு, பவழங்கள், சங்குகள், இணைப்பு



நடன சம்பந்த மூர்த்தி
கி.பி. 12-13,
கீரனூர்.

களையுடைய வண்டினங்கள் முதலியன இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. 500-க்கும் மேற்பட்ட வண்டு இனங்கள், செஞ்சிலந்தி, செந்தேள், மென்மையான பட்டாடைகளை உருவாக்கித் தருகின்ற கண் கவர் வண்ணங்களுடன், நெஞ்சைக் கொள்ளை கொள்ளும், பலவித வண்ணத்துப் பூச்சிகள். மாமரக்கிளையில் தோன்றிய முசுறு என்னும் சிகப்பு எறும்புக் கூடு ஆகியவை இப்பகுதியில் காணத்தக்கவையாகும்.

முதுகெலும்புள்ள பிராணிகளுள், மீன்கள், தவளைகள், பாம்புகள், பறவைகள் பாலூட்டிகள் ஆகியவை அடங்கும்.

**பறவைகள்:**

பறவைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம் என்பதை இப்பகுதியில் காலடி வைத்ததும் உணர்வீர்கள். பறவைகள் பகுதியில் சுமார் 160 வகையைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட பறவைகளும் 77 வகைப் பறவைகளின் முட்டைகளும், சில பறவைகளின் கூடுகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கழுகுகள், மிகப் பெரிய ஆந்தைகள் நாரைகள், கூழைக்கடா, பூநாரை, கரண்டி போன்ற அலகுடைய கரண்டி மூக்கன் ஆகிய பறவைகளும் இங்கே இடம் பெற்றுள்ளன. கட்டை விரல் அளவே உள்ள உலகின் மிகச் சிறிய பறவையான ''கொட்டைப் பாக்குச் சிட்டும்'', ஒரு தேங்காயின் அளவுள்ள நெருப்புக் கோழி முட்டையும், அடைக்கலம் குருவியின் மிகச் சிறிய முட்டையும், தூக்கணங்குருவியின் வேலைத் திறன் மிக்க கூடும் கண்டு களிக்கத் தக்கனவாகும்.

**மீன்கள்:**

நீருக்கு வெளியே (தரையில்) பல நாட்கள் வாழும் மீன்களும் உண்டு என்ற உண்மையையும் இப்பகுதிக்கு வந்ததும் அறிவீர்கள். முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் மீன்களையே பொதுவாக நாம் அறிவோம். ஆஞல் குட்டி போடும் மீன்களும் உள்ளன. இரு பக்கமும் அரம் போன்ற நீண்ட பற்களைக் கொண்ட மூக்குடைய வேலா மீன், நீருக்கு வெளியே பல நாட்கள் உயிர்வாழும் தேளி, வரால், தொட்டால் மின்சார அதிர்ச்சியூட்டும் மின்சார மீன், மிகப் பெரிய விலாங்கு, ஆரா, மாட்டின் கொம்பு போன்ற கொம்புடைய மாட்டுமீன், நீருக்கு மேல் பறந்துசெல்லும் பறவை கோலா ஆகியன இப்பகுதியில் காணத்தக்கனவாகும்.


**தவளைகள்:**

தவளைகள் நீரிலும், நிலத்திலும் வாழும் ஈருடலக வாழ்விகளாகும். இப்பகுதியில் தவளையின் படிப்படியான வளர்ச்சி, தவளையின் எலும்புக்கூடு, தேரை, சுண்ணும்பு நிறத் தவளை ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தேரைக்குப் பற்கள் இல்லையென்பதும், தவளைக்குக் கீழ்த் தாடையில் பற்கள் கிடையாதென்பதும் கவனிக்கத் தக்கன.


காதி கிராப்ட்
— கதர்—கிராமத் தொழில் பொருள்கள்
வாங்குவதற்கு நம்பகமான இடம்
குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து
கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை
காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!
தமிழ் நாடு மற்றும்
பாண்டிச்சேரி மாநிலங்களில்
200 க்கும் மேலான காதி
கிராப்ட்கள் மக்களின்
தேவைகளைப் பூர்த்தி
செய்கின்றன.
தேன்
தேன்
கோபுரம்
தமிழ்நாடு கதர்—
கிராமத் தொழில் வாரியம்
குறளகம்
சென்னை—600001



உமா,
கி.பி. 10-11



உமா,
கி.பி. 12-13.



சிவசுகாசனமூர்த்தி,
கி.பி. 12-12,
கீழக்குரிச்சி.

**ஊர்வன:**

படையையும் நடுங்கச் செய்யும் பாம்புகள், முதலைகள், ஆமைகள், உடும்பு முதலியன இவ்வினத்தைச் சேர்ந்தவைகளாகும். பாம்புகளில் நஞ்சு உடையவைகளும், நஞ்சில்லாதவைகளும் உள்ளன. பாம்புகள் நச்சுத் தன்மையைப் பெற்றிருப்பது அவற்றின் தற்காப்பிற்காகவே. மனிதன் பாம்பைக் கண்டு அஞ்சுவதைப் போல், பாம்பும், மனிதனைக் கண்டு அஞ்சிப் பதுங்குகிறது. முட்டையிடுவது பொதுவாக இருந்தபோதிலும் சிலவகைப் பாம்புகள் குட்டி போடுவதும் உண்டு.

இப்பகுதியில் நல்ல பாம்பு, கண்ணாடி விரியன், பச்சை விரியன், சுருட்டைப் பாம்பு போன்ற நஞ்சுடைய பாம்புகளும், சாரைப் பாம்பு, மலைப் பாம்பு, இருதலைப் பாம்பு, கொம்பேரிமூக்கன், தண்ணீர்ப் பாம்பு போன்ற நஞ்சற்ற பாம்புகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இருதலைப் பாம்பு கவனிக்கத் தக்கது. இப்பாம்பின் வால் அருகே இரண்டு கருநிறப் புள்ளிகள் காணப்படுவதால் இது ஆறு மாதத்திற்கொரு முறை தலையை ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்கு மாற்றிக் கொள்வதாகத் தவறுகக் கூறுவர். இப்பாம்பு குட்டிகள் ஈனும்.

பலதரப்பட்ட சைவ, அசைவ ஆமைகள், முதலைகள், தாம் வாழும் இடத்தின் நிறத்திற்கேற்பத் தம் நிறத்தை மாற்றிக் கொள்ளும் பச்சோந்தி, பறக்கும் பல்லி, உடும்பு ஆகியன இங்குக் காணத்தக்கன.

**பாலூட்டிகள்:**

குட்டி போட்டுப் பாலூட்டும் பிராணிகள் இவ்வினத்தை சேர்ந்தவை. முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பிளாட்டிபஸ் என்ற ஆஸ்திரிய பாலூட்டியும் இவ்வகையில் அடங்கும். பாலூட்டிகளுள் சில நீரிலும், பல நிலத்திலும், மற்றும் சில விண்ணில் பறந்து வாழும் இயல்பினையும் உடையனவாகும். இங்கு அலங்கு அல்லது எறும்பு தின்னி, காட்டுப்பூனை, சிறுத்தை, மரநாய், கீரி, நரி, குள்ளநரி, நீர் நாய், குரங்கு, முள்ளம்பன்றி மற்றும் பல பிராணிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஏழு அடி நீளத்தில் நிற்கும் நிலையிலுள்ள சிறுத்தைப் புலியும், யானையின் பாதங்களும், ஒரு தலையும் எட்டுக்கால்களும் உடைய ஆட்டுக்குட்டி, இரட்டைக் கன்றுக் குட்டி, இரண்டு தலை நான்கு கால்களையுடைய கோழிக்குஞ்சுகள் ஆகியவையும் காணத்தக்கன.


நீர் வாழ் பாலூட்டிகளில் மிகப் பெரியதான 62 அடி நீளமுள்ள திமிங்கலத்தின் எலும்புக்கூடு ஒன்று இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. கட்டடங்களின் முகப்பு வளைவுபோல் வைக்கப்பட்டுள்ள இதன் பெரிய தாடை எலும்புகள் காணத்தக்கன.

நிலத்தில் வாழும் பிராணிகளில் மிகப் பெரிய பிராணியான யானையின் மண்டையோடு, அதன் கடைவாய்ப் பற்கள், 'சௌசிங்கா' என்னும் நான்கு கொம்பு மான், வெளிமான், மரைமான், நீல்கைமான், ஓநாய், சிறுத்தைப் புலி ஆகியவற்றின் எலும்புக் கூடுகளும், சில மான் கொம்புகளும் இப் பகுதியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.


**கவின் கலையும்**
**கைவினைத் தொழிலும்**

கவின் கலைகளுக்கும், கைவினைத் தொழில்களுக்கும் என்று ஒரு கூடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், ஓவியம், நடனம் ஆகியவற்றை விளக்குகின்ற படங்களும், நெசவு, வளையல் செய்தல், மரவேலை, உலோக வேலை ஆகிய தொழில் முறைக் கலைகளைவிளக்குகின்ற பொருள்களும் இடம் பெற்றுள்ளன. இத்துடன் கைவினை நுட்பத்துடன் திகழும் மர, தந்த வேலைப்பாடுகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை தனியரசாக விளங்கிய காலத்தில் அதன் சுற்றுப் பகுதிகளில் சிறந்து விளங்கிய கைத்தொழில் பொருட்கள் இக்கூடத்தில் சிறப்பாக வைக்கப்பட்டுள்ளன. இராசிபுரம், வையத்தூர் ஆகிய பகுதிகள் வளையல் தொழிலில் சிறந்து விளங்கின. அங்கே கண்ணாடி, அரக்கு ஆகியவற்றாலான வளையல்கள் பெரும் அளவில் செய்யப்பட்டன. அவ்வூர் மக்கள் தயாரித்த வளையல்கள், அவர்கள் அவ்வளையல்களைத் தயாரித்த முறை, அதற்குத் தேவைப்பட்ட மூலப் பொருட்



மெழுகு வேலையுடன் கூடிய
சாயத் துணி
திருவப்பூர், புதுக்கோட்டை.




கள் ஆகியவை தக்க விளக்க உரைகளோடு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

திருவப்பூர், நெசவில் சிறந்து விளங்கியிருக்கிறது. பட்டு நெசவு, சாயம் ஏற்றல், சித்திர வேலையோடு துணிகளுக்கு ஓரம் போடுதல் ஆகியவற்றில் இவ்வூர் மக்கள் சிறந்து விளங்கியிருந்தனர். அவர்களது கை வண்ணத்தின் சான்றுகளாக, அவர்கள் நெய்த பட்டாடைகள், உருவம் பதித்த துணிகள் ஓரங் கட்டிய ஆடைகள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கம்பள நெசவில் சிறந்து விளங்கிய செல்லுக்குடியின் கம்பளியும் இங்கே இடம் பெற்றுள்ளது.

புதுக்கோட்டையின் உலோக வேலைப்பாடுகளின் உயர்வை விளக்குகின்ற வகையில் பித்தளையிலும், வெண்கலத்திலும் செய்த பல அழகிய உலோகப் பாத்திரங்கள், விளையாட்டுப் பொம்மைகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. தஞ்சையின் நெட்டி வேலையில் செய்த திருச்சி மலைக்கோட்டைக் கோவில், ஒரே மரத்துண்டில் செதுக்கியுள்ள மரச் சங்கிலி, மைசூர் சந்தன வேலைப்பாட்டுப் பொருட்கள், கேரளத்துத் தந்த வேலைப்பாடு ஆகியவையும் இங்குப் பார்த்து மகிழத் தக்கவையாகும்.

புதுக்கோட்டை மன்னர்கள், சிறந்த ஆட்சி இயல் அதிகாரிகள் ஆகியோரது நிழற்படங்களும், ஓவியங்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை அரசின் அரசுச் சின்னமும் இங்கு வரைந்து வைக்கப்பட்டுள்ளது. இவையன்றி, நவீன காலத்துச் சித்திரங்கள் பலவும் வைக்கப்பட்டுள்ளன. 18-ஆம் நூற்றுண்டினைச் சேர்ந்த ஜெய்பூரின் சிற்றோவியம் ஒன்று மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். தஞ்சை மராத்திய மன்னர்கள் காலத்துப் பாணியில் தீட்டப்பட்ட சில சிற்றோவியங்களும், சீட்டுகளும் இங்கு உள்ளன.

கி.பி. 16, 18-ஆம் நூற்றுண்டுகளில் கேரளாவில் உள்ள மட்டஞ்சேரி அரண்மனைச் சுவர்களிலும், கொச்சிக் கோவில்களிலும் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களின் படங்கள் இங்கே வைக்கப்பட்டுள்ளன.

சித்தன்னவாசல், தஞ்சை, சிக்ரியா, அஜந்தா, பெர்சியா ஆகியவற்றின் ஓவியப்பாணிகளை விளக்குகின்ற வகையில் அவ்வோவியங்களின் நகல்களும், படங்களும் இங்குப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.


**மானிடவியல் :**

புதுக்கோட்டையின் வரலாறு 2,000 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். அதனுடைய வரலாற்றிற்கு முந்திய காலமாக, பெருங்கல் புதைக் காலம் விளங்குகிறது. புதுக்கோட்டையின் பல இடங்களில் இக்காலத்தைச் சார்ந்த புதைகுழிகள் உள்ளன. அவற்றிலிருந்து சேகரித்த முதுமக்கள் தாழிகள், மட்பாத்திரங்கள், கருவிகள் ஆகியவை வரலாற்றுக்கு முந்திய காலப் பகுதியில் (Pre History Gallery) வைக்கப்பட்டுள்ளன.

திருமயம் கோட்டை, புதுக்கோட்டை ஆயுதசாலை ஆகியவற்றிலிருந்து பெற்ற போர்க் கருவிகளும் தனிக் கூடத்தில் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பல்வேறு வகுப்புகளைச் சேர்ந்தவர்களின் தாலிகள் தொகுக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்று இத்தனை வகையான தாலிகளை சேகரித்துள்ள அருங்காட்சியகம் நமது மாநிலத்திலேயே இது ஒன்றுதான். மேலும் நாட்டுக் கோட்டைச் செட்டியார், முகமதியர், கள்ளர் இனப் பெண்கள் அணியும் நாகளும், இந்தியப் பழங்குடி மக்கள், பலவகை நடனங்கள் ஆகியவற்றை விளக்கும் படங்களும் பண்பாட்டுப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன.

**தாவர இயல் :**

மானிட இயலை முடித்ததும் நாம் காண்பது தாவர இயல் கூடமாகும். இதில் பல்வகை மரங்கள், உழவுக் கருவிகள், பயிர்களைப் பாதிக்கும் நோய்களை விளக்குகின்ற வகையில், நோயால் பாதிக்கப்பட்ட செடிகள் ஆகியவற்றைக் காணலாம். பல இரசாயன உரங்கள் விதைகள், மருந்திற்குப் பயன்படும் செடிகள் ஆகியவையும்



அப்பர், கி.பி. 11-12. மாணிக்கவாசகர், கி.பி. 11-12. சம்பந்தமூர்த்தி, கி.பி. 11-12.

இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

**தொல்பொருளியல் :**

புதுக்கோட்டை அருங்காட்சியகத்தின் தொல்பொருளியல் பிரிவு, வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பல சேகரிப்புகளைக் கொண்டது. இச் சேகரிப்புகளைச் செப்புத் திருமேனிகள், கற்சிலைகள், கல்வெட்டுகள் செப்புப் பட்டயங்கள் என்கின்ற அளவில் பகுத்துக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தாவர இயலைப் பார்த்து முடித்ததும் பார்வையாளர்கள் கண்ணில் படுவது புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள் அளித்த தானங்களைக் குறிக்கும் செப்புப் பட்டயங்களாகும். இதே அறையில் புதுக்கோட்டை சமஸ்தானத்துப் பதிவு ஏடுகளையும் ஆவணங்களையும் காணலாம்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்த இரு கல்வெட்டுக்கள் இங்கே உள்ளன. இக் கல்வெட்டுக்களால், புதுக்கோட்டையை அடுத்துள்ள முனிசந்தை என்னும் பகுதி அக்காலத்தில் வணிகர் குழு வசித்து வந்த இடம் என்பதை அறிகிறோம். மேலும் இங்கு கொடும்பாளூர், நார்த்தாமலை



ஆகிய இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட முற்காலச் சோழர்களின் அழகிய சிலைகளும் உள்ளன.

புதுக்கோட்டை, பண்டை நாளில் ஒரு சிறந்த சமணப் பதியாக விளங்கியிருக்கிறது. புதுக்கோட்டையின் அருகே பல இடங்களில் சமண தீர்த்தங்கரகளின் சிலைகளும் கிடைத்துள்ளன. அவற்றோடு, தற்பொழுது புதுக்கோட்டை அரசர் கல்லூரி இருக்கும் இடத்தில் கண்டெடுத்த ஐந்து சமண தீர்த்தங்கர்களின் செப்புத் திருமேனிகள் இவ்அருங் காட்சியகத்தில் உள்ளன.

இவ்அருங் காட்சியகத்தின் செப்புத் திருமேனிகள் கண்டு களிக்கத் தக்கவையாகும். புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள கீரனூர், திருஅரங்குளம் கீழக்குறிச்சி, வெள்ளனூர் ஆகிய இடங்களிலிருந்து பெறப்பட்ட நல்ல பிற்காலச் சோழர்கள் காலத்துச் செப்புத் திருமேனிகள் சிலவும் இங்குள்ளன.

இதற்கு வருகை தருகின்றவர் மனத்தில் ஒரு கலைக் கோவிலைக் கண்டு களித்த நிறைவை இவ்அருங்காட்சியகம் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை!

## கல்வெட்டுச் சொல்வது...



சாம்

9-ஆம் நூற்றாண்டில் புதுக்கோட்டைப் பகுதியில் நகரம் என்ற ஆட்சிக்குழு இருந்தது என்றும், வணிகர்களே இதில் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றும் புதுக்கோட்டைக் கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகிறது.

## இலக்கியம் சொல்வது..

புதுக்கோட்டை வருவாய்க் கோட்டத்திலுள்ள நார்த்தாமலையில் உள்ள மலைக் கோயில் பல்லவர் ஆட்சியில் ஏற்பட்டதாகும். இம்மலைச் சரிவில் தமிழ் வணிகர் தலைநகரமான திருவெண்ணாயில் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வூரே சமணர்குண்டு இருக்கும் செட்டிபட்டி என்ற பெயருடன் சிற்றூரிலும் சிற்றூராக இன்றும் இருந்து வருகிறது.

செட்டிபட்டியில் ஐநூற்றுவப் பெரும்பள்ளி ஒன்று இருந்ததாம். பல்லவர் காலத்தில், 'திசையாயிரத்து ஐந்நூற்றுவர்' என்றும், ஐந்நூற்றுவர் என்றும் குறிக்கப்பெற்ற வணிகர்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர் என்றும் அவர்கள் கடல்கடந்த நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்றும் அறியப்படுகிறது.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ஓர் அஜந்தா



நுண்கலைகளுள் ஒன்றானதும் உயர்ந்ததுமான ஓவியக் கலை, மிகப் பழங் காலத்திலிருந்தே தமிழகத்தில் சிறந்து விளங்கியது என்பதை உணர்த்தும் செய்திகள் பல உள்ளன. நமது சங்க இலக்கியங்களிலே ஓவியம் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. சிலப்பதிகார உரையாசியர் அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில், 'ஓவிய நூல்' என்னும்ஒரு நூலைக்குறிப்பிடுகின்றார். அந் நூல் இப்போது கிடைக்கவில்லை. அது தவிர, மகேந்திர வர்ம பல்லவன், 'தட்சிண சித்திரம்' என்னும் ஓவிய நூலுக்கு உரை எழுதியதாக அறிகிறோம். அந் நூலும் தற்போது கிடைத்திலது. எது எவ்வாறாயினும், பழங்காலத்தில் தமிழகத்தில் ஓவியக்கலை ஓங்கி வளர்ந்து உயர்ந்து விளங்கியது என்பதை மட்டும் யாரும் மறுத்தற்கில்லை.

இக் காலத்தில் ஓவியங்களை எழுதி வைக்க இருக்கின்ற தாள்கள் — பலகைகள் — திரைச் சீலைகள் போன்ற பல்வேறு சாதனங்கள் போல அக்காலத்தில் இல்லையானாலும், பெரும்பாலும் சுவர்களிலேயே ஓவியங்கள் எழுதப்பட்டன. அவை 'சுவர் ஓவியங்கள்' ஆகும். தமிழகத்தில் பல்லவர் ஆட்சிக் காலத்திலே—மகேந்திர வர்மன் காலத்திலே 'ஓவியக் கலை'க்குப் 'புதிய சகாப்தம்'—புதிய எழுச்சி தோன்றியது. அவன், புதிதாகக் குகைக் கோயில்கள் பலவற்றை அமைத்தான். அந்தக் குகைக் கோயில்களின் கோலச் சுவர்களிலே — கூறைகளிலே ஓவியங்களை எழுதினான். பொதுவாக, ஓவியங்கள் தக்கபடி பாதுகாக்கப்படாவிட்டால் அவை காலப்போக்கில் சிதைந்து அழிந்துபடுவது இயல்பே. இவ் வியற்கை விதிமுறைக் கேற்ப அக்காலத்து ஓவியங்கள் பல உருத் தெரியாமல்—ஏன் சுவடே இல்லாமல் கூட மறைந்து போயின. எனினும், காலப் பழமையினால்—வண்ணங்கள் சற்று மங்கிப் போய்—அரைகுறையாக அழிந்துபட்ட நிலையிலும் பழங்கால ஓவியக் கலையையும், மகேந்திர வர்ம பல்லவனின் பெயரையும் இன்றும் நமக்கு நினைவு கூறும் வகையில் நின்று விளங்குவன சித்தன்ன வாசல் குகைக் கோயிலில் காணப்படும் சிறப்பான ஓவியங்களேயாகும்!

சித்தன்ன வாசல், புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டைக்கு மேற்கே 01 கல் தொலைவில் உள்ள ஒரு சிற்றூர்; இது, 'அண்ணல் வாயில்' எனத் திருநாவுக்கரசரின் திருத்தாண்டகத்தில் குறிப்பிடப்படுகிறது. இன்று 'அன்ன வாசல்' எனப்படும் அண்ணல் வாயிலும், சித்தன்ன வாசல் என்னும் சிற்றண்ணல் வாயிலும் சேர்ந்த பழம் பதி, இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர். சித்தன்னவாசலின் மலையடிவாரத்தைச் சூழ்ந்த வரைநிலம், கற்கிடைகள், குரங்குப் படை வீடுகள், பல முது மக்கள் தாழிகள், நடு கற்கள், கற்குவி முட்டங்கள் ஆகிய பழம் பெருங் கற் படைகள் சூழ்ந்த விரிந்து பரந்த இடுகாடாகும்! இதனைக் கடந்து மலைமுகட்டுக்குச் சென்றால், அதன் கிழக்குப் பக்கத்தில் மிகப் பெரிய அமண் பாழியைக் காணலாம். அங்கு உள்ள சமணர் கோயிலில், கற்பாறையிலேயே மழமழப்பாகத் தோய்த்தமைக்கப்பட்ட பல கற் படுக்கைகளையும், அவற்றை

ஒட்டிப் பல கல் வெட்டுக்களையும் நாம் காண்கிறோம். இவற்றில் மிகப் பழமையானது, பெரிய படுக்கையின் புறத்தே பிராமியெழுத்தில் எழுதப்பட்ட தமிழ் மொழிக் கல்வெட்டு; கி.மு. 2-ஆம் நூற்றூண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றூண்டு வரை தென்னகத்தில் பெரிதும் புழக்கத்தில் இருந்த பிராமி எழுத்துடன் தமிழ் மொழிச் சிறப்புகள் இணைந்து காணப் பெறும் இக் கல் வெட்டிலிருந்து, இவ்வூரின் பெயர் சி(த்)து(ப்)போசில் எனவும், இவ் வதிட்டானம் இபோமி (ஒய்மா) நாட்டுக் குமட்டூர்ப் பிறந்தான் காவிதி ஈதனுக்குச் சித்துப்போசில் இளையர் குடி மக்களால் செய்தமைக்கப்பட்டது என்னும் செய்தியையும் அறிகிறோம்.

இப் பாழியின் ஏனையக் கல் வெட்டுக்களும், இம் மலையின் மற்றையப் பாழிகளினருகில் காணப்படும் கல்வெட்டுக்களும் கி.பி. 8—9-ஆம் நூற்றூண்டுகளுக்குரிய த்மிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட தமிழ்ப் பெயர்களாகும்.




9-ஆம் நூற்றூண்டின் முற்பகுதியில் ஆண்ட அவநீப் சேகரன் ஸ்ரீ வல்லப பாண்டியன் காலத்தில், மதுரை ஆசிரியர் என்ற இளங் கௌதமனுல் குகைத் தளியிலுள்ள அர்த்த மண்டபம் புதுப்பிக்கப்பெற்று, சிற்பங்கள் அமைக்கப் பெற்று, முன்னணியில் முக மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டு, அக மண்டமும் அழகு செய்யப் பட்டது என்ற செய்தியினை இங்குக் காணப் பெறும் செய்யுட் கல் வெட்டு ஒன்றுல் அறிகிறோம். இதற்கேற்பப் பல்லவர் பாணிக்கு மாறுபட்டதும் பாண்டியர் குடை—தளிகளில் காணப்பெறும் பாணியையொத்தும் உள்ள சில பாணிச் சிறப்புக்களைக் கொண்டும் வேறு சில ஆதாரங்களைக் கொண்டும் இவ்வோவியங்கள் பாண்டியர் காலத்தில்—9-ஆம் நூற்றூண்டில் வரையப் பெற்றவை என்றும் ஒரு கருத்தும் கூறப்படுகிறது. அர்த்த மண்டபத்தின் இரு பக்கங்களிலும் உள்ள திருவாசிரியன் பாரிசுவநாதர் சிலை மாடங்களின் மேலும், உண்ணுழிகையின் பின் சுவரில் வரிசையாகக் காணப்பெறும் பேரரசர் இரு தீர்த்தங்கரர் மூர்த்தங்களின் மேலும் அர்த்த மண்டபத்திற்கு முன் நீண்ட கொடுங்கையின் அடிப் புறத்திலுமான மேல் நிலைகளில் அழகுற விரித்துக் காட்டியது போல் வரையப் பெற்ற பல வகையான ஓவிய விதானங்களை நாம் காணலாம்.

சித்தன்ன வாசல் குகைக் கோயிலில், பல நூற்றூண்டுகளுக்குப் பிறகும், பழைய காலத்து ஓவியச் சிறப்பை இன்றைக்கும் எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ள எழிலோவியங்களில் குறிப்பிடத்தக்கவை 'அரசன் அரசி', 'நாட்டியக் கணிகையர் இருவர்', 'தாமரை பூத்த தடாகம்', 'ஓர் அரசன்' ஆகியவையாகும்.

அரசன் அரசி ஆகிய இருவரின் ஓவியங்கள் மார்பளவு வரை காணப்படுகின்றன. இவ்விருவரும், மகேந்திரவர்மனும் அவனுடைய பட்டத்தரசியும் ஆக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

அடுத்து, இரண்டு தூண்களில் தனித் தனியே வரையப் பட்டுள்ள இரண்டு நாடகக் கணிகையரின் நடனக் காட்சி. இவர்கள், அரங்கத்தில் நின்று நடனம் புரிவதை விளக்குவது இந்த எழிலோவியம்.

நாடகக் கலையில் நன்கு தேர்ந்த நங்கையர் இருவர், நமது கண்முன்னே நின்று நடனமாடுவது போன்றமைந்த இந்த உயிரோவியம் நமது உள்ளங்களைத் தொட்டு நிற்கின்றன. ஓவியப் புலவனின் இந்த உயிரோவியம், 'ஆடற் கலைக்கழகு தேடப் பிறந்தவள்—ஆடாத பொற் பாவை ஆட வந்தாள்' என்று தொடங்கும் பாவேந்தர் பாரதிதாசனின் அழகிய இன்னிசைப் பாடலை நமக்கு நினைவூட்டுகின்றது.

இதனையடுத்து, இயற்கை எழில் மிக்கதொரு தாமரைத் தடாகம். இத் தாமரைக் குளத்தின் ஓவியம், குகைக் கோயில் மண்டபத்தின் விதானத்தில்எழுதப்பட்டிருக்கிறது. இக் குளத்தில், செந்தாமரை, வெண்டாமரை, ஆம்பல், அல்லி முதலான பல நீர்ப் பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன. இந்தப் பொய்கையில் யானைகளும், மாடுகளும், பேடைக் குஞ்சுகளுடன் கூடிய சகோரப் பறவைகளும், ஊடுருவிப் பாயும் மீன்களும் காணப்படுகின்றன. ஆழமற்ற இந்தக் குளத்தில் முழங்கால் அளவுள்ள நீரில் மூன்று பேர் இறங்கித் தாமரைப் பூக்களைத் தண்டோடு கொய்து கற்றையாகக் கட்டித் தோளின் மீது

வைத்துக் கொண்டு வருகிறார்கள். தாமரை பூத்த இந்தத் தடாகத்தின் ஓவியம், நமது உள்ளத்தில் நிலைபெறும் உயிர் ஓவியமாகும்.

தெற்குத் தூணில் ஓர் அரசனின் திருவுருவம் வரையப்பட்டுள்ளது. இவ் வுருவம், ஸ்ரீ வல்லப பாண்டியனின் திருவுருவமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

பொதுவாகக் குகைக்கோயில்களின் பாறைச் சுவர்கள் கரடு முரடாகவே இருக்கும் ; அச் சுவர்கள் வண்ண ஓவியங்கள் வரைவதற்கு ஏற்றவை அல்ல என்பதை எல்லாரும் அறிவோம். அந்தச் சுவர்களில் ஓவியங்கள் எழுத வேண்டுமானால், பாறைச் சுவர்களின் மேல் மெல்லிய சுதை பூசி அதன் பிறகே எழுத முடியும். இவ்வாறுதான் சித்தன்ன வாசல் பாறைச் சுவர்களிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அஜந்தா, சிகிரியா முதலிய குகைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்களும் இவ்வாறு சுதை பூசப்பட்டே எழுதப்பட்டுள்ளன.

சித்தன்னவாசல் குகைக் கோயிலிலுள்ள உண்ணாழிகையின் மேல் நிலையில் மட்டும் தாமரைக் குளமும் விதான ஓவியமும் வரையப்பட்ட சுதைப் பூச்சுப் பெயர்ந்து விழுந்து, சில இடங்களில் முன்னிருந்ததும் அழிக்கப்பெறாது மேலே மறைத்துப் பூசப்பட்டதுமான சாதாரணப் பூக்கோலங் கொண்ட பழைய சித்திரப் பகுதிகள் காணப்படுகின்றன.

கல் வெட்டில் குறிப்பிடப் பெறும் அதிட்டானம் தூர்ந்து கிடந்து, அண்மைக் காலத்தில் தோண்டி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளிருக்கும் ஓவியங்களை மழை வெய்யிலினின்றும் பாதுகாக்கும் பொருட்டுப் பழைய அதிட்டானத்தின்மேல் பழைய மாதிரித் தூண்கள் நிறுத்தப்பட்டு, மேலே கற்பலகைத் தாரிசு போட்டு




மண்டபம் போல அமைக்கப்பட்டுள்ளது.


சித்தன்னவாசல், புதுக்கோட்டை மாவட்டத்தில் வரலாற்றுப் புகழ் பெற்ற ஒரு சிறப்பான இடமாகும் இதனைத் தென்னகத்து அஜந்தா என்றே குறிப்பிடலாம். சித்தன்ன வாசல், குடவரைக் கோயிலாலும் புகழ் மிக்க ஓவியங்களாலும் உலகப் புகழ் பெற்று விளங்குகிறது.

— சாமி பழ.


## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1628.
## படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
' தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும் '
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ !

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க !




# அம்மன் காசு

— மாமூலன்

இந்தியாவிலே மாபெரும் சமுதாய சீர்திருத்தவாதி பெரியார் அவர்கள் என்பதைப் பற்றி நானும், முகர்ஜியும் அவருடைய நண்பர்களும் பேசிக் கொண்டிருந்தோம்.

இந்தப் பேச்சின் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் சமுதாய மாற்றத்துக்கான சமதர்மப் பணிகள் பற்றியும் விவாதித்தோம்.

இந்தச் சமுதாயத்தில் முகர்ஜி தன் திட்டத்தை வெளியிட்டார். அடுத்த வாரம் தமிழ்நாட்டுக்குச் செல்ல வேண்டும். அவரது அயல்நாட்டு நண்பர் ஒருவரும் வருகிறாராம். என்னையும் துணைக்கு அழைத்தார். தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் சமுதாய மாற்றப் பணிகளைப்பற்றிச் செய்திகள் சேகரிக்க வேண்டுமாம்.

முகர்ஜி வெளிநாட்டுப்பத்திரிகை ஒன்றுக்கு இந்தியாவில் பணியாற்றும் நிருபர். தமிழ்நாட்டுக்குச் செல்ல வேண்டிய வேலைகளும் எனக்கு இருந்ததால் நானும் முகர்ஜியின் விருப்பப்படி புறப்பட்டேன்.

* * *

எனக்கும், முகர்ஜிக்கும் கல்கத்தாவில் அறிமுகத்தை ஏற்படுத்திக் கொடுத்தது ஓர் அம்மன் காசுதான்.

என்னுடன் தங்கியிருந்த பானர்ஜியைப் பார்க்க அடிக்கடி வருவார் முகர்ஜி. யாருடனும் அதிகமாக பேசாதவர் போல் தோற்றமளித்ததால் நான் அவருடன் பேசுவதில்லை.

ஒருநாள், என் பெட்டிகளைத் துப்புரவு செய்து கொண்டிருந்தபொழுது பானர்ஜியைத் தேடி வந்தார் முகர்ஜி. என் பெட்டியிலிருந்து கீழே விழுந்த அம்மன் காசைப் பார்த்துவிட்டு அதைப்பற்றி விசாரித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள புதுக்கோட்டை அந்தக் காலத்தில் சமஸ்தானமாக இருந்தபொழுது வெளியிட்ட நாணயம் என்றும், அப்பொழுது காலணாவுக்கு ஐந்து அம்மன் காசுகள் என்றும் எடுத்துரைத்தேன்.

அதுமுதல் என்னைச் சந்திக்கும்பொழுது எல்லாம் முகர்ஜி புதுக்கோட்டை பற்றிய விவரங்களை ஆவலோடு கேட்பார். என் இளமைப் பருவத்தைப் புதுக்கோட்டையில் கழித்தவன் ஆதலால் எல்லா விவரங்களையும் சொல்வேன். குறிப்பெடுக்காத குறையாக எல்லாவற்றையும் முகர்ஜி கவனமுடன் கேட்பார்.

கீழ மூன்றும் வீதி தம்புடு சார் ஸ்கூலில் நான் ஆரம்பக் கல்வியைத் தொடங்கியதிலிருந்து எல்லா விவரங்களையும் சொல்வேன்.

அப்பொழுது புதுக்கோட்டையில் மூன்றாவது வகுப்புக்கு புதுக்கோட்டை சமஸ்தானத்தின் சரித்திர, பூகோள பாடங்கள் உண்டு.

புதுக்கோட்டை சமஸ்தானம் குளத்தூர், ஆலங்குடி, திருமயம்—மூன்று தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. புதுக்கோட்டை நகரம் ஆலங்குடித் தாலுகாவில் இருந்தது.

புதுக்கோட்டையின் நகர அமைப்பே மிகவும் சிறந்ததாகும். வரிசை வரிசையாக நேராக அமைந்த வீதிகள்—இரண்டு சாலைகளுக்கிடையே சாய்க்கடைக்காக அமைக்கப்பட்டிருக்கும் சந்துகள் - புதை வடிகால் திட்டங்களுக்கு' அந்தக்கால மாதிரி' யில் அருமையான எடுத்துக் காட்டுகள்.

நவராத்திரி காலத்தில் புதுக்கோட்டையைப் பார்க்கவேண்டுமே....கால் பந்து ஆட்ட விளையாட்டுப் போட்டிகள்.... அரண்மனையில் அந்தணர்களுக்கு அன்பளிப்பு - அப்பொழுதுதான் அம்மன்காசுகள் அளிக்கப்படும்.

விஜயதசமியன்று அம்பு போடுதல் என்று சொல்லுவார்கள். அன்று மன்னர் பவனி வருவார்.

திருக்கோகர்ணகத்திலுள்ள பிரகதாம்பாள் ஆலயம் குடவரைக்கோயில். கோயிலில் உள்ள குடைந்த வழியாகச் சென்றால் மலையிலுள்ள சுனைக்குச் செல்லலாம். திருக்கோகர்ணத்திலுள்ள அரும்பொருட்காட்சியகம் அருமையானதாகும்.

சாந்தார் அம்மன் கோவில், பல்லவன் குளம் முதலியன பல்லவர் காலத்து ஆட்சியின் மாட்சியை எடுத்துக்காட்டும். புதுக்குளம், ராஜாகுளம், ஐயன்குளம் முதலியன புதுக்கோட்டையிலுள்ள நீர்நிலைகள்களில் முக்கியமானவை. வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் புதுக்கோட்டைச் சந்தை குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

தமிழிலக்கிய வளர்ச்சியில் மறுமலர்ச்சி எழுத்தாளர்களை ஊக்குவித்து உருவாக்கிய 'பொன்னி' இதழும் புதுக்கோட்டையில் இருந்துதான் வெளிவந்தது. காலணா, அரையணா, ஒரணா விலைகளில் சிறுவர் சிறுமிகளுக்காக வெளிவந்த அணில், யுவன், டமாரம், முத்து, பாலர் மலர் இன்னும் பல பத்திரிகைகள் வெளி வந்ததும் புதுக்கோட்டைப் பகுதியிலிருந்துதான்.

புதுக்கோட்டை நகரத்தின் நடுவிலுள்ள பழைய அரண்மனையில்தான் மன்னரின் கொலுமண்டபம் அமைந்தி

ருந்தது. பழைய அரண்மனைப் பகுதியில் அமைந்திருந்த 'நாட்டு ஆஸ்பத்திரி' (சித்த மருத்துவமனை) அந்தக்காலத்தில் புகழ் வாய்ந்த ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் இந்தியா விடுதலையடைந்தவுடன் இந்தியப் பேரரசில் இணைந்த ஒரே சமஸ்தானம் புதுக்கோட்டை தான்.

புதுக்கோட்டைச் சுற்று வட்டாரத்திலுள்ள நார்த்தாமலை, சித்தன்னவாசல், விராலிமலை, திருமயம் கோட்டை போன்றவைகளும் குறிப்பிடத் தகுந்த இடங்களாகும்.

-இப்படி எனக்குத் தெரிந்த செய்திகளை எல்லாம் முகர்ஜியிடம் சந்திக்கும்பொழுது எல்லாம் சொல்வேன். அவரும் துருவித் துருவிக் கேட்பார்.

எகற்காகப் புதுக்கோட்டையைப்பற்றி இப்படி முகர்ஜி விசாரிக்கிறார் என்று எனக்கு விளங்குவதேயில்லை. ஒரு நாகரிகம் கருதி அவராகவே சொல்லட்டும் என்று நான் கேட்கவும் இல்லை. அவராகவும் சொல்லவுமில்லை.

இப்பொழுதுள்ள புதுக்கோட்டையைப்பற்றி விவரங்களை முகர்ஜி கேட்பார்.

''இளமையில் என் தந்தையின் மறைவுக்குப் பின்னர் புதுக்கோட்டையை விட்டு வந்துவிட்டேன். வேறு தகவல்கள் தெரியாது'' என்பேன்.

என்னைப் பற்றியும் வேறு எதுவும் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை முகர்ஜி. அது அவருடைய இயல்பு என்று இருந்துவிட்டேன்.

கல்கத்தாவில் பெரிய நிறுவனம் ஒன்றில் பொறுப்பான பணியிலிருக்கும் நான் பிறந்தது புதுக்கோட்டையில்தான். அப்பொழுது நான் சிறுவன். வசதியான நிலையில் வாழ்ந்து வந்த என் தந்தை, நாட்டு விடு விடுதலைப் போராட்டத்தின் போது வடக்கத்திக்காரர் ஒருவர் துணையுடன் கூட்டுச் சேர்ந்ததால் சொத்துக்களை இழந்தாராம். விவரமாக எனக்கு யாரும் இந்தச் செய்திகளைச் சொன்னதில்லை. எனக்கும் 'நடந்து முடிந்த' நிகழ்ச்சிகளைப்பற்றி மீண்டும் நினைக்கும் விருப்பமுமில்லை.

என் தந்தை மறைவுக்குப் பின் புதுக்கோட்டையை விட்டுக் குடிபெயர்ந்த எனக்கு அந்த ஊருக்கு மீண்டும் செல்லும் வாய்ப்பு ஏற்படவில்லை. விருப்பும் இல்லை. இப்பொழுது தமிழ்நாட்டுக்கு முகர்ஜியுடனும், வெளிநாட்டு நிருபருடனும் பயணமான பொழுது தான் புதுக்கோட்டைக்குச் செல்ல வெண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

புதுக்கோட்டை சமஸ்தானம் இந்திய அரசுடன் இணைந்த பொழுது திருச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியாக இணைத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் புதுக்கோட்டைக்குப் பொலிவூட்டும் வகையில், அந்தப் பகுதி மக்களின் நெடுநாளைய ஆசையை நிறைவேற்றிடத் தமிழக அரசு புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக அமைந்திருந்த செய்தியை அறிந்தவுடன் முகர்ஜி புதுக்கோட்டைக்குச் செல்வோம் என்றார்.

அப்பொழுதுதான் தனக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள தொடர்பை முகர்ஜி விளக்கினார்.

''என் தந்தை இளமையில் புதுக்கோட்டையில் வாழ்ந்தார். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பொழுது தொடர்ந்து இங்கே இருக்க முடியவில்லை. புதுச்சேரியில் சென்று வாழ்ந்தார். இறுதிவரை அங்கே வாழ்ந்து உயிர் துறந்தார். நான் புதுக்கோட்டையில்தான் பிறந்தேன்.''

முகர்ஜி இவ்வளவு நா எதுவும் சொல்லாது இருந்தா திடீரென்று தான் புதுக்கோ டையில் பிறந்தவன் என் அவர் சொன்னதும், அடிக்க புதுக்கோட்டை பற்றிய செய் களை விசாரித்ததன் காரண விளங்கியது.

தமிழ்நாட்டில் புதிய ச தாய அமைப்பை உருவாக்க தமிழக அரசு ஆற்றும் அரு பணிகளின் செய்திகளை தொகுத்திட வந்திருந்த முகர் யின் வெளிநாட்டு நண்ப பிச்சைக்காரர் மறுவாழ் இல்லம் ஒன்றைப் பார் விரும்பினார். புதுக்கோட்ட மச்சுவாடியில் உள்ள பிச்சை காரர் மறுவாழ்வு இல்லத்தை பார்க்கச் சென்றோம்.

பிச்சைக்காரர் மறுவாழ் இல்லத்தைச் சுற்றிப் பார் தோம். வெளிநாட்டு நிரு சிலபிச்சைக்காரர்களைப்பேட் கண்டார். ஒரு வயதா பிச்சைக்காரர் என்னை முகர்ஜியையும் வைத்த க வாங்காமல் பார்த்துக்கொ டிருந்தார்.

பிறகு தயங்கித் தயங் எங்களை நெருங்கி வந்தா என்னைப் பார்த்துக் கேட்டா

''ஐயா நீங்கள் சுப்பிரம யத்தின் மகன்தானே?''

''ஆமாம், ஐயா.''

முகர்ஜியைப் பார்த்து கேட்டார் '' நீங்கள் சியா முகர்ஜியின் மைந்தர்தானே:

## புதுக்கோட்டை மாவட்டத் திருக்கோயில்கள்:

திருக்கோகர்ணம் அருள்மிகு பிரகதாம்பாள் உடனுறை கோகர்னேசர் ஆலயம்.
புதுக்கோட்டை அருள்மிகு புவனேசுவரி ஆலயம்.
குடுமியான்மலை சாந்திநாத சுவாமி ஆலயம், குடுமிநாதர் ஆலயம்.
கொடும்பாளூர் மூவர் கோயில்.
நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம்.
விராலிமலை, குமரமலை, தேனிமலை, வையாபுரி மலை முருகன் கோயில்கள்.
திருக்களம்பூர் அருள்மிகு வைத்தீசுவரன் கோயில்.
திருமயம் அருள்மிகு சத்தியகிரீசுவரர் ஆலயம்.
ஆவுடையார் கோவில் அருள்மிகு ஆத்மநாத சுவாமி ஆலயம்.
பேரையூர் அருள்மிகு நாகநாதசுவாமி கோவில்.



புதுக்கோட்டை—மச்சுவாடியிலுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம்.

''ஆமாம், நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? என் தந்தையை உங்களுக்குத் தெரியுமா?'' என்று தட்டுத் தடுமாறி, தனக்குத் தெரிந்த தமிழில் பேசினார் முகர்ஜி.

''உங்கள் இருவருடைய முகச்சாயலில் இருந்து தெரிந்து கொண்டேன். உங்களுக்கு நேரமிருக்குமா? நான் கொஞ்சம் விரிவாகப் பேச வேண்டும்'' என்றார்.

நான், ''தாராளமாகப் பேசுங்கள்'' என்று சொன்னேன்.

சிங்கமுத்து என்ற அந்தப் பெரியவர் சொன்னதன் சுருக்கம் இதுதான்:—

என் தந்தை சுப்பிரமணியமும், முகர்ஜியின் தந்தை சியாம் முகர்ஜியும் புதுக்கோட்டையில் கூட்டாக வணிகம் நடத்தினார்கள். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் நண்பர் இருவரும் ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தார்கள். சுதேசி இயக்கத்துடன் அவர்களுக்கு இருந்த தொடர்பு ஊரறிந்த ஒன்றாகும். அது மட்டுமல்ல, சுதந்தரப் போராட்ட வீரர்களில் தீவிரவாதிகள் வகையைச் சேர்ந்தவர்கள்.

அவர்களுடைய சுதேசி வணிக நிறுவனத்தில் மானேஜராக இருந்தார் சிங்கமுத்து.

என்னவோ சிங்கமுத்துவுக்குப் பணஆசை அதிகமாகிவிட்டது. சுப்பிரமணியம், சியாம் முகர்ஜியின் போராட்டத் திட்டங்களைப் பற்றிப் போலீசாருக்குத் துப்புக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல அவர்களைக் காட்டிக் கொடுத்தது ஒருபுறம்; அவர்களுடைய நிறுவனத்தைச் சூறையாட ஒருபுறம் சிங்கமுத்துவுக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

சுப்பிரமணியமும், சியாம் முகர்ஜியும் தலைமறைவாக இருந்தார்கள். சியாம் முகர்ஜி புதுச்சேரியில் சரண் புகுந்தார். சுப்பிரமணியம் புதுக்கோட்டையிலேயே தலைமறைவாக இருந்தார்.

வணிக நிறுவனம் முழுவதையும் கவனிக்கும் பொறுப்பு சிங்கமுத்துவுக்கு வாய்த்தது. சியாம் முகர்ஜி எல்லாப் பணத்தையும் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டார் என்று சுப்பிரமணியத்தை நம்ப வைத்துவிட்டார் சிங்கமுத்து. தலைமறைவாக இருந்த சுப்பிரமணியத்திற்கு நம்ப வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. தலைமறைவாக இருக்கும் பொழுதே சுப்பிரமணியம் நோய் வாய்ப்பட்டு இறந்தார்.

பெருஞ்சொத்துக்கு அதிபதியான சிங்கமுத்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினார். முடிவு வினை விதைத்தவன், வினை அறுக்க வேண்டாமா? காசுகள் கைவிட்டுப் போன பின் அனாதை ஆனார். தொழுநோயும் வந்துவிட்டது. பிறகு அவருக்குப் புகலிடம் புதுக்கோட்டை மச்சுவாடியில் அமைந்திருந்த பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம்தான்.

சிங்கமுத்துவிடம் செய்திகளைத் தெரிந்து கொண்ட பின்பு பெரிய சரித்திர உண்மைகளை அறிந்து கொண்டது போன்ற உணர்வு எங்களுக்கு! நாங்கள் உணர்ச்சிப் பிழம்பானோம்.

சிங்கமுத்து அழுதுகொண்டே தான் செய்த தவற்றுக்கு எங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அவருக்கு ஆறுதல் சொல்லிவிட்டுத் திரும்பினோம்.

அப்பொழுது முகர்ஜி என்னிடம் சொன்னார்.

''என் தந்தை ஒரு புகைப் படத்தில் உங்கள் சாயலுள்ள ஒருவர் படத்தைக் காட்டி ''என் உயிர் நண்பன் இவன். இறுதி நாளில் என்னைத் தவறாகப்புரிந்து கொண்டான்'' என்பார். அவன் சொத்தில் அம்மன் காசு கூட எடுக்கவில்லை. ஆனால் விதி நம்ப வைத்துவிட்டது. இந்தியா சுதந்தரம் அடைந்த பின்பு இந்த உண்மையை அவனிடம் சொல்லாவிட்டாலும் அவன் குடும்பத்தாரிடம் சொல்ல முயன்றேன். ஆனால் அவன் குடும்பத்தார் தஞ்சை மாவட்டத்தில் எங்கோ குடியேறி விட்டார்களாம் தெரியவில்லை'' என்று அடிக்கடி சொல்வார்.

''ஏன் என்னைச் சந்தித்தவுடன் நீங்கள் வினவவில்லை? என்றேன்.

''ஏதோ ஒரு தயக்கம் ... மெதுவாகத் தெரியட்டும் என்று எண்ணினேன். ஆனால் அந்த அம்மன் காசு நம்மை அறிமுகப்படுத்தி ஒரு பெரிய உண்மையை அறிவித்து விட்டது'' என்றார் முகர்ஜி.

எப்படியோ எங்களிடம் ஓர் ஆனந்தம், நெகிழ்வு, நெருக்கம்.


இதை எங்களுடன் வந்திருந்த வெளிநாட்டு நிருபருக்கு எடுத்துரைத்தோம். அவரும் மகிழ்ந்தார். வாழ்த்துத் தெரிவித்தார்!

அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடப் புதுக்கோட்டையை வலம் வந்தோம். சுற்றித் திரிந்தோம். புதிய மாவட்டமாக மலர்ந்திருந்த புதுக்கோட்டையும் புதிய பொலிவுடனும், புத்துணர்ச்சியுடனும் விளங்கியது.

இந்தப் புத்துணர்ச்சி எங்கள் மகிழ்ச்சியுடன் போட்டி போட்டுக் கொண்டு எங்கும் பரவியிருந்தது.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படக்கூடிய 4000 குளங்கள் உள்ளன.**





புதுக்கோட்டை மாவட்டம்
ஒரு அங்குலம் = 10 மைல்கள்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
தஞ்சை மாவட்டம்
இராமநாதபுரம் மாவட்டம்
விராலிமலை
கீரனூர்
குன்றாண்டார் கோயில்
குளத்தூர் வட்டம்
அன்னவாசல்
புதுக்கோட்டை வட்டம்
புதுக்கோட்டை வருவாய்த்துறை கோட்டம்
கரம்பக்குடி
புதுக்கோட்டை
ஆலங்குடி வட்டம்
ஆலங்குடி
பொன்னமராவதி
திருமயம் வட்டம்
திருமயம்
அரிமளம்
அறந்தாங்கி
அறந்தாங்கி வட்டம்
ஆவுடையார் கோவில்
அறந்தாங்கி வருவாய்த்துறை கோட்டம்
வங்காள விரிகுடா
குறிப்பு
மாவட்ட எல்லை
வருவாய்த்துறை கோட்ட எல்லை, தலைமை இடம்
வட்ட எல்லை, ,,
பஞ்சாயத்து ஒன்றிப்பு எல்லை

# புதுக்கோட்டை மாவட்டம் சில விவரங்கள்

கோட்டங்கள்

1. புதுக்கோட்டை
2. அறந்தாங்கி

வட்டங்கள்

1. புதுக்கோட்டை
2. அறந்தாங்கி
3. குளத்தூர்
4. திருமயம்
5. ஆலங்குடி

ஊராட்சி

ஒன்றியங்கள் :

1. திருவரங்குளம்
2. கறம்பக்குடி
3. குன்னண்டார்கோவில்
4. அன்னவாசல்
5. விராலிமலை
6. பொன்னமராவதி
7. திருமயம்
8. அரிமளம்
9. அறந்தாங்கி
10. ஆவுடையார் கோயில்.

ஊராட்சிகள் ...490

பேரூராட்சிகள் ... 9

நகராட்சிகள் ... 1

**ஆறுகள்**

1. வெள்ளாறு
2. அக்னியாறு
3. குண்டாறு
4. பாம்பாறு

**சுற்றுலா இடங்கள்**

1. சித்தன்னவாசல்
2. குடுமியான் மலை
3. கொடும்பாளூர்
4. விராலிமலை
5. திருமயம்
6. ஆவுடையார் கோவில்
7. நார்த்தாமலை

வேளாண்மைப் பெருக்க நிறுவனங்கள்

1. அன்னு பண்ணை, குடுமியான்மலை, 2. கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம், 3. புதுக்கோட்டை ஒருங்கிணைந்த வேளாண்மை அபிவிருத்தித் திட்ட அலுவலகம். 4. மாவட்ட கால்நடைப் பண்ணை.

புதுக்கோட்டை மாவட்டத் தலைநகர்: புதுக்கோட்டை

பரப்பளவு ...4,600.11 சதுர கிலோ மீட்டர் (1796.92 சதுர மைல்கள்)

மக்கள்தொகை ...9,42,459.

**வேளாண்மை**

நஞ்சை நிலப்பரப்பு...1,56,965 ஹெக்டேர்

புஞ்சை நிலப்பரப்பு...1,04,065 ஹெக்டேர்

முக்கிய விளை பொருட்கள் ...நெல், பயிறு வகைகள், வேர்க்கடலை, முந்திரி, கரும்பு

**கல்வி**

| | |
|---|---|
| கலைக்கல்லூரி—ஆண்கள் | ... 1 |
| ,, ,, பெண்கள் | ... 1 |
| பயிற்க் கல்லூரி | ... 1 |
| பார்ஸ்டல் பள்ளி | ... 1 |
| உயர்நிலைப்பள்ளிகள் | ... 39 |
| உயர்நிலைத் தொடக்கப்பள்ளிகள் | ...132 |
| தொடக்கப்பள்ளிகள் | ...885 |

**மருத்துவ வசதி**

| | |
|---|---|
| தலைமையிடத்தில் அரசினர் பொது மருத்துவமனை | ... 1 |
| தலைமையிடத்தில் அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை | ... 1 |
| இதர அரசினர் மருத்துவமனைகள் மருந்தகங்கள் | ... 9 |
| ஆரம்பச் சுகாதார நிலையங்கள் | ... 10 |

**தொழில்கள்**

| | |
|---|---|
| புதுக்கோட்டை தொழிற்பேட்டை | ... 1 |
| பஞ்சாலைகள் | ... 3 |
| மரவேலை செய்வோர் கூட்டுறவுச் சங்கம் | ..... ..... 1 |
| ஊராட்சி ஒன்றிய தச்சுத் தொழிற் கூடங்கள் | ...4 (திருவரங்குளம், அன்னவாசல், பொன்னமராவதி மற்றும் அறந்தாங்கி |
| ஊராட்சி ஒன்றிய கொல்லுத் தொழிற்கூடங்கள் | ...2 (திருவரங்குளம் மற்றும் திருமயம்) |
| பனைஓலைப் பயிற்சி மற்றும் தொழிற்கூடம் | ...1 (புதுக் கோட்டை) |

# அண்ணா பண்ணையும்

## ஆராய்ச்சி நிலையமும்

எங்குப் பார்த்தாலும் புல்லும், புதரும் மண்டிய காடு! சில இடங்களில் வெட்டாந் தரை! மேடு பள்ளமான செவ்வல் நிலம்! காலா காலமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த நிலையில் மண் அரிப்பு! அதன் பயனாக மண்ணில் ஊட்ட இழப்பு! ஆடு மாடுகளைக் காலாற மேய்ப்பதற்கு மட்டுமே பயனுள்ள நிலம்! இந்நிலையில் தான் இருக்கிறது புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள காட்டு நிலங்கள்.

''ஏழை எளியவர்களுக்கு நல் வாழ்வளிக்க இந் நிலங்களைப் பயன்படுத்த முடியாதா? இந்த நிலங்களைச் சீர்படுத்த முடியாதா? நாட்டு மக்களுக்கு வேளாண்மைக்கு அடிப்படையான நல் விதைகளை இங்கிருந்து உற்பத்தி செய்தி அளிக்க முடியாதா? 'மாநிலப் பண்ணைகள்' என்ற பரந்த அளவுப் பண்ணைகளைப் பற்றி ஏனைய நாடுகளில் . பேசுகிறார்களே, அதைப் போன்று நாட்டு மக்களுக்குச் சொந்தமான பெரிய பண்ணையை இந்தக் காட்டின் மத்தியில் மாதிரியாக அமைக்க முடியாதா?'' . . இவ்வாறு எண்ணத் தொடங்கியது! இந்தக் காட்டைப் பார்த்த உயர்ந்த தமிழ் உள்ளம் ஒன்று—தமிழர்களின் வாழ்வே தனது மூச்சு என்று வாழ்ந்த உயர்ந்தவர்—அறிஞர்— அன்றைய மாண்புமிகு முதல்வர்.

இந்த எண்ண விதையைச் சீராகக் கட்டிக் காத்து வளர்த்து, 1,000 ஏக்கர் பரப்பிலே ஒரு பெரிய பண்ணையை அண்ணாவின் பெயரில், தனது ஒப்பற்ற செயல் திறமையால் அமைத்துத் தந்துள்ளார் டாக்டர் கலைஞர்—இன்றைய மாண்புமிகு முதல்வர்.

''காட்டைக் கழனியாக்குவோம்!—பயிர் வளர்ப்போம்! துயர் துடைப்போம்!'' என்பதற்கு எடுத்துக் காட்டு, குடுமியான்மலை அண்ணா பண்ணை. புல்லும் புதருமாகக் கேட்பாரற்றுக் கிடந்த காட்டிலிருந்து 1,000 ஏக்கர் நிலத்தை எடுத்துச் சீர்படுத்திக் கடந்த ஐந்தாண்டுகளாகச் சிறப்பாக உழைத்தமையால், இன்று 800 ஏக்கர் பொன் கொழிக்கும் நிலமாக மாறியுள்ளது. இதில், 150 ஏக்கரில் மா, தென்னை, எலுமிச்சை போன்ற மரங்களைப் பயிர் செய்துள்ளோம். தரையிலுள்ள தண்ணீரைப் பயன்படுத்த 32 கிணறுகள் தோண்டி மோட்டார் பம்பு செட்டுகள் அமைத்துள்ளோம். இந்தக் கிணற்றின் மூலம் சுமார் 200 ஏக்கரில் தோட்டக்கால் பயிர்களைப் பயிர் செய்து வருகிறோம். மீதியுள்ள நிலங்களில் மழைக்குத் தகுந்தவாறு வானம் பார்த்த புஞ்சைப் பயிர்களைப் பயிர் செய்து வருகிறோம். இருக்கும் நிலம் 800 ஏக்கர் தான் எனினும் நல்ல பயிர்ச் சுழற்சியைப் பயன்படுத்தி ஒவ்வொரு ஆண்டும் 1,000 ஏக்கருக்கு மேலாகப் பயிர் செய்து வருகிறோம். ஆண்டுதோறும் இந்தப் பரப்பளவை அதிகப்படுத்த முயற்சி எடுத்து வருகிறோம். பண்ணையும் மிகவும் இலாபகரமாக இயங்கி வருகிறது.

இந்தப் பண்ணையைப்பற்றிய ஓர் அரிய செய்தி. 1,000 ஏக்கர் பயிர் செய்ய எங்களிடம் ஒரு ஜோடி மாடு கூடக் கிடையாது! 9 டிராக்டர்கள் வைத்திருக்கிறோம். அவற்றை வைத்துக் கொண்டே சாகுபடி அத்தனையும் செய்து வருகிறோம். விதை அபிவிருத்திக்குத்தான் இப் பண்ணையில் முதல் இடம் தந்துள்ளோம். ''பயறு வகை'' விதைகளைச் சிறப்பாக அதிகப் பரப்பில் பயிர் செய்கிறோம். 'அஞ்சுகம்', 'இராஜேந்திரன்', 'பிரபாத்', 'டீ. 9' போன்ற விதைகள் இன்று அதிக அளவில் பயிர் செய்கிறோம். இவற்றையெல்லாம் தமிழக வேளாண்மைத் துறை முதல் பயிர் செய்து அதிகரிக்கும் இடம் ''அண்ணா பண்ணை'' தான்! இதைப் போலவே, எச். பி. 3 கம்பு, சி.எஸ். எச். 5 மக்காச் சோளம், கோவில்பட்டி ஒட்டுச் சோளம் இவற்றை அதிகப் பரப்பில் பயிர் செய்கிறோம். ''அண்ணாமலை கத்தரிக்காயா? கோ. 1 தக்காளியா, குடமிளகாயா?'' இவற்றையும் பயிர் செய்கிறோம் அண்ணா பண்ணையில் ! காய்கறிக்காக மட்டுமல்ல ; விதை சேகரித்து இப் புதிய இரகங்களைப் பரப்பிட! இதைப் போலவே திண்டிவனம் 7, 10, 2 நிலக்கடலை, எம். சீ. யூ. 7 பருத்தி, கே. 1 மிளகாய் இவற்றையும் பரந்த அளவில் விதைக்காகப் பயிர் செய்கிறோம். இவ் விதைகளை நல்ல முறையில் பதனபடுத்த விதைச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றையும் அமைத்துள்ளோம் அண்ணா பண்ணையில்.

அண்ணா பண்ணையிலேயே கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் ஒன்றையும் அமைத்துத் தந்துள்ளது தமிழக அரசு. ''இராஜேந்திரன்'' பச்சைப் பயறு இந்த நிலையத்தின் கண்டு பிடிப்பு! வானம் . பார்த்த பூமிக்கு வேண்டிய வேளாண்மை ஆராய்ச்சிகளும், புதிய இரகங்களும், அவற்றிலும் சிறப்பாகப் பயறு வகைகள் ஆராய்ச்சி, மண் வள ஆராய்ச்சி, பயிர்ச் சுழற்சி ஆராய்ச்சி இவை வெகு தீவிரமாக நடைபெறுகின்றன இந்த ஆராய்ச்சி நிலையத்தில்.

அதோ ஒரு விஞ்ஞானி பயறு வகையில் தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறாரே என்ன என்று பார்க்கலாமா? வட நாட்டு ''டி. 9 உளுந்தையும்'', தாமிரபரணி தீரத்து ''மிதி உளுந்தை''யும் ஒட்டுக்கட்டி உண்டான பயிர் அது! 'டி. 9' உளுந்தின் குறுகிய காலத் தன்மையையும், மிதி உளுந்தின் மகசூல் திறனையும் ஒன்றாக இணைத்திருக்கிறார் கலைஞர் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த அந்த விஞ்ஞானி.

இவற்றைப் படிக்கும் வேளாண்மை மக்களை – புதிதாகத் தோன்றியுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ''கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்'', ''அண்ணா பண்ணை'' ஆகிய இரண்டினையும் பார்க்க வருக என்று அழைக்கிறோம்.

அ. வேங்கடராமன்
இயக்குநர்,
வேளாண்மைத்துறை,
தமிழ்நாடு அரசு.

# வெண்பாப் போட்டி

## தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து — 70

*உள்ளமிலாச் சாவே! உயர்ந்தோரை வாழவிடு;
அள்ளிச்சென் றோரை அனுப்பிவிடு;—கொள்கைமறம்
கொண்டோர்கள் நாட்டில் கொடுமைக் குலம்மறையத்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து

—தென்னகன்தேவி, புதுச்சேரி-1.

நற்றமிழில் தேன்பாக்கள், நன்மைதரு கேள்விபதில்
கொற்றவரின் திட்டங்கள் கொண்டுவந்து—பற்றுடனே
தண்டமிழர்க் கீயும் தமிழரசே! பல்காலம்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—க. நல்லமுத்து, வல்லக்குண்டாபுரம்.

தென்ற லொடுபிறந்து கன்னலில் தேன்கலந்து
மன்னர்மூ வேந்தர் மடிவளர்—தென்தமிழே
கண்ணேநற் கண்மணி யேநினக் கென்னுடலம்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—முருகேசன், அவினாசி.

தன்னாட்டு மண்ணிற்கும் தாய்தந்தை யானூர்க்கும்
இன்மை நிலையிலுள்ள ஏழையர்க்கும்—என்றும் நீ
''தொண்டுகிழம்'' ஆனாலும் தொண்டுகிழம் ஆகாது
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—விநோத லீலன், இரா. வெள்ளோடு.

செந்தீ மழைவீழ, சீற்றப் புயல்வீச
முந்தி விளக்கேந்தி முன்னேறும்—எந்தலைவா!
மண்டும் பகைக்கு மருளாயே! நின்போலத்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—பல்லவன், திருக்கழுக்குன்றம்.

பகைநெருப்புச் சூழ்ந்து பரவும், பொறுமைப்
புகைமண்டித் துன்புறுத்தும்! பொய்மைத்—தொகைவளர்ந்து
கொண்டநற் கொள்கை குலைவுறுத்தும்! ஆயினும்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—தமி. எழும்பூர், குளமங்கலம்.

சிலகாலம் வாழ்ந்தாலும் செந்தமிழ் நாட்டில்
குலம்சாதிக் கோத்திரக் குப்பை—அலப்பெல்லாம்
மண்மூடிப் போக மரிக்கும் வரைதுணிந்து
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—ம. சே. இராசு, திருப்பூர்.

எங்கும் பயிர்செழிக்க ஏற்றம் பலபெருகத்
தங்கக் குறளாட்சி தான்தழைக்கத்—தங்குபுகழ்ப்
பொன்னொடு மேலும் பொலிவுபெற நங்கலைஞர்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—ம. சக்குபாய், உடுமலைப்பேட்டை.

வன்முறைகள் செய்திங்கே வாழ்வமைக்க எண்ணாமல்
நன்முறைகள் நாடி நலங்குவிக்க;—நன்மைகளை
உண்டாக்க வையகத்தில் உத்தமராம் காந்திவழி
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—எஸ். சுந்தரம், வெண்பாவூர்.

---

* பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திருமதி தென்னகன் தேவி,
மே/பா. அ. நாமதேவன்,
56, சுந்தர மேஸ்திரி தெரு,
குயவர்பாளையம், புதுச்சேரி.

# வெண்பாப் போட்டி

பள்ளனென்பார் பாழ்சாதிச் சக்கிலியன் நீயென்பார்
குள்ளமனம் கொண்டன்றே கூறழித்தார்—எள்ளளவிலே
திண்டாடும் இந்நிலைமை மாற்றிய 'தந்தை' வழி
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—புலவர் ச. இராசு, கோவில்பட்டி.

வாழும் வரலாற்றில் வாழிடங்கொள் மாண்புகழீர்!
ஏழை, எளியோர், இரந்துண்போர்—தாழ்வகற்றத்
தண்டமிழ்ப் 'பொங்கல்' தனிவிழாச் சூளின்மேல்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

அண்ணா அமைத்த அருமை அரசினைக்
கண்ணெனக் காக்கும் கலைஞரைப்—பின்பற்றி
உண்மை உழைப்பால் உயர்ந்து விளங்கநாம்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—புலவர் மா. தமிழன்பன், சென்னை-30.

எண்ணத்தை யொட்டி எழுதுகின்ற பாக்களையும்
வண்ணஇதழ் ஏற்க மறுத்தாலும்,—பெண்ணேகேள்!
கொண்ட உணர்வாலே கொஞ்சுதமிழ்ப் பாவெழுதித்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—ப. குப்புசாமி, திருச்சி-4.

சேரி ஒழிப்புடனே, சீர்திருத்தக் கல்யாணம்;
மாரியாய்த் தொண்டாற்றும் வாரியங்கள்;—பாரறியக்
கண்ணாய்த் தமிழ்காத்தல்; கைவந்தோர், கள்ளமிலார்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—தவமுத்து, அண்ணாமலை, தவசி.

உழுவார்க் குரிமைநிலம், ஊதியத்தைச் சேர்த்தல்
தொழுநோயர்க் கில்லங்கள் தோற்றல்,—தொழிற்பேட்டை
மின்வசதி, கண்முகாம், மேம்பாலம், கல்வியென்று
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—க. பெரியசாமி, பி.எஸ்சி., ஓலைப்பாடி.

நாடும் மொழியும் நலம்பெற நம்நாட்டில்
வாடும் எளியோர்கள் வாழ்வுபெறப்—பீடுடைய
கண்ணொளி தந்த கலைஞர் தலைமையிலே
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

உண்ணார்; உறங்கார்; உலையார்; சுயநலத்தை
எண்ணார்; பழியோ டிழிவறியார்—வண்டமிழின்
தொண்டோடு நேர்மையிலே தோய்ந்திடுவார்; இத்தகையோர்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—புலவர் அ. வெ. காசிநாதன், அணைக்கரை.

அண்ணலார் காந்தி, அருளாளர் நேருபிரான்
மண்ணுலகம் போற்றுகின்ற மாமேதை—அண்ணாபோல்
மண்டுபுகழ் எய்த மனங்கொண்டோர் நாட்டிற்குத்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன், பி.ஏ., திருச்சி-4.

தென்றல் தழுவுவதும், தேன்நிலவு காய்வதுவும்,
அன்றலரும் முல்லை மணப்பதுவும்,—நன்முகிலோ
அண்டம் பொழிவதுவும் மன்னுயிர்க்கே, நாமவைபோல்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—புலவர் இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

எண்ணரிய செல்வங்கள் ஏற்றமுடன் பெற்றிடவே
மண்ணதனைப் பொன்னாக மாற்றிடவே—மண்மீது
பண்புடனே அண்ணா பகர்ந்திட்ட நல்வழியில்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—நாரண இராதாகிருட்டிணன், சிதம்பரம்.

போற்றலுக்குத் தாள்வணங்கிப் பொய்கூறும் புன்மனத்தார்
தூற்றலுக்கும் அஞ்சாது தூய்மையுடன்—ஏற்றமுறப்
பண்பாடு காத்தே பகைமுடித்துப் பார்புகழத்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—பொன்னழகன், சென்னை-7.

நெஞ்சுக்கு நீதியினை நேர்மையுடன் பின்பற்றி
அஞ்சாமல் ஆயிரமாய்ச் செய்துள்ளார்—நெஞ்சுயர்த்தித்
தண்டமிழர் நாட்டினிலே தாரகையாய் ஒளிர்ந்திட்டுத்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—கானதாசன், செய்யாறு (வ.ஆ.)

இந்நா இதுவும் இயம்பும்; இனிஇயம்பும்
அந்நா அழுக்காறால் அன்பிழக்கும்;—எந்நா, என்
சொன்னாலும் சோர்வகற்றிக் கண்ணா, நீ அண்ணாபோல்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.

—கவிஞர் சிவ. நடராசன், மாமல்லபுரம்.

# வெண்பாப் போட்டி

எண்ணித் துணிந்திடுக எத்தொழிலும்; வன்பகையை
மன்னிப்பாய்; நன்றி மறவற்க—நன்னெஞ்சே!
தொண்டற்றோர் தூற்றிடினும் தொல்லைபல தந்திடினும்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—இரத்தின மனோகரன், சென்னை-11.

நெஞ்சை விரிவாக்கி நேர்வருந்துன் பந்தாங்கிப்
பஞ்சையாய் வாழ்ந்தாலும் பண்போடு—கொஞ்சுதமிழ்த்
தொண்டர்களை வாழ்த்தி வரும்பகையைத் தூளாக்கித்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—புலவர் எழில் மாறன், ஆயக்குடி.

பாரதியாய், காந்தியாய்; பாரதியின் தாசனுமாய்;
பேரறிஞ ராய், நற் பெரியாராய்,—சீர் உறவே!
மண்டுமறி யாமையிருள் மாய்த்துக் குமுகாயத்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—பி. எஸ். வேலன், திருச்சி-9.

நொந்து மடிபவர்க்கும் நோய்தீர்க்கும் மாமருந்து
அன்பு மொழியொன்றே; ஆய்ந்துரைத்துப்—புன்னகையோ
டின்முகத்தைக் காட்டி இனிய வுளத்திலேடு
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—வே. அரங்கராசன், தாராசுரம்.

நல்ல தமிழ்நடையில் நற்கவிதை, பேருரைகள்,
பல்சுவையும் பல்வளஞ்சேர் பக்குவமும்—சொல்வதுடன்
வெண்பாவில் போட்டியுந்தான் மீட்டும் தமிழரசு
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—சீனி சக்கரபாணி, பெரும்பாலை.

தன்மான நோக்கால் தமிழ்ப்பற்று மிக்குளதால்
இன்னுதை நீக்கி இலங்குவதால்—பன்னலமும்
கண்டேத்தும் ஏழைக்குக் கார்முகில்போல் இவ்வரசு
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—பா. பக்தவத்சலம், மன்னார்குடி.

பண்டைப் பெருமையே பாராட்டிப் பேசுவதில்
கொண்டுள்ள காலத்தைப் போக்காமல்—எண்டிசையோர்க்
கண்ட கருத்தெல்லாம் கொண்டுவந்து செந்தமிழ்க்குத்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—சித்திரை நாராயணசாமி, சின்னச்செங்காடு.

தன்னுயிரோ தாய்மொழிதான் தன்னினமோ தாழ்ந்தோர்கள்,
தன்னுறவோ தக்கோர்கள், தன்மொழியோ—அன்பென்றே
பண்போடு தன்பகையும், பாராட்டி அண்ணுபோல்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—எஸ். கிருஷ்ணமூர்த்தி, பெரும்பாலை.

தீண்டாமை நச்சரவு தீண்டாமல் செத்தொழிய
வேண்டாத சாதிப்பேய் வீழ்ந்தழியப்—பூண்டோடு
மண்டும் மடமை வறுமைப் பிணிமாயத்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—ஜி. வி. அர்த்தநாரி, பி.ஏ., பி.டி., வேலூர்.

மாண்டாலும் தொண்டர்க் கழிவில்லை, மன்னுயிரை
ஆண்டாலும் தன்னலத்தார் வாழ்வதில்லை—ஆண்டெல்லாம்
உண்டுறங்கிச் சாகாமல் உள்ளளவும் நாட்டிற்குத்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—த. நடராசன், பி.ஏ., சேதுபதி கிராமம்.

சிலுவையும் நஞ்சும் சிறைக்கோட்டச் சாவும்
எலும்புருகுச் சொல்வசையும் குண்டும்—உலகினுக்குத்
தொண்டுசெய்தார் கண்டபலன் என்றுணரும் சோர்வின்றித்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—புலவர் இரா. மதனகோபால், பி.ஏ., சமுகரங்கபுரம்.

இதனை இவன்முடிக்கு மென்றாய்ந்து, காலம்
அதனை அறிந்தாற்றி ஆள்க—அதனாலே
புண்பட்டால் என்ன புகழ்தானே! பண்பட்டோர்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—அப்துல், கருங்காலக்குடி.

பத்திரிகைக் காகிதப்பற் றாக்குறையால் ஏடெல்லாம்
தத்தம் விலையேற்றித் தத்தளிக்க—இத்தரையில்
கண்டோர் விரும்பும் தமிழரசே நீயிதுபோல்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—டி. எஸ். ஏ. வில்லியம், பி.ஏ., பி.டி., வால்பாறை.

பாட்டரங்கம் பட்டிமன்றம் பாங்காய்க் கருத்தரங்கு
நாட்டிலெங்கும் நன்முறையில் செய்துசுவை—கூட்டிடுவோம்!
கண்போன்றே நம்மருங் கன்னித் தமிழ்வளர்த்துத்
தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து.
—இராம. மறைமுதல்வன், வடமாதிமங்கலம்.



வாழ்க்கைக்கு
ஒரு பாடம்!
எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!
சேமிப்புப் பழக்கமே
எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்
சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.
மாதம் செலுத்தும் தொகை
5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ரூ. 5 ரூ. 355
ரூ. 10 ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ரூ. 5 ரூ. 337.50
ரூ. 10 ரூ. 675.00
தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.
இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.
இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.
- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

# மருத்துவப் பயன்தரும் சில சுவை நீர்கள்

— மயிலை சீனி வேங்கடசாமி.

உடம்புக்கு நலந்தருகிற சில சுவைநீர் வகைகளையும் அவற்றைச் செய்கிற முறைகளையும் எழுதுகிறேன். இனிப்புள்ள இந்தச் சுவை நீர்களுக்கு 'சர்பத்' என்று யுனுனி (முஸ்லிம் மருத்துவர்) கூறுவர். இந்தச் சுவை நீர்களை வசதியுள்ளவர் வீட்டிலேயே செய்து கொள்ளலாம். இவை இனிப் பானவை மட்டுமல்ல. ஏராளமான நோய்களைக் குணப்படுத்தும் இனிய மருந்துகளும் ஆகும்.

**பொதினா சர்பத்**

பொதினா அல்லது புதினாக் கீரை காய்கறித் தோட்டங்களில் பயிர் செய்யப்படுகிறது. காய்கறிக் கடைகளில் விற்கப்படுகிறது. புதினா இலை மணமாக இருக்கும். இதை அறிமுகப்படுத்தத் தேவையில்லை. சாதாரணமாக வீடுகளில் புதினாதுவையல் செய்து சாப்பிடுவது வழக்கம்.

புதினாவின் குணம்: அஜீரணத்தை மாற்றும்; பசித்தீபனத்தை தூண்டும். வாய்வுகளைக் கண்டிக்கும். தீனிப் பைக்கும் குடலுக்கும் வலிவு கொடுக்கும். உதிரச் சிக்கலை அறுக்கும். கபத்தை அறுக்கும். தீனிப் பையிலுள்ள சிக்கலை அறுத்துச் சுத்தி செய்யும். ஆனால் மூல நோய்க்கு உதவாது. இதன் தீமையைப் போக்க எலுமிச்சம் பழச் சாறு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

புதினா (சர்பத்) செய்யும் விதம் : புதினாவை நீரில் அலசிச் சுத்தஞ் செய்து இடித்துச் சாறு பிழிந்து கொள்ள வேண்டும். எலுமிச்சம் பழத்தைச் சாறு பிழிந்து கொள்ள வேண்டும். பிறகு இரண்டு சாறுகளையும் கலக்க வேண்டும்.

கலக்க வேண்டிய அளவு : புதினா சாற்றின் அளவுக்கு மூன்று பங்கு பழச் சாறு கலக்க வேண்டும். இவ்வாறு கலந்த சாற்றுடன் சர்க்கரை சமன் அளவாகச் சேர்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பதமாகக் காய்ந்தவுடன் இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும். பழகின மண் பாண்டத்தில் காய்ச்சுவது நல்லது. பதமாகக் காய்ச்சப்பட்ட இந்தச் சர்பத்தை, பீங்கான் பாத்திரத்திலாவது கண்ணாடிப் புட்டியிலாவது ஊற்றி நன்றாக மூடி வைக்கவும்.

அருந்த வேண்டிய விதம் : இந்த சர்பத்தை வேளைக்கு ஒரு தோலா அல்லது இரண்டு தோலா எடை வரையில் குவளையில் ஊற்றி அதனுடன் சுத்தமான தண்ணீர் கலந்து கலக்கி அருந்த வேண்டும். சர்பத்துக்களைத் தண்ணீர் கலக்காமல் சாப்பிடக் கூடாது.

தீரும் நோய்கள் : தலை நோய், மார்பு வலி, குண்டிக்காயைப் பற்றின நோய்கள், இருமல் இவைகளை நீக்கும். சூலை, சுரம் இவைகளையும் தீர்க்கும். நீர்ச் சிக்கலை அகற்றும். மார்பிலுள்ள கபத்தை எடுக்கும். வயிற்றிலுள்ள அசுபாவச் சத்துக்களை அகற்றும். மல சுத்தியாகும்.

**காசினிக் கீரை சர்பத்து**

கீரைகளைப் பயிர் செய்கிற கொல்லைகளில் காசினிக் கீரை பயிர் செய்யப்படுகிறது. இதன் இலை வெளுத்த பச்சை நிறமாக இருக்கும். சுவை சிறு கசப்பு. இந்தக் கீரையை முஸ்லீம்கள் இறைச்சியோடு சமைத்து உண்கிறார்கள். கடைகளில் கிடைக்கும் இந்தக் கீரை ஈரலைப் பற்றின நோய்க்கு உபயோகப்படுகிறது. அதிகமாக வேக வைத்தால் இதன் குணம் போய்விடும்.

காசினி சர்பத் (பானகம்) செய்யும் முறை : காசினிக் கீரையின் விதை 2 தோலா எடை, காசினிக் கீரையின் வேர் 2 தோலா எடை, கோழிக் கீரை (அதாவது பருப்புக் கீரை) விதை 1.5 தோலா எடை. வெள்ளரிப் பழ விதை 1.5 தோலா எடை, முலாம் பழ விதை 1.5 தோலா எடை. விதைகளை எல்லாம் தனித்தனியாக நன்றாக இடித்துப் பிறகு ஒன்றாகச் சேர்த்து இடித்துக் கொள்ள வேண்டும். பிறகு காசினி வேரை (பச்சை வேர்) சிதைத்து இடித்து, முன்னமே இடித்து வைத்துள்ள விதைகளோடு கலக்க வேண்டும். இவைகளைப் பழகின பானையில் இட்டு 1.5 படி(பட்டணம் படி) தண்ணீர் ஊற்றி அடுப்பில் ஏற்றிக் காய்ச்ச வேண்டும். நாலில் ஒன்றாகச் சுண்டின பிறகு கஷாயத்தைப் பிழிந்து எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த கஷாயத்துடன் சர்க்கரை அல்லது கற்கண்டு கலந்து பதமாகக் காய்ச்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

வேளைக்கு ஒரு தோலா எடை சர்பத்தோடு சுத்தமான நீர் கலந்து சாப்பிட வேண்டும்.

இதனால் தீரும் நோய்கள் : ஈரலைப் பற்றின கட்டுகளை உடைக்கும், சிறுநீரைப் பெருக்கும், உஷ்ணத்தால் வந்த சுரத்தைத் தணிக்கும், தாகத்தைத் தணிக்கும்.

**தாமரைப் பூ சர்பத்து**

தாமரைப் பூவின் குணம் : சூட்டைப் பற்றிய சுரம், தலை வலி, இருமல், மார்பு வலி, பக்கச் சூலை, நீர் சுருக்கு இவைகளுக்கு அதிக உபயோகப்படும். வாத உடம்புக்கு ஆகாது. அதற்குப் பரிகாரம் தேன் அல்லது காடியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இருதயத்துக்கு வலிமை கொடுக்கும். நீர்த் தாரைக்கு உதவாது. இதற்குப் பரிகாரம் கற்கண்டு சேர்த்துக் கொள்ளவும்.

சர்பத் செய்யும் விதம் : தாமரைப் பூவின் இதழ்களைத் துண்டு துண்டாக அரிந்து நிழலில் ஈரம் வரளும்படி ஆற வைத்துச் சேர்க்க வேண்டும். இதை நாலு சேர் தண்ணீரில் ஓரிரவு பகல் ஊற வைத்துக் கொள்க. பிறகு இதை அடுப்பில் ஏற்றி நாலில் ஒன்றாக நீர் சுண்டும்படி காய்ச்சிக் கொள்க. பிறகு நன்றாகப் பிசைந்து வடிகட்டிக் கஷாயத்தை எடுத்துக் கொண்டு, அந்தக் கஷாயத்தில் ஒரு சேர் வெள்ளைச் சர்க்கரை சேர்த்துப் பதமாகக் காய்ச்சிக் கொள்க. இந்த சர்பத்தை காலை மாலைகளில், வேளைக்கு ஒரு தோலா அல்லது இரண்டு தோலா எடை சாப்பிடலாம். சர்பத்தினை நீரில் கலந்து சாப்பிடவேண்டும்.

தீரும் நோய்கள்; சூட்டைப் பற்றிய தலைவலி, பித்தச் சுரங்கள், இருமல், மார்பு நோய், பக்கச் சூலை முதலிய நோய்கள் நீங்கும்.

சர்பத்தை மட்பாண்டத்தில் காய்ச்சுவது உத்தமம். வெள்ளைத் தாமரைப் பூ இதழினால் சர்பத்து செய்வது உத்தமம்.

வெள்ளைத் தாமரைப் பூ இருதயத்துக்கு வலிவைக் கொடுக்கும். வெள்ளைத் தாமரைப் பூ இதழ்களினால் குல்கந்து செய்தும் உண்ணலாம். இதழ்களைச் சிறு துண்டுகளாக நறுக்கி, பீங்கான் சாடியில் இதழ்களைப் பரப்பி அதன் மேல் சர்க்கரை தூவி அதற்கு மேல் மேலும் கொஞ்சம் இதழ்களைத் தூவி அதன் மேல் சர்க்கரையைத் தூவிஇவ்வாறு அடுக்கடுக்காகத் தூவி வெய்யிலில் வைத்து வர வேண்டும். சர்க்கரை உருகி இதழ்களோடு கலந்து விடும். நீர் வற்றுகிற வரையில் வெயிலில் வைத்து வர வேண்டும். அடிக்கடி கரண்டியால் கிளறி வெயிலில் வைக்க வேண்டும். இதுவே தாமரைக் குல்கந்து. வேளைக்கு ஒரு தோலா எடை உண்ணலாம். இருதய கமலத்துக்கு வலிவைத் தரும்.

### ரோஜாப் பூ சர்பத்து

ரோஜாப் பூவின் குணம் : இருதயம், ஈரல், நுரையீரல் (சுவாசப் பை), தீனிப் பை, குண்டிக் காய், பவனவாய், கருப்பை, குடல் ஆகிய உறுப்புகளுக்கு வலிமை கொடுக்கும். கண்ணொளியை அதிகரிக்கும். அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் பேதியாகும்.

சர்பத்து செய்யும் விதம் : ரோஜாப் பூவின் இதழ்களை ஈரம் புலரும்படி நிழலில் பரப்பி உலர்த்த வேண்டும். பிறகு இதழ்களை நீரில் இட்டு ஊற வைத்து அடுப்பில் ஏற்றிக் காய்ச்ச வேண்டும். காய்ச்சி நன்றாகப் பிசைந்து பிழிந்து கஷாயத்தை மட்டும் எடுத்துக் கொள்க (ஒரு சேர் இதழுக்கு நாலு சேர் தண்ணீர் ஊற்றி ஊற வைக்கவேண்டும். நாலில் ஒன்றாகச் சுண்டிய பிறகு கஷாயத்தை வடிகட்டிக் கொள்ள வேண்டும்.) கஷாயத்துக்கு சமன் அளவாக வெள்ளைச் சர்க்கரையைச் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இனிப்பு வேண்டுமானால் கஷாயத்துக்கு 1.5 பங்கு சர்க்கரை சேர்த்துக் கொள்ளலாம். வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு தோலா எடை நீரில் கலந்து சாப்பிடலாம்.

இதன் உபயோகம் : பித்த நீரைப் பேதியின் வழியாக நீக்கும். பித்தந் தீய்ந்து அதனாலுண்டான அனலை நீக்கும். ஈரலைப் பற்றிய கட்டுகளையும் அதனுடைய ரோகங்களையும் சொறி, சிரங்கு, தினவு முதலி




யவைகளையும் நீக்கும்.

ரோஜாப் பூ இதழினால் குல்கந்து செய்தும் உண்ணலாம். மேலே சொல்லப்பட்ட தாமரைப்பூ குல்கந்து முறைப்படி இந்த குல்கந்துவையும் செய்து கொள்க.

### சந்தன சர்பத்து

சந்தனத்தின் குணம் : இருதய கமலத்துக்கும் இரைப்பைக்கும் வலிவு கொடுக்கும், சூட்டைப்பற்றிய ரோகங்களைக் கண்டிக்கும், பித்தத்தினாலுண்டான அனலைத் தணிக்கும், சூட்டினால் உண்டாகும் தலை வலியை நீக்கும், சந்தோஷம் உண்டாக்கும்.

தீமை : குரல் கம்மும்; தாது நஷ்டம் உண்டாக்கும்.

இதற்கு மாற்று : தேன் அல்லது கற்கண்டைச் சேர்த்துக் கொள்ளலாம்.

சந்தன சர்பத் செய்யும் விதம்: மணமுள்ள நல்ல சந்தனக் கட்டையை இழைப்புளியினால் இழைத்து மெல்லிய சீவலாகச் சீவிக் கொள்க. அல்லது மெல்லிய சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்க. இந்தச் சீவல்களை நாலுபடி தண்ணீரில் இட்டு இராப் பகலாக ஒரு நாள் ஊற வைத்து அடுப்பில் ஏற்றி நாலில் ஒன்றாகச் சுண்டும்படி காய்ச்ச வேண்டும். பிறகு சுத்தமாக வடிகட்டிக் கஷாயத்தை எடுத்துக் கொண்டு, அந்தக் கஷாயத்தின் சம அளவு, வெள்ளைச் சர்க்கரை சேர்த்துக் காய்ச்சிப் பதமாகக் காய்ந்த பிறகு எடுத்து வைத்துக்கொள்க. சர்க்கரைக்குப் பதில் கற்கண்டு சேர்த்துக் காய்ச்சலாம். மட்பாண்டத்தில் காய்ச்ச வேண்டும். வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு தோலா எடை நீரில் கலந்து சாப்பிடவும்.

இதன் பயன் : இருதயத்துக்கும் ஈரலுக்கும் வலிவைக் கொடுக்கும். ஈளை இருமலுக்கு அதிக உபயோகப்படும். மலச்சிக்கலுண்டாகும். ஆகையினால் இதற்கு மாற்றாகக் கற்கண்டு சேர்த்துக் கொள்ளவும்.

### காடி சர்பத்து

நல்ல சீமைக் காடி, கற்கண்டு இரண்டையும் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். (காடி ஒரு பங்கு, கற்கண்டு கால் பங்கு). கற்கண்டைப் பாகு காய்ச்சிப் பதமாக வரும்போது காடியைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுத் துழாவி, கடைசியில் கொஞ்சம் பன்னீர் விட்டுத் துழாவிப் பதமாகக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொள்க. வேளைக்கு ஒரு தோலா சர்பத்தை நீரில் கலந்து சாப்பிடலாம்.

இந்தச் சர்பத்து பித்தத்தை நீக்கும், தாகத்தை அடக்கும், பசி தீபனத்தை உண்டாக்கும், நீரைப் பெருக்கும், இரத்தக் கட்டுகளை உடைக்கும், சூட்டினால் உண்டாகும் சுரங்களைத் தீர்க்கும், உஷ்ண தேகத்துக்குப் பொருந்தும். இரத்த வாந்தி முதலிய இரத்தப் போக்குகளை நிறுத்தும்.

### காரட் (மஞ்சள் முள்ளங்கி) சர்பத்து

மஞ்சள் முள்ளங்கி எல்லாருக்கும் தெரியும். இதைச் சமையல் செய்து சாப்பிடுகிறோம். இதில் ஏ-வைட்டமின் என்னும் உயிர்ச்சத்து இருக்கிறபடியால் கண் பார்வைக்கு மிகவும் நல்லது.

சர்பத் செய்யும் விதம் : மஞ்சள் முள்ளங்கிக் கிழங்கைத் துண்டுகளாக நறுக்குவதற்கு முன்பு கிழங்கின் நடுவில் இருக்கிற வெண்மையான நரம்புகளை எடுத்துப் போட்டு நறுக்கவும். நறுக்கின துண்டுகளை உரலில் இட்டு இடித்துச் சாறு பிழிந்து கொள்க. கிழங்கிலிருந்து சாறு கிடைக்காது. நன்றாக இடித்துக் கொஞ்சமாக நீர் தெளித்துப் பிழிந்து சாறு எடுக்க வேண்டும். இப்படிப் பிழிந்தெடுத்த சாறு ஒரு பங்கு அதற்கு இரண்டு பங்கு தேன், இரண்டையும் சேர்த்துக் காய்ச்சிப் பதமாகக் காய்ச்சின பிறகு புட்டியில் ஊற்றி வைத்துக்கொள்க.

வேளைக்கு ஒரு தோலா சர்பத்தை நீரில் கலக்கி அருந்தலாம். இது இடுப்பு நோயை மாற்றி இடுப்பிற்கு வலிவைத் கொடுக்கும். தாது புஷ்டியை உண்டாக்கும். (தேன் கலந்து காய்ச்சினால்தான் இந்தக் குணம்). காரட்டுச் சாற்றுடன் வெள்ளைச் சர்க்கரைக் கலந்தும் சர்பத்துக் காய்ச்சலாம்.

பண்டைத் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் போற்றி வளர்த்தனர். ஆலயங்களில் இசைக் கலையையும், நாடகக் கலையையும் போற்றி வளர்த்தனர் என்பதைப் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அவ்வாறு இசைக் கலையைப் பற்றியும் அதன் நுணுக்கங்களைப் பற்றியும் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த குடுமியாமலை இசைக் கல்வெட்டு, திருமயம் கல்வெட்டுக்கள் நமக்குக் கூறுகின்றன.

குடுமியான்மலை தற்பொழுது சிகாநாதர் கோவில் என்று அழைக்கப்படுகிறது. இக் கோயிலின் மண்டபங்களில் அழகிய சிற்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. கோயிலின் பின்புறமுள்ள மலையின் சுவரில் இசைக் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. கல்வெட்டின் இரு புறங்களிலும் வலம்புரி, இடம்புரி விநாயகப் பெருமானின் திருவுருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன.

'சித்தம் நமசிவாய' என்று கல்வெட்டு வாசகம் துவங்குகிறது. பல்லவ கிரந்த எழுத்தினால் எழுதப்பட்டுள்ளது. இக் கல்வெட்டு ஏழு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாகமும் பல உட்பிரிவுகளுடன் காணப்படுகிறது. ஒவ்வொரு உட்பிரிவிலும் நான்கு சுவரங்களைக் கொண்ட 16 வரிசைகள் இருக்கின்றன. இசைச் செய்திகளைக் கூறிய பின்னர் இறுதி வரியில் ருத்ராசார்யருடைய சீடனான ஓர் அரசனால் இச்சாசனம் இயற்றப்பட்டது எனக் கூறுகிறது.

''எட்டிற்கும் ஏழிற்கும் இவை உரிய'' என்று பல்லவ தமிழ் எழுத்தினால் இக் கல்வெட்டின் இறுதியில் எழுதப் பட்டுள்ளது. இக் கல்வெட்டை இயற்றியவன் 'சங்கீர்ணசாதி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்ற பல்லவ மன்னனான மகேந்திர வர்மன் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

இக் கல்வெட்டு, வீணையில் இசைக்கக்கூடிய இசையைப் பற்றிக் கூறுகிறது என்று விபுலாநந்த அடிகள் கூறுகின்றார். வலம்புரி விநாயகர் உருவத்தின் மேலே 'பரிவாதிநி' என்ற எழுத்துக்கள் உள்ளன. அது ஏழு நரம்புகளை உடைய வீணையின் பெயராகும்.

திருமயம் கோயில் அருகில் மற்றொரு இசைக் கல்வெட்டு உள்ளது. ஆனால் அதன் மேல் பிற்கால பாண்டியர் கல்வெட்டு எழுதப்பட்டு விட்டதால், அதனுடைய சொற்றொடர்கள் புரியவில்லை. ஆனாலும் அழிக்கப்படாத எழுத்துக்கள் மூலம் அது இசைக் கல்வெட்டு என அறிஞர்கள் கருதுகின்றனர். கல்வெட்டின் வாசகம் வருமாறு :


''பரிவாதினிதா
கற்கப்படுவது காண்
ஞ் சொல்லிய புகிற் பருக்கும் நிமி
முக்கந் நிருவத்துக்கும் உரித்து
குணசேனப் பிரமாணஞ்
செய்தவித்யா பரிவாதின கற்''

இக் கல்வெட்டையும் அமைத்தவன் பல்லவ மன்னனை மகேந்திர வர்மன் என்றே கருதுகின்றனர்.

## கல்லும் கதை சொல்லும்

புதுக்கோட்டை மாவட்டத்தின் பல இடங்களில் வட்ட வடிவமாக அமைக்கப்பட்ட கற்களும், முதுமக்கட் தாழிகளும் கிடைத்துள்ளன. அவை நம் முன்னோர்களின் வாழ்க்கை முறையைப் பற்றிக் கூறும் சான்றுகள். அவைகள் புதைபொருள் ஆராய்ச்சி வல்லுநர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டன.


வட்டக் கற்கள் அமைந்துள்ளதை ஆங்கிலத்தில் 'Meqalic Burial' என்று கூறுவர். அவை போன்று, சானூர், குன்றத்தூர் (செங்கற்பட்டு மாவட்டம்) என்ற ஊர்களில் அமைந்துள்ளன. அவற்றின் அமைப்பை இனிக் காண்போம். இறந்தவரின் உடலை ஒரு குழியில் வைத்துக் குழியின் நான்கு புறங்களிலும் கற்பலகைகளை வைப்பர். இறந்தவர் உடலுடன் அவர் உபயோகித்த மட்பாண்டங்கள் — கருவிகள் ஆகியவற்றை வைத்து, அதன் மேல் பெரிதாக ஒரு கல்லை வைத்து மூடி விடுவார்கள். பிறகு அதைச் சுற்றி வட்ட வடிவமாகக் கற்களை வைத்து விடுவார்கள். இவ்வழக்கம் கி. மு. 500 ஆண்டிலே இருந்திருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.





# கல் சொல்லும் கதைகள்

ஸ்ரீதரன்

அக்காலத்தில் ஒருவர் இறந்தவுடன் அவரை ஒரு பெரிய பானையில் உட்காரும் நிலையில் வைத்து, அவர் உபயோகித்த மட்பாண்டங்களுடன் பூமியில் புதைத்து விடுவர். அவைகள் 'முதுமக்கட் தாழிகள்' என அழைக்கப்படுகின்றன.



மேற்கூறிய இரு வகையான 'தொல்லியல் சான்றுகள்' புதுக்கோட்டை மாவட்டத்தில் காணப்படுகின்றன. அவை இருக்குமிடங்கள் :

(1) திருக்கட்டளை
(2) திருக்கோகர்ணம்
(3) புத்தம்பூர்
(4) செம்பாட்டூர்
(5) பெருங்களூர்
(6) ஓதன்கோட்டை
(7) வலயன்பட்டி
(8) ஒடுகன்பட்டி
(9) நாரங்கியன்பட்டி
(10) அம்புராப்பட்டி
(11) முட்டம்பட்டி
(12) விருதுப்பட்டி
(13) பூதகுடி
(14) சித்தன்னவாசல்
(15) காட்டுக்கோட்டைப்பட்டி
(16) கீழையூர்
(17) திருப்பூர்
(18) கள்ளனூர்
(19) வெள்ளனூர்
(20) அம்மாசத்திரம்
(21) சத்தியமங்கலம்
(22) மதியநல்லூர்
(23) அன்னவாசல்
(24) அரியூர்
(25) மாரயப்பட்டி
(26) நிலையப்பட்டி
(27) சுந்தரப்பட்டி
(28) பரம்பூர்
(29) தச்சனப்பட்டி
(30) முதுடையூர்
(31) ஆரணிப்பட்டி
(32) கிள்ளுக்கோட்டை
(33) கொடும்பாளூர்
(34) மலையாடிப்பட்டி
(35) ராசகிரி
(36) தென்மலை.

## குடைவரைக் கோயில்கள்

தமிழகத்தில் குடைவரைக் கோயில்கள் (Rock cut cave temples) முதன் முதலில் பல்லவ அரசனான மகேந்திர வர்மன் காலத்தில் துவக்கப்பட்டது. அதைப் பின்பற்றிப் பல இடங்களில் குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட குடைவரைக் கோயில்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் காணப்படுகின்றன :

1. நார்த்தாமலை
2. குன்றாண்டார் கோயில்
3. சித்தன்னவாசல்
4. மலையாடிப்பட்டி
5. திருமயம்
6. பூவாலைக்குடி
7. மலையக் கோயில்
8. தேவர் மலை
9. மாங்குடி
10. குடுமியான்மலை

## சமணர்கள் வாழ்ந்த இடங்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் சமணர்கள் வாழ்ந்திருந்தனர் என்பது அங்குக் கிடைத்த சமணர்களின் சிலைகள், கோயில்கள் மூலம் தெரிய வருகின்றது. சமணர்களின் உருவங்கள் கிடைத்த இடங்கள் :

1. செம்பத்தூர்
2. புத்தம்பூர்
3. திருக்கோகர்ணம்
4. வலவம்பட்டி
5. அன்னவாசல்
6. சித்தன்னவாசல்
7. விரக்குடி
8. அம்மாசத்திரம்
9. திருப்பூர்
10. தெக்காட்டூர்
11. கன்னங்குடி
12. விரலூர்
13. திருவெண்ணாயில்.

## மாவலிவாணன் வெற்றிச்சிறப்பு

மாவலிவாணன் என்பவனின் வெற்றிச் சிறப்பைப் பற்றிக் குடுமியான்மலைக் கோயில் கல்வெட்டுப் பாடல் ஒன்று கூறுகின்றது :


சென்னி புலிக்கொடியும்
தென்னன் கயல்கொடியும்
மின்னும் கழல்பிறையோன்
விற்கொடியும்—மன்னும்
வருசைக் கொடைத்திருமால்
மாவலிவாணன் தன்
கருடன் கொடிகொடியாம்
காண்


* * *

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருக்கட்டளை என்ற ஊரைச் சேர்ந்த வரகுணபதி அரையன் என்பவன், தான் பிச்சையெடுத்து (உஞ்ஞட்டு) சேர்த்த 15 கழஞ்சுப் பொன்னைத் திருக்கோகர்ணம் கோயிலில் விளக்கு எரிப்பதற்காகத் தானமாக அளித்தான் எனப் பாண்டிய அரசனான மாறஞ்சடையன் என்பவனின் திருக்கோகர்ணக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.










கலை, இலக்கியம், வரலாறு, காவியப் பெருமை அனைத்தும் ஒருங்கே பெற்று விளங்கும் புதுக்கோட்டைப் பகுதி ஒரு தனி மாவட்டமாக மலர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கடந்த 25 ஆண்டுகளாகக் கோரி வந்தனர். அவர்களின் கால் நூற்றாண்டுக் கனவினை நிறைவேற்றும் வகையில் முதல்வர் கலைஞர் அவர்கள் 20--1--1974ல் புதிய மாவட்டத்தைத் தொடக்கி வைத்தார்கள்.

20—1—1974 ஞாயிற்றுக்கிழமை காலை, நகர் முழுதும் விழாக்கோலம் பூண்டிருந்தது. வண்ணக் கொடிகள், தோரணங்கள், வரவேற்பு வளைவுகள் ஆகியவற்றால் புதுக்கோட்டை நகரம் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்ந்தது.

புதுக்கோட்டை மாவட்ட அமைப்பு விழா புதுக்கோட்டை அரசினர் கலைக் கல்லூரித் (ஏற்கெனவே மா மன்னர் கல்லூரி என்று வழங்கப்பெற்றது) திடலில் அலங்கரிக்கப்பெற்ற அழகுப் பந்தலில், வருவாய்த் துறை அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உணவு அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள், தஞ்சை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டுப் புதுக்கோட்டை மாவட்டத்தோடு இணைக்கப்பெறும் பகுதிகளை ஒப்படைத்து உரையாற்றினார்கள். அதைத் தொடர்ந்து உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் திருச்சி மாவட்டத்திலிருந்து பிரிந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் இணையும் பகுதிகளை இணைத்து உரையாற்றினார்கள். கல்வி, சுற்றுலாத் துறை அமைச்சர் நாவலர் அவர்கள் புதிய மாவட்ட அமைப்பையொட்டிச் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார்கள். முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், நாவலர் அவர்களுக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் புதுக்கோட்டைச் சமஸ்தான முன்னாள் மன்னர் மாலை அணிவித்தார். தொடர்ந்து, பல்வேறு அமைப்புகளின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப் பெற்றன.

முதல்வர் கலைஞர் அவர்கள், ஒரு பொத்தானை அழுத்தியதும், தமிழகத்தில் 15-ஆவது மாவட்டமாக மலர்கின்ற புதுக்கோட்டை மாவட்டத்தின் வரைபடம் மின் விளக்குகளுடன் பொலிவுற விளங்கியது. பின்னர், முதல்வர் கலைஞர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு சிறப்புக்களையும் விளக்கித் தமது பாராட்டினையும் மகிழ்ச்சியையும் தெரிவித்து வாழ்த்தினார்கள்.

# புதிய மாவட்டம் மலர்ந்தது!



புதுக்கோட்டை மாவட்டச் சிறப்பு மலரைக் கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள், வெளியிட்டு, முதல் மலரை முதல்வர் கலைஞர் அவர்களிடம் வழங்குகிறார்.

## முதல்வர் கலைஞர்

"எழுச்சியோடும் இதயம் நிறைந்த மகிழ்ச்சியோடும் புதுக்கோட்டை-இன்று புதிய மாவட்டமாக மலர்கிறது. இந்த அரிய நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கில் நீங்கள் கூடியிருந்து புதிய மாவட்டத்திற்கு உங்கள் நல்வாழ்த்துக்களை வழங்கிக்கொண்டிருக்கிறீர்கள்.

வரலாற்றுச் சிறப்பும், இலக்கியச் சிறப்பும், கலைச் சிறப்பும் காவியச் சிறப்பும் கொண்ட வீரர்கள் கோட்டமாக விளங்கும் இந்த மாவட்டம் எப்படிப்பட்ட சீரும் சிறப்பும் செழிப்பும் வனப்பும் மிகுந்தது என்பதை வருவாய்த்துறை அமைச்சர் சாதிக்பாட்சா அவர்களும் நமது நடமாடும் பல்கலைக் கழகமாம் கல்வி அமைச்சர் நாவலர் அவர்களும் உங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

உணவு அமைச்சர் மன்னை அவர்கள் தஞ்சை மாவட்டப் பகுதிகளை உள்ளாட்சித்துறை அமைச்சர் அன்பில் அவர்களிடம் ஒப்படைத்தார்.

திருச்சி மாவட்டப் பகுதிகளை அமைச்சர் அன்பில் இங்கு ஒப்படைத்தார். இப்படி ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் பகுதிகளை ஒப்படைத்துக் கொண்டதற்குக் காரணமே பின்னால் ஏதும் பேசக்கூடாது என்பதற்காகத்தான்.


அமைச்சர் அன்பில் இங்குப் பேசும் போது தஞ்சைப் பெண்ணை திருச்சி மாப்பிள்ளை ஏற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டார். ஆனால் இந்தத் திருமணம் நடைபெற நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?

தஞ்சைப் பெண்ணுக்கும் திருச்சி மாப்பிள்ளைக்கும் ஏற்கெனவே காதல் என்பதை அறிந்து அதன் பெற்றோர்களிடம் (மக்களிடம்) சொல்லி—அவர்களது ஒப்புதலைப்பெற்று இன்றைய தினம் அந்தக் காதலர்களின் திருமணம் எனது தலைமையில், நமது கல்வி அமைச்சர் நாவலர் முன்னிலையில், அமைச்சர் சாதிக் பாட்சா சாட்சியாக உங்கள் முன்னிலையில் இங்கு நடைபெறுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் அறம் தாங்கி இன்றைக்கு மலர்கிறது! ஆமாம்! அறந்தாங்கியோடு சேர்ந்து புதுக்கோட்டை தனி மாவட்டமாகப் புதிதாக மலர்கிறது.

அறந்தாங்கி மக்களுக்குப் புதுக்கோட்டை மீது நீண்டகாலமாக மோகம் இருந்திருக்கிறது. 1948-ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாம் தேதி அன்று வல்லபபாய் பட்டேலும் ராஜகோபால தொண்டைமானும் செய்து கொண்ட ஒப்பந்தத்தால் புதுக்கோட்டை சமஸ்தானம் மக்களாட்சியாக மாற்றப்பட்டு, சென்னை ராஜதானியோடு இணைந்தது; அது முதல் கடந்த 25 ஆண்டுக் காலமாகப் புதுக்கோட்டை, திருச்சி மாவட்டத்தோடு சேர்ந்திருந்தது. 25 ஆண்டுக் கால வெள்ளி விழாவிற்குப்பிறகு இன்றைக்குத் தனி மாவட்டமாக மலர்ந்திருக்கிறது.

இந்த மாவட்டம் சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க எழில் நிறைந்த ஓவியங்கள், கலை



**தஞ்சை மாவட்டத்திலிருந்து பிரித்துப் புதுக்கோட்டை மாவட்டத்தோடு இணைக்கப்பெறும் பகுதிகளை உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள், முதல்வர் கலைஞர் அவர்களிடம் ஒப்படைத்தார்.**

நுணுக்கச் சிற்பங்கள், சிற்ப வேலைப்பாடுகள் மிக்க குகைக் கோவில்கள் நிறைந்த இடங்களைக் கொண்டது.

புதிதாக மலரும் இந்த மாவட்டத்தில்தான் விடுதலைப் போராட்டக்கால வீரர்களில் சிறந்த தீரர் சத்திய மூர்த்தி பிறந்தார் என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத் தந்த அரசியல் நாகரிக அடிப்படையில் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

இந்த மாவட்டம் தனியாட்சியாக ராசகோபால் தொண்டைமானால் நடத்தப்பட்டு வந்த போது இந்தப் பகுதி மக்கட் சமுதாயம் சீர்திருத்தப்பட வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக அவர் அந்தக் காலத்திலேயே — 1930-ஆம் ஆண்டிலேயே ஒரு சீர்திருத்தத்தைச் செய்தார்.

என்ன அந்தச் சீர்திருத்தம்?

தனது அதிகார எல்லைக்குட்பட்ட கோவில்களில், ஆலயங்களில்-தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசனங்கள் செல்லலாம் என ஒரு விதி வகுத்தார்; செயல்படுத்த முற்பட்டார் என்பது இன்றைக்கும் நாம் பெருமைப் படத்தக்க ஒன்றாகும்.

காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த வணிகப்பெரு மக்கள் கரிகாற் பெருவளத்தான் காலத்தில் அனைத்துலகிற்கும் கலம் செலுத்திச்சென்று வாணிபம் புரிந்து வந்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் காவிரிப்பூம் பட்டினத்தில் தங்கியிருக்க மனமில்லாமல் இங்கே இருக்கிற வெள்ளாற்றுப் பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தப் பகுதி காணாடுகாத்தான் என்று இன்றைக்கு வழங்கப்பட்டு வருகிறது. இங்கே உள்ள வணிகப் பெருமக்கள் பலரும் இந்தப் பகுதியையும் புதுக்கோட்டையுடன் இணைத்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்களது இந்தக் கோரிக்கையை அறவே புறக்கணித்து விடுவதற்கில்லை என்றாலும் அவர்களது இந்த யோசனையை ஏற்றுக் கொண்டால் அதன் விளைவு எப்படியிருக்கும் என்பதையும் பரிசீலித்துப் பார்க்கலாம்! அந்த முடிவு காரைக்குடி, தேவகோட்டை ஆகிய இரண்டும் புதுக்கோட்டையில் சேர்வதற்கும் ஒரு வாய்ப்பாக அமையக்கூடும்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பிற்பட்ட பகுதிகளைப் புதுக்கோட்டையில் சேர்ப்பதற்குக் காரணம் அந்தப் பகுதிகள் எல்லாம், வளம் கொழிக்கின்ற பகுதிகளாக மாற வேண்டும் என்பதுதான்.

நிர்வாக வசதிக்காக மாவட்டத்தின் அளவைக் குறைத்திட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம். நானும் அமைச்சர் சாதிக்பாட்சாவும் பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்றபோது நாங்கள் பார்த்தோம்! அங்கே இருக்கின்ற ஒவ்வொரு மாவட்டமும் தமிழ்நாட்டில் இருக்கின்ற தாலுகா அளவில்தான் இருக்கின்றன. நிர்வாக வசதிக்காக அவர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள்.

இப்படி நிர்வாக வசதிக்காக மாவட்ட அளவு குறைக்கப்படுவதால் அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவியாமல் அதைப் பகிர்ந்து கொடுத்து மக்கள் வளமாக வாழத்தக்க ஒரு சூழ்நிலையை உருவாக்கிட முடிகிறது. அத்தகைய ஒரு சூழ்நிலையை உருவாக்கிட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும்.


மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்களே!

சட்ட மன்றத்தின் இக் கூட்டவைக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமை அடைகிறேன்.

பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் நம் அனைவரையும் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டு இயற்கை எய்தியதை ஆழ்ந்த வருத்தத்தோடு முதற்கண் குறிப்பிட விழைகிறேன். ஒரு மாபெரும் விடுதலை வீரரை இழந்துவிட்டோம்; அஞ்சாமையை அணிகலனாகக் கொண்ட சமூக சீர்திருத்தக்காரர் அவர்; நாட்டில் நிலவிய ஏற்றத் தாழ்வையும் தாழ்ந்த மக்கள் எனக் கருதப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையான அடக்குமுறையையும் முழு மூச்சுடன் எதிர்த்துப் போராடி வந்த தீரர் அவர். பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும் தாழ்வுற்று அடிமைப்பட்ட ஏழை மக்களின் நிலையை உயர்த்துவதற்கும் தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த செம்மல் அவர். மனிதனுக்கு மனிதன் இழைத்து வந்த ஈவிரக்கமற்ற கொடுமையை இன்று சமூகத்தில் அனைவரும் உணர்ந்துள்ளார்கள் என்றால், கண்மூடித்தனமான பத்தாம்பசலிப் பழக்க வழக்கங்களும், சடங்குகளும், சம்பிரதாயங்களும், மூடநம்பிக்கைகளும் மனிதர்களை ஆட்டிப் படைப்பது பெரும்பாலும் நீங்கிவிட்டது என்றால், அரை நூற்றாண்டுக்கும் மேலாகப் பெரியார் அவர்கள் அயராது, மெய் வருத்தம் பாராது மேற்கொண்ட முயற்சிகளே பெரிதும் காரணம் என்பது வெள்ளிடை மலையாகும். அவர் மறைவு நமக்குப் பேரிழப்பாகும்.

பயிர் விளைவுக்குப் பருவ மழையையே பெரிதும் நம்பியுள்ள நமது மாநிலத்தில், கடந்து முடிந்த ஆண்டில், தென் மேற்குப் பருவ மழை இயல்பான அளவுக்குக் குறைவாகவே பெய்தது. குறிப்பாக, நீர் கோள் பகுதிகளில் போதிய அளவு மழைபெய்யவில்லை. இதனால், புனல் மின்சார நீர்த் தேக்கங்களில் வழக்கத்தை விடக் குறைவாகவே நீர் நிரம்பியது. இதன் விளைவாக, 15 சதவீத மின்சார வெட்டு விதிக்கப்பட வேண்டிய இடர்ப்பாடான நிலைமை அரசுக்கு ஏற்பட்டது. வட கிழக்குப் பருவ மழை இயல்பான அளவுக்குப் பெய்தது. எனினும், சிற்சில பகுதிகளில் போதிய அளவு மழை பெய்யவில்லை.

பருவ மழையை நம்பியிருத்தல் என்ற தளையிலிருந்து இம் மாநிலப் பொருளாதாரத்தை விடுவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் இம் மாநில அரசு எடுத்து வருகிறது. பாசன வளத்தைப் பெருக்குதல், புனல் வாயிலல்லாத பிற வாயில்கள் மூலம் மின் சக்தி உற்பத்தியைப் பெருக்குதல், இம் மாநிலத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் மின்னொளி வழங்குதல், தேவையான பகுதிகள் அனைத்திலும் குடிதண்ணீர் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வகை செய்தல் முதலியவை அந்நடவடிக்கைகளாகும். இவை அனைத்தும் நம்மிடமுள்ள நிதி வசதி, மற்ற வசதிகள் இடந்தரும் அளவுக்கு மேற்கொள்ளப்படும். நமது மாநிலத்தில் தனி நபர் சராசரி விளைநிலம் சுமார் அரை ஏக்கர் ஆகும். ஆண்டின் சராசரி மழை அளவு 30 அங்குலம் முதல் 40 அங்குலம் வரை மட்டுமே. பயிரிடப்படும் நில அளவில் 40 சதவீத நிலங்களுக்கு மட்டுமே பாசன வசதி கிடைக்கிறது. எனவே, பெருந் தொகையினராக உள்ள நமது மாநில மக்களுக்கு நியாயமான வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றால், நமது நீர்வளத்தையும் மின் வளத்தையும் நல்ல



# சோதனைகளைச் சமாளிப்போம்!

மேதகு ஆளுநர் கே.கே.ஷா.

முறையில் பெருக்கி அறிவார்ந்தவகையில் பயன்படுத்த வேண்டியது அவசியமும் அவசரமும் ஆகும்.

நமது மாநிலத்திலுள்ள பல்வேறு பாசன அமைப்புகள் பல காலகட்டங்களில் போதிய ஒழுங்குபடுத்தும் அமைப்புகளின்றி உருவாகியுள்ளன. எனவே, பல்வேறு பாசன அமைப்புக்களையும் மாற்றியமைத்துப் புதுப்பிக்கும் பெரும் வேலைத் திட்டம் படிப்படியாக மேற்கொள்ளப்படவிருக்கிறது.

பெரியாறு கால்வாய்களுக்கு மேம்பாடுகள் செய்தால், 23,000 ஏக்கர் புதிய பகுதி பாசனம் பெற்று விளைநிலமாவதுடன், இப்போதுள்ள 8,000 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதியும், தடைபடாப் பாசன வசதியைப் பெறும். புதிய ஏரிகளை அமைப்பதற்கும், உள்ள ஏரிகளைச் சீரமைப்பதற்கும் ஐந்தாவது திட்டத்திலே சிறு பாசனச் சிறப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஆண்டில் நமது அரசு நிறைவேற்ற மேற்கொள்ளவிருக்கும் புதிய வேலைத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பிலுள்ள சிறு பாசன ஏரி, குளங்களைக் குறித்ததாகும். இவற்றின் எண்ணிக்கை 27,000 ஆகும். இவற்றில் பெரும்பாலானவை, முன்னாள் ஜமீன் பகுதியில் அமைந்துள்ளன. பன்னெடுங்காலமாக இவை கவனிக்கப்படாமல் இருந்து விட்டன. இந்த ஏரி குளங்களைச் சீராக்கி, தரப்படுத்தும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும். இதற்கென ஐந்தாவது திட்டத்தில் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஐந்தாவது திட்டக் காலத்தில் 10,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 12,500 குழாய்க் கிணறுகள் இறக்கவும், இப்போதுள்ள சாதாரண கிணறுகளில் 4,000 துளைகள் போடவும், 10,000 கிணறுகளை ஆழப்படுத்தவும் கருதியுள்ளோம். மேற்பரப்பு நீர் வளம் முழுவதையும் அநேகமாக நாம் பயன்படுத்தி விட்டோமாதலால், ஊற்று நீர்வளம் இருக்கும் இடங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியை அறிவியல் முறையில் மேற்கொண்டு அதைப் பயன்படுத்துவதிலேயே நாம் நாட்டம் செலுத்த வேண்டும். இதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நமது தேசியப் பொருளாதார வளர்ச்சியில், வட்டார அடிப்படையில் நீர் வளத்தையும் மின் வளத்தையும் பயன்படுத்துவது பற்றிக் கருதிப் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பயன்படுத்தப்படாமல் உள்ள நீர் வளத்தையும் மின் வளத்தையும் பயனுக்குக் கொண்டு வருவதற்காக, ''மேலமலைத் தொடர்ச்சி மேம்பாட்டுக் கழகம்'' ஒன்றை அமைக்க வேண்டுமென நான் சென்ற ஆண்டு ஆலோசனை கூறினேன். மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவது குறித்துப் பேசுவதற்காக, மகாராஷ்டிரம், கேரளம், கர்னாடகம், தமிழ்நாடு, கோவா ஆகியவற்றைச் சார்ந்த பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றை மத்தியத் திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவர் அண்மையில் கூட்டினார். இந்த முக்கியமான ஆலோசனையை மத்திய அரசு முனைப்புடன் கருதிப் பார்த்து ஆவன செய்யுமென நம்புகிறோம்.

ஐந்தாவது திட்ட்த்தில், மின் சக்திக்கென 326 கோடி ரூபாய் செலவிடும் கருத்துள்ளது. இதில் மின் சக்தி உற்பத்தி செய்வதற்கு 180 கோடி ரூபாய் செலவிடப்படும் ; உற்பத்தி செய்த மின்சாரத்தைப் பல இடங்களுக்கும் கொண்டு செல்லும் அமைப்புகளுக்காக 90 கோடி ரூபாயும், கிராமப் பகுதிகளில் மின்னொளி வழங்க 50 கோடி ரூபாயும் செலவிடப்படும். சிறிய புனல் மின் திட்டங்களையும் அரசு மேற்கொள்ளக் கருதியுள்ளது. கர்டம்பாறைபோன்ற நீரேற்றி மின் சேமிப்பு-உற்பத்தி (Pumped Storage) திட்டங்களை மேற்கொள்ளவும் அரசு கருதியுள்ளது. உயர் அளவு மின்சாரம் பயன்படுத்தப்படும் நேரத்தில் ஏற்படும் மின்சாரத் தேவையை நிறைவு செய்ய இத் திட்டங்கள் பயன்படும்.

மேட்டூர், பெரியாறு போன்ற பெரிய புனல் மின் திட்டங்களில் பாசனத் தேவைக்கு வேண்டிய நீரை வழங்குவதுடன் மின் உற்பத்தி இணைந்திருப்பது அவற்றுக்குள்ள குறையாகும். எனவே, தொடர்ந்த மின் உற்பத்தி நிலையங்களாக அவை செயல்பட முடியாமல் உள்ளன. நிறுவப்பட்ட புனல் மின் உற்பத்தித் திறன் 1,224 மெகாவாட்டாக இருந்த போதிலும், நம்பகமான உற்பத்தி அளவு 775 மெகாவாட்டாக மட்டுமே இருக்கிறது. எனவே, நமது புனல் மின் உற்பத்தித் திட்டத்துக்கு உறுதுணையாக அனல் மின் உற்பத்திச்சாலைகள் விளங்க . வேண்டுமென்பது தெளிவு. தூத்துக்குடியில் ஒன்றும், மேட்டூரில் மற்றொன்றும் ஆக அனல் மின் நிலையங்கள் இரண்டினை நிறுவும் பணியை ஐந்தாவது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென நாம் கூறியுள்ளோம்.

தூத்துக்குடி அனல் மின் திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது என்பதை அறிய நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் என நம்புகிறேன். இத் திட்டத்தினால் 400 மெகாவாட் அளவுக்குக் கூடுதல் மின் சக்தி ஐந்தாவது திட்டம் முடிவடைவதற்கு முன் கிடைக்கக்கூடும். பணி மேற்கொள்ளப் பட்ட திட்டங்கள், புதிய திட்டங்கள் ஆகிய திட்டங்களின் மூலம், திட்ட காலத்தில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின் சக்தி முழுவதையும் கணக்கில் எடுத்துக் கொண்டாலும் கூட, ஐந்தாவது திட்டக் காலத்தின் இறுதியில் 1,185 மெகாவாட் மின் சக்தி பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும்.

இந்த நேரத்தில், தற்போது நிலவி வரும் எண்ணெய் நெருக்கடியையும் மின் சக்தி உற்பத்திக்காக ஏனைய எரி பொருள் வளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் நாம் நாட்டத்தில் கொள்ள வேண்டும். நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்களை விரிவாக்கி மேலும் அதிக அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கான அவசியத்தை இது நன்கு எடுத்துக் காட்டியுள்ளது. நெய்வேலியைப் போன்ற திறந்த வெட்டு முறைச் சுரங்கம் ஒன்றை முழு அளவில் செயலுக்குக் கொண்டு வர ஏழு முதல் பத்து ஆண்டுக் காலம் பிடிக்கும். இன்றே நாம் இப் பணியைத் தொடங்கினால் கூட, ஆறாவது திட்டக் காலத்தில்தான் மின் சக்தியை நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து உற்பத்தி செய்ய முடியும். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியைத் தொடங்குவதற்கும் 1,000 மெகாவாட் திறனுடன் கூடிய இரண்டாவது அனல் மின் நிலையத்தை நிறுவுவதற்கான தேவை குறித்தும் நாம் வலியுறுத்தி வரு

கிறோம். இம் மாநிலத்தின் நலனுக்காக இத் திட்டத்திற்கு உடனடியாக ஒப்பளிப்பு வழங்க வேண்டியது அத்தியாவசியமானது என்று தமிழ்நாடு அரசு கருதுகிறது. இது குறித்துச் சாதகமான முடிவை விரைந்து எடுக்குமாறு மத்திய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்பாக்கம் அணுமின் நிலையம் செயல்படத் தொடங்குவதிலும் அதிகத் தாமதம் ஏற்பட்டுள்ளது. 1970-71-ல் செயல்படத் தொடங்குமென ஏற்கெனவே திட்டமிடப்பட்ட இந்த மின் நிலையம், 1977-78-ல் தான் செயல்படத் தொடங்கும் என்று இப்போது எதிர் பார்க்கப்படுகிறது. அணு மின் நிலைய விரிவாக்கப் பணித் திட்டம் இப்போதே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இதில் தாமதம் செய்வது, வருகிற ஆண்டுகளில் இம் மாநிலத்தில், மின்சார நிலைமையை மிகவும் பாதிக்கும்.

நகர்ப் பகுதிகள், கிராமப் பகுதிகள் ஆகியவற்றிற்குக் குடிநீர் வழங்குதலைச் செயற்படுத்துவதற்கான பெருந் திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். இம் மாநிலத்தில், மொத்தமுள்ள இரு மாநகராட்சிகள், 99 நகராட்சிகள், 13 நகரியங்கள், 626 பேரூராட்சிகள் ஆகியவற்றில், இரண்டு மாநகராட்சிகள், 87 நகராட்சிகள், எட்டு நகரியங்கள், 71 பேரூராட்சிகள் ஆகியவற்றில் குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மூன்று நகராட்சிகள், 37 பேரூராட்சிகள் ஆகியவற்றில் நீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கிராமப் பகுதிகளில் நாம் ஏற்கெனவே, கிட்டத்தட்ட 72,600 கிணறுகளைத் தோண்டியுள்ளதோடு 5,700 மேல்நிலை நீர்த் தொட்டிகளையும், நிலமட்ட நீர்த் தொட்டிகளையும் அமைத்துள்ளோம். நீரில் நோய்க் கிருமிகள் இருப்பது போன்ற சிக்கல் உள்ள பகுதிகளில் தக்க நீர் வழங்கும் திட்டங்களைச் செயற்படுத்த ஐந்தாவது திட்டத்தில் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில், வீராணம் திட்டம் குறித்த பணி நடைபெற்று வருகிறது. அதன் மூலம் நாளொன்றுக்கு 4 கோடி காலன் நீர் கிடைக்கும். 1975-ல் இத் திட்டம் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு, கேரள மாநிலங்களுக்கிடையில் நீண்ட நெடு நாட்களாகப் பேசப்பட்டு வந்த சிறுவாணி நீரைக் கோவை நகருக்கு வழங்க வகை செய்யும் சீரியதோர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அண்டை மாநிலங்களுக்கிடையில் கருத்து இசைவின் விளைவாக உருவான இந்த ஒப்பந்தம், மாநிலங்களுக்கிடையிலான ஒத்துழைப்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. சுமார் பத்துக் கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ள இந்தச் சிறுவாணித் திட்டம், இறுதியாக, நாள் ஒன்றுக்கு 235 இலட்சம் காலன் நீரைக் கோயம்புத்தூருக்கும் வழியிலுள்ள நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றிற்கும் வழங்கும்.

வேளாண்மை, தொழில் உற்பத்திக்கு இன்றியமையாத அடிப்படைப் பொருட்களான நீர் வசதி, மின் வசதி ஆகியவற்றைப் பெருக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் அனைத்தையும் நாம் மேற்கொண்டு வந்துள்ள போதிலும், உற்பத்திப் பெருக்கத்திற்கு வேறு சில இடர்ப்பாடுகளும் இருந்து வருகின்றன. தேவையான இடு பொருட்கள் அனைத்தையும் ஒரே சமயத்தில் கிடைக்கச் செய்வதற்கு நமது அரசு மேற்கொண்ட ஒருங்கிணைந்த அணுகு முறையின் பயனாகப் பசுமைப் புரட்சி இம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ளது. நமது தேவையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது மாநிலம் தற்போது உணவு தானியங்களைப் பொறுத்த வரை ஓரளவு உபரி மாநிலமாக உள்ளது. 1973-74-ல், நமது உணவு தானிய உற்பத்தி தோராயமாக 74 இலட்சம் டன்களாக இருக்கும் என்று முன்னர் மதிப்பிடப்பட்டது. உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவற்றைப் போதுமான அளவுக்குப்பெற்று வழங்குவதில் எதிர்பார்க்கப்படும் இடர்ப்பாடுகள் காரணமாக இந்த மதிப்பீடு நிறைவேறாமல் போகக் கூடிய அபாயம் உள்ளது. 1973-74-ல் தேவைப்பட்ட 3.15 இலட்சம் டன் நைட்ரஜன் உரத்துக்குப் பதிலாக மொத்தம் 2.3 இலட்சம் டன் நைட்ரஜன் உரமே வழங்கப்பட்டுள்ளது. டி.டி.டி. பி.எச்.சி. பூச்சி கொல்லி மருந்துகளின் பற்றுக் குறையும் உள்ளது. உள் நாட்டில் உற்பத்தி செய்யும் உரங்களை அதிக அளவுக்கு உற்பத்தி செய்யவும் முக்கியமாகத் தேவைப்படும் இந்தப் பொருளை வேண்டிய அளவு கூடுதலாக இறக்குமதி செய்வதற்கும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு மத்திய அரசை நாம் கேட்டுள்ளோம்.

தமிழ்நாடு, தனது பொருளாதார மேம்பாட்டிற்கு விரைவான தொழில் வளர்ச்சியையே மேன்மேலும் சார்ந்திருக்க வேண்டும் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இதனைக் கருத்திற் கொண்டு தொழில் முதலீட்டைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நம்மால் இயன்றதை நாம் செய்துள்ளோம். தமிழ்நாடு சிமிட்டி ஆலையின் ஆண்டு உற்பத்தித் திறனை, 14 கோடி ரூபாய் செலவில், 4 இலட்சம் டன்னிலிருந்து 7 இலட்சம் டன்னாகப் பெருக்குவதற்கும், அரக்கோணத்திலுள்ள தொடர் வார்ப்படத் தொழிற்சாலையின் உற்பத்தியை 5.6 கோடி ரூபாய் செலவில் பல்திறப்படுத்தவும் நாம் கருதியுள்ளோம்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பொறுப்பேற்கும் கூட்டுத் துறைத் திட்டங்களைப் பொறுத்தமட்டில், தூத்துக்குடிக்கு அருகில் நாளொன்றுக்கு 1,100 டன் அமோனியா, 1,600 டன் யூரியா உற்பத்தித் திறன் கொண்ட மாபெரும் உர ஆலை அமைக்கும் திட்டப் பணி விரைவாக நடைபெற்று வருகிறது; 1974 ஜூன் திங்களில் உர உற்பத்தி முழு மூச்சில் தொடங்கக்கூடும். டயர், டெலிவிஷன், சோடியம் ஹைட்ரோ ஸல்ஃபைட்டு, போராக்ஸ், சோடா ஆஷ், உப்பு, மருந்துப் பொருட்கள் ஆகிய திட்டங்கள் குறித்த தொடக்கப் பணியும் நடைபெற்று வருகிறது. இத்துடன், தமிழ்நாட்டில் கூட்டுத் துறையில் பெரிய உரத் தொழிற்சாலை இன்னொன்றை நிறுவ அனுமதிக்குமாறு மத்திய அரசை வேண்டியுள்ளோம். பங்குகளை வாங்கிக்கொள்ளுவதற்கு உறுதி தருதல் (Under writing) காலக் கடன், வட்டியில்லா விற்பனை வரிக் கடன் ஆகியவற்றைக் கொடுத்தல், சீர் செய்த மனைகளை வழங்குதல் போன்ற ஊக்க உதவிகள் பலவற்றை

அளிப்பதன் மூலம், குறிப்பாக மாநிலத்திலுள்ள பின் தங்கிய பகுதிகளில் நடுத்தரத்தொழில்களைத் தொடங்கும் தொழில் முனைவர்களுக்கு, மாநிலத் தொழில் ஊக்கக் கழகம் உதவி செய்து வருகிறது. இக் கழகம் ராணிப்பேட்டையில் தொழில் தொகுதி ஒன்றையும் உருவாக்கி வருகிறது. இக் கழகத்தின் மேம்பாட்டு நடவடிக்கைகளால் இது வரையில் 37 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் 6,000 பேருக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எட்டு சர்க்கரை ஆலைகளைப் புதிதாக நிறுவவும் அரசு கருதியுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறித் துறை வளர்ச்சிக்காக ஏறத்தாழ 18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யக் கருதப்பட்டுள்ளது. கைத்தறித் துணிகள் உற்பத்திக்கெனத் தனியாகச் சில ரகங்களை ஒதுக்கவும், இன்றியமையா மூலப் பொருள்கள் உரிய காலத்தில் கிடைப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யவும் மத்திய அரசு முன் வந்தாலன்றி இவையனைத்தும் பயன் தரா.

கடந்த ஆண்டில் மின்விசை வெட்டு தவிர்க்க முடியாததாயிற்று. பருத்தி விலையும் உயர்ந்தது. இவற்றின் காரணமாகக் கடுமையான நூல் பற்றாக்குறையும் நூல் விலை உயர்வும் ஏற்பட்டன. அவற்றின் விளைவாக நெசவாளர்களுக்குப் பெரிதும் இடர்ப்பாடு ஏற்பட்டது. கூட்டுறவு நூற்பு ஆலைகள் உற்பத்தி செய்த நூலையும், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு நடத்தப்படும் ஆலைகள் உற்பத்தி செய்த நூலையும் தொகுப்பாக்கி, கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்கள் அனைவருக்கும் நியாயமான விலையில் போதிய அளவு நூல் வழங்க முடிந்தது. இருப்பினும் கூட்டுறவுத் துறையைச் சேராத நெசவாளர்களுக்குப் போதுமான அளவு நூல் வழங்கும் பிரச்சினை தொடர்ந்து கவலையளிப்பதாகவுள்ளது. இந்தப் பிரச்சினையையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசுத் துறைக்காக 19,200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் உரியவொரு பங்கு தமிழ் நாட்டில் முதலீடு செய்யப்படுவது நியாயமேயாகும்.

தமிழ்நாட்டுக்குரிய நியாயமான பங்கு கிடைக்கப் பெற்றாலொழிய, இம் மாநிலம் மேற்கொண்டு அடைய வேண்டிய வளர்ச்சி மிகக் கடுமையாகத் தடைபடும். பின்வரும் புதிய திட்டங்களை மத்திய அரசு தன்னுடைய திட்டங்களாக மேற்கொள்ளும் வகையில் ஆய்ந்து பார்க்க வேண்டும்:—

1. நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டுதல்.

2. கல்பாக்கம் அணு மின் உற்பத்திச் சாலையை விரிவுபடுத்துதல்.

3. தூத்துக்குடியில் இன்னொரு அணு மின் உற்பத்திச் சாலையை நிறுவுதல்.

4. காவிரி கழிமுகப் பகுதியிலும், தமிழ் நாட்டின்கடற் பகுதிகளிலும், எண்ணெய் வளம் குறித்த ஆய்வினை மும்முரப்படுத்துதல்.

5. சென்னை—தூத்துக்குடி ரயில் பாதையை அகலப் பாதையாக மாற்றுதல்.

6. சேதுசமுத்திரத் திட்டத்தைச் செயற்படுத்துதல்.

7. சென்னைப் பெருநகரப் பகுதியில் சுரங்க ரயில், ஏற்பாட்டினை நிறுவுதல்.

8. தூத்துக்குடியில் கப்பல் தளம் ஒன்றை அமைத்தல்.

9. நாட்டுப் பாதுகாப்புத் தொடர்பான தொழிற்சாலைகளை நிறுவுதல்.

வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் நாம் பல திட்டங்களை வகுத்து அவற்றைச் செயற்படுத்தியிருந்தும் கூட வறுமை, வேலையின்மை ஆகிய இரு பெரும் பிரச்சினைகளும் நமக்குப் பெரும் கவலையளிப்பனவாய் உள்ளன. கிராம வேலை வாய்ப்புக்கான விரைவுத் திட்டம், இளைஞர் அணித் திட்டம், தொழில் பழகுவோருக்கான பயிற்சி குறித்த சிறப்புத் திட்டம், "படித்து வேலையற்றிருக்கும் ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம்" உட்பட வேலை வாய்ப்புக் குறித்த சிறப்புத் திட்டங்கள் அனைத்தின் மூலமாக ஏறத்தாழ 40,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். சிறு பாசனத் திட்டம், வீடுகள் கட்டுதல், சாலைகள் அமைத்தல், சாலை மேம்பாடு போன்று ஐந்தாண்டுத் திட்டத்தின் வேலைத் திட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் வேலை வாய்ப்பு குறித்த மும்முரத் திட்டங்களும் கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும். இருந்தபோதிலும், மாநில அரசு மட்டுமே ஒவ்வொருவருக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவது என்பது இயலாத செயலாகும்.

மாநிலத் திட்ட ஆணைக் குழுவைக் கலந்து ஆலோசித்து, பல்வேறு செயற்குழுக்களால் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு பற்றிய மத்திய திட்ட ஆணைக் குழுவுடன் தொடக்க விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் நிதியுதவி பற்றி மேலும் விவாதங்கள் நடைபெற்ற பிறகே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு வரையறுக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இதற்கிடையில், 1974-75-ஆம் ஆண்டுத் திட்டத்தின் அளவு பற்றித் தொடர்ச்சியாக விவாதம் நடைபெற்றுள்ளது. மத்திய திட்ட ஆணைக் குழு கடைசியாகக் காட்டியுள்ள குறிப்புகள் சாதகமானவையாகவுள்ளன. 1974-75-ஆம் ஆண்டுத் திட்ட அளவு சுமார் 150 கோடி ரூபாய் ஆக இருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

இத் தொடர்பில், ஆறாவது நிதி ஆணைக் குழு வழங்கிய தீர்ப்பை நான் குறிப்பிட்டாக வேண்டும். வரம்பு கடந்து செலவு செய்வோருக்கு வெகுமதியளிப்பது, சிக்கனமாக நடந்து கொள்வோரைத் தண்டிப்பது என்று இதுகாறும் இருந்து வந்துள்ள போக்கு மாற்றப்படும் என நாம் நம்பினோம். கூட்டாட்சி நிதி அமைப்பைப் புத்துருவாக்குவதற்கான செயற் குறிப்புகளையும் நாம் அனுப்பியிருந்தோம். மாநிலங்கள் தத்தம் வருமானம் தொடர்பாய் வரி வசூல் செய்ய எடுத்த முயற்சியைக் கருத்திற் கொள்ளாமல், அவற்றின் பற்றாக் குறையை நிறைவு செய்கின்ற பழைய போக்கினையே, ஆறாவது நிதி ஆணைக் குழு, நமது நல்வாய்ப்புக் குறைவு காரணமாகத்

தொடர்ந்து கடைப்பிடித்துள்ளது.

அதன் விளைவாக, மாநிலங்களுக்கிடையே ஒதுக்கீடு செய்யப்படுவதற்காகக் கிடைக்கின்ற மொத்த நிதி வசதியான 11,578 கோடி ரூபாயில் நமக்கு 626 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இத் தொகை மொத்த மத்திய தொகுப்பில் 5.4 சத வீதமேயாகும். அரசியல் சட்டம் காட்டிய நெறியில் நமது கடப்பாட்டினையொட்டி நமது மாநிலத்தில் மது விலக்கைச் செயற்படுத்தி வருகிறோம். அதன் விளைவாக நமக்கு ஏற்படும் இழப்புத் தொகையை ஈடு செய்ய நிதி ஆணைக் குழு முன் வராமற் போனது நமக்குத் தீம்பாய் முடிந்துள்ளது. நிர்வாக அமைப்பு, கல்வி, சுகாதாரப் பணிகள் ஆகியவற்றின் தரத்தினை உயர்த்துவதற்கென வழங்கப்படுகின்ற மானியத்தில் பங்கேதும் நமக்கு வழங்கப்படவில்லை.

ஆறாவது நிதியாணைக் குழு அறிக்கையிற் காணும் வரவேற்கத் தக்க ஒரு நல்ல அம்சம் என்னவெனில், கடன் தவணையை மாற்றியமைப்பது குறித்து ஆணைக்குழு பரிவுரை செய்து, இந்திய அரசு ஏற்றுக் கொண்ட ஏற்பாடாகும். இந்தக் கணக்கில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் நமக்கு ஏறத்தாழ 87 கோடி ரூபாய் செலவு குறையும். இவ்வாறு கடன் தவணையை மாற்றியமைக்க வேண்டுமெனக் கேட்டு வந்த மாநிலங்களில் தமிழ்நாடு முன்னணியில் நின்றதாதலால் இச் செய்தி முக்கியமாக நமக்குப் பெரும் மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளது.

மத்திய அரசு சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளால் மாநில அரசின் மீது ஏற்படும் திட்ட வட்டமான விளைவுகளைக் குறிப்பாகக் கருத்திற்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசு, ஆறாவது நிதியாணைக் குழுவைக் கேட்டுக்கொண்டது. ஆயினும், ஆறாவது நிதியாணைக் குழு, மானியங்களையும் வரி வருவாய்களையும் ஒதுக்கீடு செய்யும் ஏற்பாட்டில், மத்திய அரசு சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளை ஒட்டி மாநில அரசு அலுவலாளர்களின் சம்பளம், படிகளைத் திருத்தியமைப்பது தவிர்க்க முடியாது போவதால் ஏற்படும் விளைவுகளுக்கு ஏற்றதொரு வசதி எதனையும் செய்து தரவில்லை.

ஆறாவது நிதியாணைக் குழு உட்பட, பல ஆணைக் குழுக்களிடம் தேசிய ஊதிய—விலைக் கொள்கையொன்றை உருவாக்க வேண்டிய அவசர அவசியத்தைப் பன்முறை வலியுறுத்தி வந்துள்ளோம். மக்களில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள், ஒரே மாதிரியான கடுமையான பணியை அரசின் கீழ் அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் கீழ் செய்து வருகின்ற நேரத்தில் அவர்களுக்கிடையே ஊதிய அளவில் பெருத்த வேறுபாடுகள் இருந்து வரும் தற்போதைய நிலைமை, நிச்சயமாக மனக்கசப்பையும் மனமுறிவையும் தோற்றுவிக்கும். இப்பொருள் பற்றி, மத்திய அரசு மாநில அரசையும் கலந்தாலோசித்து தேசியக் கொள்கையொன்றை உருவாக்க ஏற்பாடுகளைச் செய்ய முயலும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

நான் என் உரையை முடிப்பதற்கு முன்னர், அடுத்து வரும் ஆண்டுகளில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏராளமான எண்ணிக்கையில் அகதிகள் திரும்பி வருவதைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 57,000 குடும்பங்கள் இம்மாநிலத்திற்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க 60 கோடி ரூபாய் முதல் 70 கோடி ரூபாய் வரை செலவு செய்ய வேண்டியிருக்கும். நம்முடன் சொந்த பந்தமுள்ளவர்கள் பிற நாடுகளிலிருந்து இங்குத் திரும்பி வருவதை வரவேற்கும் அதே நேரத்தில், திரும்பி வருபவர்களுக்கு இடம் பெயரும் இன்னலும் துன்பமும் இருப்பதை நாம் உணர வேண்டும். அவர்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வேலை வாய்ப்புகளும் அளிக்கப்பட வேண்டும். அப்போது தான் தம் மூதாதையர் நாடு, தங்களைக் கைவிட்டுவிடவில்லை என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படும். மேலும், தேசிய மட்டத்தில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வருகிறார்கள். இவர்களுக்குப் புது வாழ்வும் நல வசதியும் அளிப்பதை இந்த நாடு முழுவதற்குமுள்ள பொறுப்பாக மத்திய அரசு தொடர்ந்து ஏற்கும் என்றும், இம் மாநிலம் அவர்களுக்கு வேண்டிய வசதி செய்வதற்கு மத்திய அரசே நிதி உதவி அளிக்கும் என்றும் நான் உளமார நம்புகிறேன்.

தேசிய, அனைத்து நாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றின் காரணமாக இந்திய நாடு மிகக் கடுமையான கால கட்டத்தில் இருக்கின்றது. இந்திய ரிசர்வ் வங்கி, கடன் கொடுப்பதைக் கட்டுப்படுத்திப் பல நிபந்தனைகள் விதித்திருப்பதால், தொழில் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பொருள்களின் விலை ஏறுமுகமாக இருக்கிறதேயன்றி இறங்கு முகமாக இல்லை. எனவே, இக் கொள்கையை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். மத்தியக் கிழக்கில் அண்மையில் மூண்ட போர், அதனையடுத்து நிகழ்ந்த விளைவுகள் இவற்றால் உருவான எண்ணெய் நெருக்கடி, நாட்டு நிலவரத்தை முன்னெப்போதையும் விட மிகக் கடுமையாக்கியுள்ளது. நாட்டின் நிலைத்த மேம்பாடு, சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி இவற்றுக்கான பொருளாதாரக் கொள்கைகளின் மொத்த அமைப்பும், இந்த நிலைமைகளால் நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையொட்டிப் பரிசீலனை செய்யப்பட வேண்டியுள்ளது. முதலமைச்சர்கள் அளவில் தேசிய மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டிய அளவிற்குச் சூழ்நிலை மிகக் கடுமையாகவுள்ளது எனத் தமிழ்நாடு அரசு கருதுகிறது. அதன் மூலம் குறுகிய காலத்திற்கும் நீண்ட காலத்திற்கும் உரிய கொள்கைகளை வகுத்து, நாட்டு முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் இச் சோதனைகளைச் சமாளித்து, அக் கொள்கையினைச் செயற்படுத்தவியலும் என்றும் அரசு கருதுகிறது.

இரு அவைகளிலும் உங்கள் நடவடிக்கைகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். உயர்ந்த கடமையுணர்வு, பொறுப்புணர்ச்சி, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, நல்லெண்ணம் ஆகியவை கமழும் சூழ்நிலையில் இந்த விவாதங்கள் நடத்தப்பெறும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

வணக்கம்.

**[17–1–1974 அன்று தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் மேதகு தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் ஆற்றிய உரை.]**